Registered as a Newspaper

பக்கம் –20 விலை 12/=

# தமிழ் அலை

## Tamilalai

வாரமலர்

அலை – 01 சனிக்கிழமை, 06.09.2003 ஓசை –23

## தமிழின உயிர்க் கொலை நாள்

## செப்டெம்பர் – 05

விசேட இதழ்




தமிழ் பேசும் மக்களின் உணர்வலை

வாரமலர் தமிழ் அலை Tamilalai

பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே,
தொலைநகல் 065.2226110
E-MAIL. tamilalai32@yahoo.com

06.09.2003

## தமிழின உயிர்க் கொலை நாள் தமிழினமே சங்கமமாகுங்கள்.

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கடந்த 90ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மறக்க முடியாத மாதம்.

சிங்கள இன வெறியர்கள் தமிழினத்தைக் கொன்று குருதி மீது குதித்து மகிழ்ந்த மாதம் அது. சத்துருக்கொண்டான் படுகொலை, கிழக்கு பல்கலைக்கழக அகதிமுகாம் படுகொலை எனப்பல தமிழின உயிர்ப்பறிப்புக்களை இந்த செப்டெம்பர் மாதம் சுமர்ந்து நிற்கின்றது.

இதனை விடச்சித்தாண்டி முருகன் ஆலயப் படுகொலை மகிழடித்தீவு படுகொலை, மயிலந்தனைப் படுகொலை, போரதீவுப்படுகொலை, வீரமுனைப் படுகொலை இன்னும் எத்தனை எத்தனையோ படுகொலை கள்.

தமிழினத்தின் உயிர்கள் துடிக்கத் துடிக்க வதைக்கப்பட்டு அழிக்கப்பட்டு குருதி ஆறாகப் பாய்ந்தோடிய நாட்கள் தமிழினத்தின் வரலாற்றில் மறக்க முடியாத நாட்களாகும்.

ஆண்,பெண், சிறுவர்கள், முதியவர்கள், குழந்தைகள் என்ற வயது வித்தியாசங்களோ பால் வேறு பாடுகளோ இன்றி ஒட்டு மொத்தமாக உயிர்ப் பறிப்புக்களால் தமிழினம் துன்பக்கடலில் துடித்துத் துடித்து கண்ணீர் வடித்து நிற்கிறது.

சிங்களப் படைகளின் இந்த நர மாமிச வேள்வியால் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் உறவுகள் பலிக்கடாவாக்க ப்பட்டுள்ளனர்.

இந்த ஆத்மாக்களின் சாந்திக்காக செப்டெம்பர்5ம் நாள் "தமிழின உயிர்க் கொலை" நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அன்றைய நாள் தமிழ் மக்களின் தேசிய துக்க நாளாகும்.

கண்களும், கைகளும் கட்டி சிங்களப் படைகளால் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டவர்களெல்லாம் காணாமல் போனோர் பட்டியலில் நிரம்பி நிற்கின்றனர்.

சிங்கள ஆட்சியாளர்களிடம் தட்டிக் கேட்டால் காணவில்லை என்று கையை விரித்தமையும் கடந்த காலச் சம்பவங்களாகும்.

ஆனால் ஏற்றிச் செல்லப்பட்ட அத்தனை தமிழர்களும் கொலை செய்யப்பட்டும், குற்றுயிராகவும் புதைக்கப்பட்டனர் என்பது மட்டும் உண்மை. அந்தப் புதைகு ழிகள் மட்டும் இன்னும் புலப்பட வில்லை. இப்போது போர் ஓய்வு சர் வதேச சமூகமே தமிழினத்தின் பிரச்சினைகளை கூர்மைப்படுத்திப் பார்க்கின்ற ஒரு காலகட்டம்.

இந்த நாட்களில் பறிபோன பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் உயிர்களின் ஆத்ம சாந்திக்காகவும் சிங்கள இன வெறி ஆட்சியாளர்களின் முகத்திரையை உலக அரங்கில் கிழித்தெறிவதற்காகவும் நாம் அனைவரும் ஒன்று சேருவோம். செப்டெம்பர் 5ம் நாள் தமிழினத்தின் உயிர்க் கொலை நாள் என்பதை அனைவரும் உள்ளத்தில் ஆழப்பதிவுகளாக்கி அதன் அஞ்சலி நினைவு கூறலில் சங்கமமாகுங்கள். அதுவே பறிபோன அந்த ஆத்மாக்களுக்குத் தமிழினம் செய்யும் தலையான கடமையாகும்.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கைதானோர் கிறவல் குழிக்குள் போட்டுத் தீக்கிரை!

கிழக்குப் பல்கலைக்கழக அகதிமுகாம் படுகொலைச் சம்பவம் இடம்பெற்று செப்டெம்பர் 5ம்திகதி வெள்ளிக்கிழமையுடன் 13 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. 1990 செப்டெம்பர் 5ம் திகதி புதன்கிழமை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இயங்கிய அகதிமுகாமைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் 158 பேரை அழைத்துச் சென்றார்கள். இன்றுவரை வீடு திரும்பாத அவர்கள் கைது செய்யப்பட்ட தினத்தன்றே படுகொலை செய்யப்பட்டு நாவலடி கிறவல் குழிகளில் போட்டுத் தீக்கிரையாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்குப் பல்கலைக்கழக அகதிமுகாமில் இருந்து அழைத்துச்



செல்லப்பட்டவர்கள். படுகொலை செய்யப்பட்ட தினத்தை மட்டக்களப்பு மாவ்ட்ட மக்கள் பெருமன்றம் தமிழின உயிர்க் கொலை நாளாகப் பிரகடனப்படுத்தியதுடன் அன்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டப் போர்ச் சூழலில் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட அனைத்துப் பொது மக்களையும் நினைவு கூரவும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

1990ம் ஆண்டு யூன் மாதம் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்ததையடுத்து அப்போது ஆட்சியிலிருந்த ரணசிங்க பிரேமதாச தலைமையிலான அரசாங்கம் கிழக்கு மாகாணத்தில் வரலாறு காணாத படுகொலைகளை அரங்கேற்றியது. ஆங்காங்கே வகை தொகையின்றித் தமிழர்களைக் கைது செய்து டயர்களில் போட்டு எரித்தார்கள். ஆனால் 1990களின் பின் ஒரே நாளில் பெருந் தொகையானோர் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அழிக்கப்பட்ட பல்கலைக்கழகப் படுகொலைச் சம்பவம் செப்டெம்பர் 05ம் திகதி இடம்பெற்றது. இதனாலேயே செப்டெம்பர் 05ம் திகதி தென் தமிழீழத் தமிழர்கள் வாழ்வில் இரத்தக்கறை படிந்த தினமாக உள்ளதால்தான் ஒட்டுமொத்தப் படுகொலைகளையும் நினைவு கூறும் நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

1990 ம் ஆண்டு யூன் 11ம் திகதி இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த பின்னர் அரங்கேற்றப்பட்ட தமிழின உயிர்க்கொலைகளின் பின்னணியில் தமிழ் இனச் சுத்திகரிப்பின் மூலம் கிழக்கில் நன்மையடையக் கூடிய சத்திகளும் ஆயுதபாணிகளாகப் பங்களிப்பை வழங்கியுள்ளனர். இதனாலேயே கிழக்கு மாகாணத்தில் இனவிரிசல் நிலை நீறுபூத்த நெருப்பாக இன்னமும் உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1983 கறுப்பு யூலையைத் தொடர்ந்து அரங்கேற்றப்பட்ட தமிழர் படுகொலைகள் தொடர்பாக உரிய தகவல்கள் வெளிக்கொணராத காரணத்தினால் தான் பட்டியல் தொடர்ந்தன. எனினும் 1995களைத் தொடர்ந்து தமிழர் பலம்பெற்ற காரணத்தினாலும், மனித உரிமை ஆர்வலர்களின் விழிப்புணர்வு காரணமாகவும் படுகொலைகள் மிகவும் குறைந்தே உள்ளன.

எது எப்படியிருந்தாலும் போர்ச் சூழலில் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களை நினைவு கூரும் அதேவேளை ஏற்கனவே இடம்பெற்ற படுகொலைகளை நினைவில் நிலை நிறுத்துவது மிகமிக அவசியமாகும்.

இந்த வகையில் தமிழின உயிர்க் கொலை நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள செப்டெம்பர் 05ம் திகதி 1990ம் ஆண்டு இடம் பெற்ற வந்தாறுமூலைச் சம்பவத்தை நினைவு கூருவது பொருத்தமானது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் 1990 யூன் மாதம் வன்செயல்கள் மீண்டும் ஆரம்பித்ததையடுத்து சிறிலங்கா இராணுவத்தினர், ஊர்காவல் படையினர் ஒட்டுப் படையினர் அனுசரணையுடன் கிராமம் கிராமமாக மேற்கொண்ட அடக்கு முறைகளின் காரணமாக இடம் பெயர்ந்தார்கள். சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அபயம் தேடி கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்தனர்.

அந்த அகதி முகாம் கூட தமக்குப் பாதுகாப்பை ஏற்படுத்தாது என்பதை அறியாதவர்களாக அங்கு வாழ்ந்து வந்த அகதிகள் செப்டெம்பர் 05ம் திகதி விடிந்ததும்தான் தமிழ் மக்களின் பாதுகாப்பற்ற தன்மையை உணர்ந்தார்கள்.

1990 செப்டெம்பர் 5ம் திகதி புதன்கிழமை அதிகாலை 6.00 மணிக்குக் கொம்மாதுறைப் படைமுகாமைச் சேர்ந்த படையினர் அயலிலுள்ள முகாம்களைச் சேர்ந்த படையினர் துணையுடன் கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமைச் சுற்றிவளைத்தார்கள். இ.போ. ச.வுக்குச்

**ஜெ.நடேசன்**

சொந்தமான பஸ்வண்டிகளுடன் வந்திருந்த படையினர் வெள்ளை வானில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கி மூலம் மூன்று வரிசைகளில் (12.-25 வயது, 26-40 வயது, 40 வயதிற்கு மேற்பட்டவர்கள்) விளையாட்டு மைதானத்திற்கு வருமாறு அறிவிக்கப்பட்டது.

அப்போது தான் அங்கிருந்த அகதிகள் அகதி முகாமுக்குள்ளும் பாதுகாப்பற்ற தன்மையை உணர்ந்தார்கள்.

''மூன்று வரிசைகளாக வயது அடிப்படையில் பிரிக்கப்பட்டு வந்தவர்கள். ஒரிடத்தை நோக்கிக் கடந்து செல்லுமாறு உத்தரவிடப்பட்டது. அங்கே இராணுவச் சீருடை தரித்த ஐவர் முகமூடி அணிந்தவாறு இருந்தனர். அவர்களுக்குப் பின்னால் ஏழு முஸ்லீம்கள் நின்றார்கள்." அவர்களில் ஒரிருவரை எனக்குத் தெரியும் முகமூடிகளால் சைகைகாட்டப்படுபவர்கள் தனியாக ஓரிடத்தில் தடுத்து வைக்கப்பட ஏனையவர் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள் என்று தனது அனுபவத்தை விபரித்தார் எஸ்.ஆறுமுகம் (51வயது) எனும் விவசாயி.

அப்போது முகாமைப் பரிபாலித்து வந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கணிப்பின் படி 158 பேர் முகாமிலிருந்து அழைத்துச் செல்லப் பட்டார்கள். வாழைச்சேனைப் பக்கமாகக் கொண்டு செல்லப்பட்ட தாகவும் நாவலடி கிறவல் குழியில் போட்டு எரிக்கப்பட்டதாகவும் நம்பப்படுகிறது.

ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் படி வந்தாறுமூலை பல்கலைக்கழக சுற்றிவளைப்பில் கப்டன்களான முனாஸ், பாலித, குணரட்ன மேஜர்களான மஜீத், மோனன் ஆகியோர் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

சம்பவம் இடம் பெற்று மூன்றுதினங்களின் பின்னர் கிழக்குப் பல்கலைக்கழக அகதிமுகாமிற்குச் சென்ற இராணுவத் தளபதி ஜெரிசில்வா குற்றவாளிகளாகக் காணப்பட்ட 158 பேர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்.

அப்போது பிரதிப்படைத்துறை அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரத்தினாவின் செயலாளராக இருந்த ஏ.டபிள்யூ பெர்ணான்டோ 32 பேரே கைது செய்யப்பட்டதாகவும் 24 மணிநேரத்தில் விடுதலை செய்யப்பட்டதாகவும் மட்டக்களப்பு சமாதானக் குழுவுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

ஆனால் இன்றுவரை அந்த 32 பேர் கூட வீடு திரும்பவில்லை. செப்டெம்பர் 23ம் திகதி மீண்டும் பல்கலைக்கழக அகதி முகாமைச் சுற்றிவளைத்த படையினர் 16 பேரை அழைத்துச் சென்றார்கள். அவர்களும். அடிச்சுவடு தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழர் தேசத்தில் ஆயுதப் போராட்டம் துளிர் விட்ட வேளை படுகொலைகளின் மூலம் இனச் சுத்திகரிப்பு மற்றும் மக்களை அச்ச நிலையில், பயந்த நிலையில் வைத்திருப்பதன் மூலம் விடுதலைப் போராட்டத்திலிருந்து அந்நியப் படுத்தலாமெனச் சிங்கள தேசம் கனவு கண்டது. ஆனால் மாறாக தமிழ் மக்கள் மேலும் பலம்பெற வழி வகுத்தது மட்டுமல்ல இன்று தமிழ் மக்கள் மீது படுகொலைகளைத் திணிக்க முடியாத அளவுக்கு நிலமை மாறிவிட்டது.

எனவே தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக யுத்தச் சூழலில் யுத்தத்தின் பேரில் கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களை நினைவு கூருவது காலத்தின் தேவையாகும்.

தமிழின உயிர்க்கொலை நாளாகப் பிரகடனப்படுத்தி சகல படுகொலைகளிலும் மரணித்த பொதுமக்களை ஏககாலத்தில் நினைவு கூருவது பொருத்தமானதே..


மட்டக்களப்பு மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவும் பலியான பொது மக்கள் தொடர்பாகவும் உரிய விபரங்களை ஆவணப்படுத்தி வைக்க வேண்டியது வரலாற்றுத் தேவையாகும்.

இதன் மூலமே தமிழ் மக்கள் விடுதலைப்போராட்டத்தின் போது தியாகங்களுடன் கூடிய இழப்புக்களையும் எதிர்நோக்கினார்கள் என்பதை உணர்த்த முடியும்.

# சட்டவல்லுனர்கள் தயாரித்துள்ள பதில்வரைபை

# அரசு நிராகரித்தால் பாரதூரமான விளைவு ஏற்படும்

**தமிழீழ விடுதலைப்புலிகளின் கிழக்குப் பிராந்திய மூத்ததளபதி கேணல் கருணா அம்மான் லண்டன் ஐ.பி.சி வானொலிக்கு வழங்கிய பேட்டி**



**கேள்வி: ஸ்ரீலங்கா அரசு கையளித்த இடைக்கால நிர்வாக சபைக்கான பதில்வரைபைக் கடந்த சிலதினங்களாகச் சர்வதேச தமிழ் சட்டவல்லுனர்களுடன் இணைந்து உள்ளகச் சந்திப்பு மூலம் தயாரித்திருக்கிறீர்கள், உள்ளகச் சந்திப்புப் பற்றியும் திட்டவரைபு பற்றியும் கூறுங்கள்..**

பதில்: பதில் வரைபு என்று கூறுவதைவிட தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும்வரைபாகக் கருதுகிறேன். போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்தபின்னர் கடந்த ஆறுகட்டப் பேச்சுவார்த்தைகள் நடந்தபோது தமிழ் மக்கள் பலத்த எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருந்தனர். நம்பிக்கையுடனும் தமது அபிலாசைகள் தீர்க்கப்படும் என்ற எண்ணத்துடனும் வாழ்ந்துகொண்டிருந்தார்கள், ஆனால் கிடைத்தது ஏமாற்றமே. தளம்பல் சூழ்நிலையில் யுத்தநிறுத்தம் தொடருமா? மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப் படுமா? என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான ஆராய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மக்கள் மத்தியில் மீண்டும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. சிங்கள அரசு தான் தலைவரிடம் கையளிக்கப்பட்டு திருத்தங்களை வடிவங்களை மாற்றியமைத்தபின்னர் ஸ்ரீலங்கா அரசிடம் கையளிக்கப்படும். அப்போது இதன் உள்ளடக்கங்களை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

**கேள்வி: தற்போது தயாரிக்கப்பட்டுள்ள வரைபைத் தேசிய தலைவர் பிரபாகரன் அவர்களுக்குச் சமர்ப்பித்து அதன்பின் ஸ்ரீலங்கா அரசிடம் கையளிக்கப்படும் போது அதனை அவர்கள் ஏற்பார்கள் என்று கருதுகிறீர்களா?**

பதில்: முழுமையாக அதனை ஏற்றுக்கொள்வது அல்லது ஏற்றுக் கொள்ளாமல் விடுவது அவர்களைப் பொறுத்தது. முழுமையாக ஏற்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. அவர்கள் ஏற்கனவே இரண்டு வரைபுகளைத் தந்திருந்தார்கள் . ஆரம்பத்தில் தந்த திட்டம் மிகவும் வேடிக்கையானது. எதுவித அதிகாரங்களும் அற்ற நிலையில் இருந்தது. பின்னர் சிறிய அதிகாரங்கள் உள்ளதாகத் தந்தார்கள். எமது வரைபை ஏற்பார்களா மாட்டார்களா என எதிர்பார்ப்பதை விட சர்வதேச உலகம் ஏற்பதற்கான வரைபுகள் நிறைய இருக்கிறது. ஏனெனில் சர்வதேச நியமங்களைக் கருத்தில் கொண்டு அவர்கள்

**எமது வரைபை ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பது கேள்விக்குறியே சிங்களத்தலைவர்கள் தமிழர்களுக்கு எதுவும் கொடுக்கக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளார்களே தவிர பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பது அவர்கள் நோக்கமல்ல.**

கொடுத்த வரைபுக்குப் பதில்வரைபாக எமது வரைபை எதிர்பார்த்தாலும் நாங்கள் தமிழ் மக்களுக்கான இடைக்கால நிர்வாகம் எப்படி இருக்க வேண்டும், தமிழ் மக்களின் அபிலாசைகள் எப்படியாகப் பூர்த்திசெய்யப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு தயாரித்திருக்கிறோம். தமிழ் மக்களின் எதிர்ப்பார்ப்பை உள்ளடக்கிய வரைபாக நாங்கள் இதைக் கருதுகிறோம். சிறந்தமுறையில் ஆய்வு செய்ய ப்பட்டு வரையப்பட்டிருக்கிறது. உலகில் உள்ள எமது தாயகத்தைச்சேர்ந்த புத்திஜீவிகள், சட்டவல்லுனர்கள் ஒன்றுகூடி இந்தவரைபைத் தயாரித்திருப்பது சிறப்பம்சமாகும். மிகவும் பலம்வாய்ந்ததாகச் சர்வதேச சட்டநியமங்களுக்கு அமைவாகத் தயாரித்துள்ள எமது வரைபை எழுந்தமானத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் தூக்கி வீசமுடியாது. ஏனெனில் இதனை வரைந்தவர்கள் யார் யார் என்று பார்க்கவேண்டும். அவ்வாறு தூக்கி எறிவார்களாக இருந்தால் அதாவது சர்வதேச சமூகம் உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருக்கும் வேளையில் எழுந்தமானத்தில் தூக்கி வீசுவார்களாக இருந்தால் சர்வதேச உலகம் ஸ்ரீலங்கா அரசின் இனவாதப்போக்கைப் புரிந்து கொள்ளும் நிலை ஏற்படும். நாம் மூன்று நோக்கங்களை உள்ளடக்கி இந்த வரைபைத் தயாரித்துள்ளோம். தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இருக்க வேண்டும். சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் இருக்க வேண்டும். சிங்கள அரசாங்கம்ஏற்கலாம்,ஏற்றுக்கொள்ளாமல் விடலாம். இது அவர்களைப்பொறுத்தது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட வரைபு ஏற்கக்கூடிய வகையில் இது தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை இறுதித் தீர்வாகக் கருதமுடியாது. இடைக்கால திட்ட நிர்வாகமாகவே கருதமுடியும். பாங்கொக் பேச்சுவார்த்தையை அடுத்து சிரான் அமைக்கப்பட்டது. வடக்குகிழக்கில் அழிந்த பகுதிகளையும் சிங்களப்படைகளால் சிதைக்கப்பட்ட பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கான நடவடிக்கையாக அமைக்கப்பட்டது. ஆனால் சிரான் தோல்வி கண்டநிலையில் உள்ளது. இதனிடையே யப்பானில் நடைபெற்ற கொடைவழங்கும் நாடுகள் கூட்டத்தில் கலந்துகொள்ள எமக்கு விடுத்த அழைப்பை நிராகரித்தோம். மறுத்த காரணம் எமக்கென்று ஒரு நிர்வாக அதிகாரம் இல்லாமல் வரப்போகும் நிதியை யார் செலவிடுவது என்ற கேள்வி இருக்கிறது.

சிங்கள அரசு தனது படையைக் கட்டிஎழுப்ப அந்த நிதியைப் பயன்படுத்தலாம். அல்லது தென்பகுதியை கட்டிஎழுப்பப் பயன்படுத்தலாம். இதைத்தட்டிக்கேட்க செலவிட முற்றுமுழுதான அதிகாரம் தேவை. எனவே அந்த அதிகாரத்தைத் தருவதாக உறுதிதந்தால் டோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ள முடியும் என எமது தலைவர் அறிவித்திருந்தார். ஆகவே அதனைத்தராததால் நாங்களும் கலந்து கொள்ளவில்லை. தமிழ் மக்களுக்கு ஆரம்பத்தில் ஒரு அச்சம் இருந்தது. மிகவும் சக்திவாய்ந்த டோக்கியோ கூட்டத்தில் நிறைய உலகநாடுகள் பங்குபற்றும். புலிகளுக்கு அங்கீகாரம் கிடைக்கும்என்று எதிர்பார்த்தார்கள். இது தவறானதாகும். நாம் உரிமைப்போராட்டத்தை நடாத்துகிறோம். எமக்கான அதிகாரங்கள் உரிமைகள் சரியான நேரத்தில் வரும்போதுதான் நாம் எதனையும் ஏற்றுக்கொள்வோம். அந்த எதிர்பார்ப்பின் விளைவாகத்தான் இப்போது இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேசப்படுகிறது. நாம் தயாரித்த வரைபை அரசாங்கம் நிராகரித்தால் பாரதூரமாகவே கருதப்படும். களத்தில்நின்ற போராளிகள் தயாரித்திருந்தால் அதனைத் தூக்கி எறியலாம். அளவுக்கு அதிகமாக கேட்கிறார்கள் என்று. முன்னாள் ஸ்ரீலங்கா சட்டமா அதிபர் சிவாபசுபதி, உலக பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் சட்டவல்லுனர்கள் குறிப்பாகச் சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் கலாநிதி சொர்ணராசா, மலேசியா தேசிய பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் கற்பிக்கும் கலாநிதி இராமசாமி, அவுஸ்திரேலியா சட்டவல்லுனர் போல் டொமினிக் எமது இயக்க பிரதான சட்ட ஆலோசகர் வி.உருத்திகுமார், என்று பலதரப்பட்ட வல்லுனர்கள் தயாரித்த திட்டத்தை எழுந்தமானத்தில் தூக்கி எறிவார்களாக இருந்தால் சர்வதேசம் மீண்டும் ஒருமுறை ஸ்ரீலங்கா அரசின் இனவாதப்போக்கைப் புரிந்து கொள்ளும்.

**கேள்வி: பல சட்டவல்லுனர்களை உள்ளடக்கி வரைபைத் தயாரித்திருப்பது அரசிற்கு அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாக கூறப்படுகிறது. இது பற்றியும் அறிஞர்களை ஒன்றிணைத்தது எந்தள விற்கு வெற்றியைத் தந்திருக்கிறது என்பது பற்றியும் கூறுங்கள்?**

பதில்: இது உண்மையில் ஸ்ரீலங்கா



அரசிற்கு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கும். மிகவும் உறுதியான நிலையில் தயாரிக்கப்பட்ட வரைபை விளையாட்டாக எடுக்கமுடியாது. பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அவர்களின் ஆசிரியரான கலாநிதி சொர்ணராஜ் இக்குழுவில் இடம் பெற்றிருக்கிறார். இது முக்கியமான சிறப்பான விடயம். எமக்கு இது புதினமான விடயமல்ல. உலக புத்திஜீவிகளும் தமிழர்களும் எமது போராட்டத்திற்கு முழுமையான பங்களிப்பை வழங்கிவருகிறார்கள். தற்போது வெளிப்படையாக வந்து உதவியிருக்கிறார்கள். காலகாலமாக வெளிநாட்டில் புலம்பெயர்ந்த தமிழர்கள் எமது போராட்டத்தை வலுப்படுத்தி வருவதுடன் தலைவரின் கரங்களைப் பலப்படுத்திவருகிறார்கள். இப்போது தாயகத்திற்கு வந்து தலைவரைச் சந்தித்தவர்கள் நிறைய புதுமையான திட்டங்களை வழங்கிவருகிறார்கள்.


**கேள்வி: முக்கியமான சட்ட வல்லுனர்களால் தயாரிக்கப்பட்ட பதில்வரைபை ஸ்ரீலங்கா அரசு ஏற்பதற்கு முன்னர் ஏனைய கட்சிகள் எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளுமா? ஏற்கனவே அரசாங்கம் வழங்கிய வரைபிற்கே பல்வேறு எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த எதிர்ப்புக்கு மத்தியில் தற்போது தயாரிக்கப்பட்ட வரைபை அரசு ஏற்குமா?**

பதில்: எமது வரைபை ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பது கேள்விக் குறியே சிங்களத்தலைவர்கள் தமிழர்களுக்கு எதுவும் கொடுக்கக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளார்களே தவிர பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பது அவர்கள் நோக்கமல்ல. இந்த நிலையில் தற்போதைய அரசினால் முன்வைக்கப்படும் அனைத்து விடயங்களையும் எதிர்க்கட்சிகள் எதிர்த்து வருகின்றன. அதுமட்டுமல்ல . இனத்துவேசத்தை வளர்த்து வருகிறார்கள். எம்மைப் பொறுத்தவரை எமது போராட்டம் நியாயபூர்வமானது என்பதைச் சரியான நோக்கத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம் என்பதை உலகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டிய தேவைப்பாடு இருக்கிறது. அதற்கான ஒரு கட்டமாக எமது நகர்வு இடம்பெற்றுவருகிறது. கடந்த ஒன்றரை வருடத்திற்குள் நாம் பலவிதமாக எமது உரிமைகளை் கேட்டிருக்கிறோம் எதைக்கேட்டாலும் தருவதற்கு அவர்கள் தயாராக இல்லை வடக்கு கிழக்கை கட்டிஎழுப்ப வேண்டும்என்ற முதலாவது நோக்கில் சிரான் அமைக்கப்பட்டது. அதனைத் தூக்கி எறிந்துவிட்டார்கள். இப்போது இடைக்கால நிர்வாகத்தை கேட்கிறோம். இதையும் தூக்கிஎறிந்தால் வருகின்ற விளைவு என்பது கடினமாக இருக்கலாம் . அதன் அழுத்தத்தை உணர்ந்து கொள்வார்கள் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. அதில் தமிழ் மக்களுக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. நாம் பலமாக இருக்கிறோம். பலமாக இருந்துகொண்டே பேச்சுவார்த்தை நடாத்துகிறோம். இவ்விடத்தில் ஒன்றைக்கூறிக்கொள்ள விரும்புகிறேன். சிங்கள மக்கள் இதில் தெளிவாகவும் கவனமாகவும் இருக்க வேண்டும். ஏனெனில் இந்த வரைபு தூக்கி எறியப்பட்டு மீண்டும் யுத்தம் வந்தால் அதன் கொடுமைகளைத் தாக்கங்களைச் சிங்கள மக்களே நேரடியாக அனுபவிக்க வேண்டிவரும். எனவே தாக்கத்திலிருந்து விடுபட வேண்டுமாயின் சிங்கள மக்கள் விழிப்பாக இருந்து சிங்கள 'அரசியல் தலைவர்களுக்கு அழுத்தங்களைக் கொடுத்து தீர்வைஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்பதை சிங்களமக்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**கேள்வி: நீங்கள் அரசியல்தலைவர்களுக்கு அழுத்தங்களைக் கொடுக்குமாறு கோருகிறீர்கள். ஆனால் அரசியல் தலைவர்கள் குழப்பமான அறிக்கைகளை விட்டு வருகிறார்கள். அமைச்சர் ரவூப் ஹக்கீம் இடைக்கால நிர்வாக சபை வழங்கப்பட்டால் புலிகளிடம் சட்டமும் ஒழுங்கும் போய்விடும். இது சிக்கல்களை உருவாக்கும் என்று அவரது கட்சி உட்பட சில கட்சிகள் திட்டவரைபில் அதிகாரம் வழங்கக்கூடாது இடைக்கால நிர்வாகம் வழங்கக்கூடாது என்று கோருகின்றனவே?**

(தொடர்ச்சி 17ம் பக்...)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களப் படைகளாலும், ஊர்காவல் படைகளாலும் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் நினைவாக செப்டெம்பர் 05ம் திகதியைத் துக்கதினமாக மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றம் பிரகடனம் செய்துள்ளது. மட்டக்களப்பு மக்களின் மனங்களில் மாறாத ரணமாக இருக்கும் இப்படுகொலைகளில் ஒன்றான சத்துருக்கொண்டான் படுகொலை பற்றி இங்கே விபரிக்கப்படுகிறது.**




அன்பையும் காருண்யத்தைப் போதிக்கும் புத்தமதத்தை அரசமதமாகக் கொண்டிருக்கும் இந்நாட்டில் தான் அதுவும் அரசபடைகளாலும், அவர்களுடன் இணைந்து செயற்பட்ட ஊர்காவல் படைகளாலும் தான் தமிழ் மக்களுக்கு எதிராக இத்தனை கொடுரங்களும் நடந்தன. ஈழத்தமிழர்கள் மீது இனக்கலவரங்கள் என்ற பெயரில் அரச பயங்கரவாதிகள் நடத்திய படுகொலைகள் ஏராளம். அவைகள் எல்லாவற்றையும் விட 1990.செப்டெம்பர் 9ம் திகதி மட்டக்களப்பு நகரை அடுத்துள்ள சத்துருக்கொண்டான் இராணுவமுகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்ட 186தமிழ் மக்களை ஈவிரக்கமற்ற முறையில் சிங்கள அரக்கர்களும், அவர்களின் கைக்கூலிகளும் படுகொலை செய்த கோரநிகழ்வு


# இன அழிப்புப் படுகொலையில் சத்துருக்கொண்டான் படுகொலை!

## மாறாத ரணம்

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் தமிழினத்தால் மறக்கமுடியாது. 1990ம் ஆண்டு ஜூன் 10ம் திகதிக்குப்பின் தமிழர்களைப் படுகொலை செய்வதற்கென உருவாக்கப்பட்ட குழுக்களில் ஒன்று கொளக்கொட்டியா. பிரமதாஸ அரசாங்கத்தால் தமிழ் மக்களைப் படுகொலை செய்வதற்கென்றே பயிற்றுவிக்கப்பட்ட இக்குழு மட்டக்களப்புக்கு அனுப்பிவைக்கப்பட்டபோது அக்குழுவில் முஸ்லீம் ஊர்காவல் படையும், இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட சில தேசவிரோதிகளும் இணைந்து கொண்டனர். இந்த இன அழிப்புப் படுகொலையில் 09-09-1990ல் நடாத்தப்பட்ட மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் படுகொலை மிகக் கொடூரமானது. இப்படுகொலை சத்துருக்கொண்டான், கொக்குவில், பனிச்சையடி, பிள்ளை யாரடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அப்பாவித் தமிழ் மக்கள் 186 பேரை ஒன்றாகக் குவித்து அடையாளம் தெரியாமல் கொடூரமாகக் கொல்லப்பட்ட மிக மோசமான படுகொலையாகும். இப்படுகொலை நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். தமிழ் மக்களை வெட்டி கொலை செய்யும் இக்குழு 17-08-1990 அன்று கப்டன் திஸ்ஸ வர்ணகுலசூரிய என்பவன் தலைமையில் வந்தனர். அன்றிலிருந்து அவர்களின் அட்டூழியங்கள் ஆரம்பமாகின. மாரியம்மன் கோவில் சந்தியில் வைத்து நான்கு தமிழ் மக்களை அடித்துக்கொலை செய்துவிட்டு டயர் போட்டு எரித்தனர்.08-09-1990 அன்று சத்துருக்கொண்டானில் தென்னந்தோட்டத்தில் வைத்து இரு பொதுமக்களை அடித்து குற்றுயிருடன் தீயிட்டுக் கொழூத்தினர். அச்சமும் பீதியும் கலக்கமும் அடைந்த மக்களில் பலர் வேறு இடங்களுக்கு அபயம் தேடி ஓடினர். ஊரைவிட்டு எங்கு போவது என்ற எண்ணத்தில் தங்கள் வீடுகளில் அச்சத்துடன் இருந்த மக்கள் மீதுதான் இந்தக் கொடூரம் நடைபெற்றது. 09-09-1990 அன்று பி.ப 5.00 மணியளவில் கப்டன் திஸ்ஸ வர்ணகுலசூரியா தலைமையில் சீருடையுடன் சத்துருக்கொண்டான், பனிச்சையடி, கொக்குவில், பிள்ளையாரடி ஆகிய கிராமங்களைச் சுற்றிவளைத்தனர். இராணுவ முகாமில் கூட்டம் ஒன்று [illegible] அனைவரும் வரவேண்டும் என நயவஞ்சகமாக அப்பாவி மக்களை முகாமுக்குக் கொண்டு சென்றனர். இராணுவத்தினர் வருகின்றனர் என்பதை அறிந்த சிலர் காடுகளுக்குள் தப்பிச் சென்றனர். ஏனையவர்கள் இராணுவத்தினரின் சதிவலைக்குள் சிக்கிக்கொண்டனர். சுற்றிவளைப்புக்குள் அகப்பட்டுக்கொண்டவர்கள் அனைவரும் இரவு 7.00 மணியளவில் சத்துருக்கொண்டான் முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். அந்த முகமில் உள்ள கட்டிடம் ஒன்றில் அனைவரையும் ஒன்றாக அடைத்தனர். இருள்சூழ்ந்த கட்டிடத்தில் அடைக்கப்பட்ட பெண்கள், ஆண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் அனைவரும் நேரம் செல்லச் செல்ல ஆபத்தை உணர்ந்தவர்களாக விம்மலும் அழுகையும் ஓங்கிஒலித்தன. சற்றுநேரத்தில் அடைக்கப்பட்ட கதவு திறந்தது. கத்தி ,வாள், அலவாங்கு, சகிதம் அந்தச் சிங்கள அரக்கர்களும் முஸ்லீம் ஊர்க்காவல்படைகளும் மதுவெறியுடனும், கொலைவெறியுடன் நின்றனர். இவர்களில் மூவரை வெளியில் இழுத்துச் சென்றனர். முகாமின் பின்பக்கம் கொண்டுசென்று கத்தியால் குத்தியும் வெட்டியும் கொன்றனர். அங்கு ஏற்கனவே தோண்டப்பட்டிருந்த பாரிய குழியில் உடல்கள் வீசப்பட்டன.

அழுகை ஒலிகள் அவலமாக ஒலித்தன. சிங்கள , முஸ்லீம் ஊர்க்காவல் படை அரக்கர்கள் எக்காளமிட்டுக் கொண்டிருந்தனர்.

குழந்தைகயைக் கால்களால் மிதித்தும், கழுத்தைத் திருகியும் கொன்றனர். முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டவர்களில் வாய்பேசமுடியாத, எழுந்து நடக்கமுடியாத 4 பிள்ளைகளும் இருந்தார்கள். அவர்களைக்கூட புத்தனின் புத்திரர்கள் விட்டுவைக்கவில்லை. இளம்பெண்களை இழுத்துவந்து தங்களது காமப்பசியைத் தீர்த்த அந்தக் காடையர்கள் அவர்களின் அங்கங்களை வெட்டி வேடிக்கை பார்த்தனர். படுகுழியில் அவர்களின் உடல்களும் வீசப்பட்டன.



இச்சம்பவத்தில் 4மாதக் குழந்தை என்.வேணுராஜ், 3மாதக்குழந்தை எஸ்.பிரியா, ஆகியோரையும் இராணுவத்தினர் இரு துண்டுகளாக வெட்டி வீசினர். இத்தனை கொடூரங்களையும் வெட்டுக் காயங்களுடன் சடலங்களுடன் சடலமாக கிடந்த கந்தசாமி .கிருஷணகுமார் என்ற இளைஞர் பார்த்துக்கொண்டு சத்தம் எதுவும் இன்றி கிடந்தார். பனிச்சையடியைச்சேர்ந்த சித்திராதேவி (22வயது) என்ற இளம்பெண் மூன்று குழந்தைகளுடன் கொண்டுவரப்பட்டிருந்தார். தர்சினி (4வயது) சிவதர்சன் (6வயது) ஆகிய இருபிள்ளைகளுடன் வேணுதாஸ் என்ற மூன்றுமாதக் கைக்குழந்தையையும் அப்பெண் வைத்திருந்தாள். தாயின் சேலையைப்பிடித்துக்கொண்டு கதறி அழுதன. அந்தப் பிஞ்சுக்குழந்தைகள். தாயின் முன்னிலையில்

**- இரா.துரைரத்தினம் -**


இரு பிள்ளைகளையும் வாளால் வெட்டி வீசிவிட்டு கைக்குழந்தையையும் பறித்தெடுத்து இரு துண்டுகளாக வெட்டி வீசியபின் அப்பெண்ணை இழுத்துச்சென்று கற்பழித்தவர்கள் பின்னர் அப்பெண்ணையும் வெட்டிக்கொன்றதாகக் கிருஷ்ணகுமார் என்ற இளைஞர் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கும் போது தெரிவித்தார்.

பின் சிறிது நேரம் ஓய்வெடுத்து பின் எஞ்சியிருந்த இளம் யுவதிகளை வெளியே எடுத்துஅவர்களை நிர்வாணமாக்கிக் காட்டு மிராண்டித்தனமாக அவர்களின் காமப் பசியைத் தீர்த்தனர். இவர்களை அரைகுறை உயிருடன் குழியிலே கொண்டுபோய் போட்டனர். இப்படி அனைவரும் ஒரே குழியில் ஒன்றாகக் குவித்தனர். அந்த மடுநிறைந்தது. குழியில் போடப்பட்ட சடலங்கள் மீது மண்ணெண்ணெய் ஊற்றினர். மேலும் எண்ணெய்எடுத்துவர சிலர் சென்றனர். கொலைவெறியாட்டம் நடத்திய சிலர் மதுபோதையில் கிடந்தனர். இந்த வேளையில்தான் காயங்களுடன் கிடந்த கிருஷணகுமார் அங்கிருந்து தவழ்ந்து தவழ்ந்து வெளியே வந்து முகாமை விட்டு வீதிக்கு வந்து சேர்ந்தார். பின்னர் அயலில் உள்ள ஒரு வீட்டிற்கு வந்துசேர்ந்தார். சுற்றிவளைப்பிற்குள் அகப்பாது காட்டிற்குள் தப்பி சென்றவர்கள் முகாமிற்குக் கொண்டு சென்றவர்கள் வீடுதிரும்பாததால் அச்சமும், பீதியும் அடைந்தனர். முகாமிற்குள் அழுகுரல்களும், மரணஓலங்களும் கேட்டதைத் தாங்கள் கேட்டதாக ஆணைக்குழுவில் சாட்சியமளித்த சிவக்கொழுந்து என்ற ஆசிரியர் தெரிவித்தார். நள்ளிரவுக்குப்பின் முகாமிற்குப் பின்பக்கம் தீச்சுவாலை எழுந்ததைத் தான் கண்டதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். காயமடைந்த கிருஷ்ணகுமார் என்ற இளைஞர் மட்டக்களப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டதைக் கேள்வியுற்ற இராணுவத்தினர் அவரை அங்கு தேடிச்சென்றனர். இந்த ஆபத்தை உணர்ந்த வணபிதா ஒருவரும், மட்டக்களப்பு சமாதானக்குழு பிரதிநிதிகளும் கிருஷ்ணகுமாரை மறைவிடம் ஒன்றில் வைத்துச் சிகிச்சை அளித்தனர்.

கிருஷ்ணகுமாரிடமிருந்து நடந்த சம்பவங்களைக் கேட்டு ஒலிப்பதிவு செய்து கொண்டனர் மட்டக்களப்பு சமாதானக்குழுவினர். இது தொடர்பாக அன்று மட்டக்களப்பு சமாதானக்குழுவின் தலைவராக இருந்த அருணகிரிநாதன் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் 233வது படைப்பிரிவுக் கட்டளை அதிகாரியிடம் முறையிட்டனர். ஆனாலும் சம்பவம் நடைபெற்ற சத்துருக்கொண்டான் முகாமுக்கு உடனடியாகச் சமாதானக்குழுவினரை அழைத்துச் செல்ல மறுத்த இராணுவத்தினர் படுகொலை நடந்த தடயங்கள் சகலவற்றையும் அழித்துவிட்டு இரு தினங்களுக்குப் பின்பே முகாமுக்கு அவர்களைக் கூட்டிச்சென்றனர். அப்படி ஒரு படுகொலை சம்பவம் நடைபெறவில்லை என இராணுவத்தினர் மறுத்துவிட்டனர். பின்னர் இப்படு கொலைகளை விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட பாலகிட்னர் தலைமையிலான ஆணைக்குழு முன்னிலையிலும் கப்டன் திஸ்ஸ வர்ணகுலசூரிய என்பவன் சாட்சியமளிக்கையில் இந்தப் படுகொலைகளை தாங்கள் செய்யவில்லை என்றும் அந்த மக்களுக்கு என்ன நடந்தது எனத் தெரியாது என்றும் அப்பட்டமான பொய்யையும் சொன்னான்.

இப்படுகொலை சம்பவத்தில் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் 5பேரும், 10வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகள் 42பேரும், பெண்கள் 85பேரும், 60வயதிற்கு மேற்பட்ட வயோதிபர்கள் 28பேருமாக மொத்தம் 184பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இத்தனை கொடூரங்களைச் சந்தித்த அக்கிராமங்கள் இன்றும் அந்த சோகங்களைச் சுமந்துகொண்டு உள்ளன. குடும்பத்தில் சோபை இழந்த நிலையிலேயே அனைவருமே படு கொலை செய்யப்பட்ட நிலையில் அந்த வீடுகள் அழிந்த நிலையில் சிங்கள அரக்கர்களின் ஈவிரக்கமற்ற கொடூரங்களுக்குக் சாட்சியாக உள்ளன.



# சித்தாண்டியூரில் தமிழ் உறவுகளைக் கொன்று கொண்டாடிய சிங்களப் படை!

ஈழப் போராட்ட வரலாற்றில் 90ஆம் ஆண்டு மிகப்பயங்கரமான ஒரு காலகட்டம். தென் தமிழீழ மண்ணில் தமிழினத்தின் குருதி பாய்ந்தோடிய அந்தப்பரிதாப நாட்கள். எண்ணிப்பார்த்தால் வெறும் வார்த்தைகளை வரிவடிவங்களாக்க முடியாது.சி றிலங்கா தேசத்தின் சிங்களக் கூலிப்படைகள் ஊர்காவல் படைகள் ஏன்



தேசவிரோதக்கும்பல்கள் எத்தனை வகைப்பட்டாளங்கள்.. எம்மினத்தின் தலைகளைக் கொய்தன,உயிர்குடித்தன. இத்தகைய வரலாற்று வடுகளைச் சுமந்து நிற்கும் ஒரு கிராமம்தான் சித்தாண்டி. மட்டக்களப்பு நகரிலிருந்து 13மைல் தொலைவில் இக்கிராமம் உள்ளது. சைவமும்,தமிழும் தளைத்தோங்க குடிமரபும், கலைமரபுகளாலும் பின்னிப் பிணைந்த பண்பட்டமக்கள் வாழும் அவ்வூரின் நடுவினிலே சிங்கார வேலனின் சன்னிதானம். கால்நடை வளர்ப்பும், கமத் தொழிலும் அவ்வூர் மக்களின் கைவந்த கலை. இவ்வகைச் சிறப்புமிக்க. சித்தாண்டியூரில் கடந்த 1990ம் ஆண்டு ஆடி20-27நாட்கள் மறக்கமுடியாத கொடூரநாட்கள்.

இனவெறி, மதவெறி இரண்டுமட்டுமல்ல மதுவெறி, மாது வெறி இந்த நால்வகை வெறிகளும் நஞ்சூட்டல் போல் உள்வாங்கப்பட்ட சிங்களப் படைகள் அப்பாவித் தமிழ் உறவுகள் 137பேரின் உயிர்குடித்த சோகநாள்களை மீண்டும் ஒருமுறை மீட்டுப்பார்கிறோம்.

விடியலில் இருந்து அந்தி படும் வரையும் பச்சைச் சீருடைதாரிகளின் பார்வையிலிருந்து தப்புவதென்பது இயமனிடமிருந்து தப்பிவிடுவதற்கு இணையான ஒரு சூழ்நிலை. எங்கே. நாய்களின் ஓசை எங்கே பாதணிகளின் தடப்பதிவுகள் எங்கே சிங்களப்பேச்சு இத்தனைவிடையங்களை அறிவதிலும் பார்வையினைக் கூர்மைப்படுத்திப் பார்ப்பதிலும் தமிழ் மக்கள் படாத பாடுபட்டார்கள்.

புத்தனின் புனித போதனையில் வாழ்ந்த சிங்களதேசத்துச் சிப்பாய்களுக்குப் பயந்து சித்தாண்டி ஊரில் சித்திரவேலாயுதன் ஆலயத்தில் அடைக்கலம் அடைந்தனர் அந்த தமிழ் உறவுகள். அந்தத் தங்கவேலாயுதம் தாங்கிய வள்ளிமணாளன் பாதத்தில் அடைக்கலம் அடைந்தோரை அவன் கை விடமாட்டான். அந்த நம்பிக்கையை கொடூரவெறியர்கள் பொய்யாக்கி விட்டனர்.

ஆடி 20ம்நாள், முருகன் ஆலயம் முற்றுகையிடப்பட்டது. மூர்த்தி, தலம் தீர்த்தம் மூன்றும் அமையப்பெற்று சிகண்டிமுனி வாழ்ந்து மகிமைபெற்ற திருத்தலத்தைப் போதிமாதவனின் போதனைகேட்ட் சிங்களப்படைகளினால் முற்றுகைக்குள்ளானது.

பட்டியிலே அதிக பால் கறக்கும் பசுவைத் தெரிந்தெடுப்பது போல தமிழர்கள் அனைவரையும் நிரைபடுத்தி 80தமிழ் இளைஞர்களைஇந்தச் சிங்களச் சிப்பாய்கள் தெரிந்தெடுத்தனர்.

''கந்தா,முருகா,காங்கேயா காப்பாற்று''இன்னும் எத்தனை கோசங்கள். பெற்றெடுத்த தாய்மாரும் உடன் பிறவா உறவுகளும் கதறி அழுதனர்.

''ஐயா எங்கட பிள்ளைகளை விடுங்கையா'' அழுத கண்ணீர் ஆறாய்ப் பாய்ந்தது தான் மிச்சம். பச்சைச் சீருடை தாரிகள் கல் மனது கரையுமா.

அறுவைக்குக் கொண்டு செல் லும் மாடுகள் போல் 80 தமிழ் மானுடமும் வாகனத்தில் ஏற்றப்பட்டன.

நாம் அனைவரும் நர பலிக் காகக் கொண்டு செல்லப்படுகிறோம். என்பது அப்போது அந்த அப்பாவிகள் உணர்ந்தார்களோ இல்லையோ!அவர்கள் அனைவரும் கைகளும், கண்களும் கட்டுப்பட்டுச் சிங்கள தேசத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பிள்ளைகளை உடன் பிறந்த உறவுகளை, கணவனைப் பறி கொடுத்த பதை பதைப்பு சிங்களப் படைகளின் வதை முகாம்களில் தேடி அலைந்தனர் அந்த பெண் உறவுகள். ஆனால் பலன் இல்லை. வீட்டோடு இருந்தால் இந்த நயவஞ்சகர்கள் குதறி எறிவார்கள். என்ற பயம் பீதி. குழுமம் ஆகிக் குடியிருந்த வீட்டை விட்டு மீண்டும் குகன் பதி நாடியிருந்தனர்.

எனினும் சிங்கள வெறிப் படையும் அவர்களுடன் தேச விரோதக் கும்பலும் விட்டு வைக்கவில்லை. ஆடி 27ம் நாள் மீண்டும் ஒரு 57 தமிழ் இளைஞர்கள் முதலை வாயில் அகப்பட்டது போல் சிங்களப் படைகளின் கைகளில் அகப்பட்டுக் கொண்டனர்.

அவர்களைப் பறி கொடுத்த தாய்மாரும் அதே அழுகை, அதே தேடல் எனினும் பலன் பூச்சியமே.

வாகனத்தில் ஏற்றப்பட்ட இந்தத் தமிழ் இளைஞர்கள் 137 பேரும் சிங்கள தேசத்தில் ஒரு ஒதுக்குப் புறத்தில் மௌனப் புதை குழிக்குள் மறைந்து கிடக்கிறார்கள்.

**வேணிதன்**

ஏற்றிச் சென்ற சிப்பாய்கள் இந்த இளைஞர்களை புலிகள் எனக் கூறி ஒரே குழிக்குள் சுட்டுப் புதைத்து விட்டனர். விசாரணைக்குழு, சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இவற்றின் அலுவலக வாயிற் படிகளில் உறவுகளைப் பறி கொடுத்த ஆத்மாக்கள் ஏறி இறங்கியது தான் மிச்சம் ஏதும் பயனளிக்கவில்லை.

அத்துடன் நின்றார்களா இந்த நரபலிப்படை. தமிழினத்தைக் குதறிக் குதறி வேட்டையாடினர். வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக அகதிமுகாம், சத்துருக் கொண்டான் இன்னும் எத்தனை எத்தனை படு கொலைகள்........ புதைகுழிகள் இவற்றால் தென் தமிழீழ மண் சிவந்து நிற்கிறது.

''இப்போது சமாதானம் என்ற போர்வையில் விடுதலைப் போருக்கு அழுத்தங்களைக் கொடுக்கும் அனைத்துலக நாடுகளும் சமாதான விரும்பிகளும் அப்போது ஏன் மௌனம் சாதித்தார்கள்.''

இது சித்தாண்டியூரில் ஒரு மகவைப் பறி கொடுத்த தாய் பரிதாபமாகக் கூறிய வார்த்தை.

உண்மை தான். உறவைப் பறி கொடுத்த குடும்பங்களுக்குத் தேற்றும் வார்த்தைகளும், மரண இழப்பீடுகளும் ஒரு மகவைக் கொடுத்து விடுமா?

இன்றும் சித்தாண்டியூரில் சிங்களப் படைகளின் இனவெறியாட்டத் தால் பலிக்கடாவாக்கப்பட்ட குடும்பங்கள் கண்ணீர் சிந்திக் கொண்டே இருக்கின்றன. இன்னும் அந்தச் சோகம் மாறவில்லை வெறிச்சோடிக்கிடக்கிறது என்று தான் கூற வேண்டும்.

இனி மேலாவது செம்மணி போல் தென் தமிழீழத்தில் மௌனப் புதை குழிக்குள் மறைந்து கிடக்கும் படு கொலைகள் அரங்கப்படுத்தப்படவேண்டும். இவை தவிர அந்த வரலாற்று வடுக்களை எத்தனை யுகங்கள் வந்தாலும் தமிழினத்தின் நெஞ்சமதில் அந்நினைவுகள் இரைமீட்டுக் கொண்டே இருக்கும்.

## தமிழின உயிர்ப்பறிப்புக்களில் தென்தமிழீழத்தில் சில துயரப் பதிவுகள்

| | |
|---|---|
| 06.11.85 | மட்டக்களப்பு பார் வீதியில் கொல்லப்பட்டோர் 9 பேர் |
| 27.11.85 | மட்டக்களப்பில் மீனவர்கள் கொல்லப்பட்டோர் 24 பேர் |
| 19.01.86 | இருதயபுரத்தில் கொல்லப்பட்டோர் 24பேர் |
| 19.02.86 | அம்பாறை உடும்பன்குளத்தில் கொல்லப்பட்டோர் 60 பேர் |
| 19.09.86 | மட்டக்களப்பு நகரில் கொல்லப்பட்டோர் 11பேர் |
| 11.11.86 | மட் பெரியபுல்லுமலையில் கொல்லப்பட்டோர் 23பேர் |
| பெப்ரவரி 87 | கொக்கட்டிச்சோலையில் 13 விசேட அதிரடிப் படையினர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கொல்லப்பட்ட பொதுமக்கள் 150 பேர் |
| 1990–7ம் மாதம் 9திகதி தொடக்கம் 14வரை | மட்டக்களப்பில் கொல்லப்பட் டோர் 19 பேர் |
| ஜூலை 90 | அம்பாறை குடியேற்றவாசிகள் கொல்லப்பட்டோர் 38 பேர் |
| ஜூலை 90 | வளத்தில் அகதிகள் கொல்லப்பட்டோர் 28பேர் |
| 22.07.90 | கல்முனையிலும் கல்லாற்றிலும் அகதி முகாம்களில் கொல்லப்பட்டோர்30 பேர் |
| 07.08.90 | திராய்க்கேணியில் கொல்லப்பட்டோர் 40 பேர் |
| 12.08.90 | துறைநீலாவணையில் கொல்லப்பட்டோர் 60 பேர் |
| 17.08.90 | வீரமுனையில் கொல்லப்பட்டோர் 83 பேர் |
| 30.10.90 | கொக்கட்டிச்சோலையில் கொல்லப்பட்டோர் 182 பேர் |
| 1991 | மகிழடித்தீவு முதலைக்குடாவில் கொல்லப்பட்டோர் 67 பேர் |
| 09.08.92 | மயிலந்தனையில் கொல்லப்பட்டோர் 32பேர் |
| ஏப்ரல் 92 | மண்டூரில் ஒரே குடும்பத்தில் 7 பேர்உட்பட கொல்லப்பட்டோர் 8 பேர் |
| ஆகஸ்ட் 92 | மயிலந்தனையில் புனானை இராணுவ முகாம் படையினரால் கொல்லப்பட்டோர் 39 பேர் |
| ஏப்ரல் 92 | பொலனறுவை அளஞ்சிப்பொத்தானையில் முஸ்லிம் ஊர்காவல் படையால் கொல்லப்பட்டோர் 80 பேர் கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து காணாமல் போனோர் 173 பேர். சத்துருக்கொண்டானில் கொல்லப்பட்டோர் (68 குழந்தைகள் உட்பட) 184 பேர். வாழைச்சேனையில் கொல்லப்பட்டோர் 150 பேர். கல்லாற்றில் கொல்லப்பட்டோர் 80 பேர். மட்டக்களப்பில் சமாதானக் குழுவின் தகவலின் படி காணாமற் போனோர் தொகை 5000 பேர் |

## சொன்னாலும் குற்றம்



களவாக, சட்ட விரோத மின் சாரத்தைப் பாவிப்பது பாரதூரமான குற்றம் என்றுதான் சொல்லுறாங்க, வீதியால உள்ள மின் வயர்களில் கொழுவி மின் இணைப்பைக் கஷ்டத்தால் பெற்ற சிலருக்குத்தான் இவ்வாறான குற்றமும் தண்டனையும் நடக்குது.

ஆனால் மட்டு நகரில் உள்ள சில பணக்கார வீடுகளில் மீற்றர் பெட்டியில இருந்து சமையில் அறைக்கு பிரத்தியேக களவு மின் இணைப்பு பெற்றவர்களுக்குத் தண்டனை என்பதே இல்லை.

அண்மையில் இவ்வாறான சிலர் மாட்டிக்கொண்டார்களாம். இவ்வாறானவர்களில் டாகுத்தர், விதானை, வாத்தியார், வர்த்தகர் என்று பெரிய புள்ளிகளின் பட்டியலே உள்ளதாம்.

மாட்டிக்கொண்ட இவர்கள் யாருக்கும் எங்கட பெயரை வெளியால சொல்லக்கூடாது எண்டு அந்தத் தண்டப்பணத்தை கட்டி விட்டாங்களாம்.

களவாக மின்பாவனை செய்வதால் விபத்துக்களும், மரணங்களும் நிகழும் எண்டு மக்களுக்கு அறிவுரை வழங்கிற ஆக்களே இப்படி கள்ளக்கறண்டு எடுக்கக்குள்ள அறிவில்லாத மக்கள் மட்டும் மின்சாரம் சில சமயங்களில் எடுத்தால் கொதிக்கிறாங்க. இப்படி சனங்கள் கதைப்பதிலும் உண்மை இல்லாமல் இல்லை உனக்கில்லை உபதேசம் ஊருக்கு எண்டது சரிதானே.

# பகையேவிய படுகொலைகளுக்கு பணிய மறுத்தவரின் புத்துயிர்ப்பு.


தேசவிடுதலைப்போராட்டம் முனைப்புற்ற தேசங்களில் அடக்கு முறையாளர்களின் அளவற்ற அட்டூழியங்களில் பல்வேறு வகையிலான படுகொலைகள் நிகழ்ச்சி நிரலாகவே அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. அநீதிக்கெதிரான போராட்டத்தில் ஈடுபடுவோரை அச்சமூட்டி ஒதுங்கச் செய்ய படுகொலைகள் கருவிகளாயின என்பது உளவியல் போர்த் தந்திரோபாயமாகப் (psywar strategy)பட்டுணரப்பட்டவிடயம். இவ்வாரக்கட்டுரை பகையேவிய படுகொலைக்குப் பணிய மறுத்தவரின் புத்துயிர்ப்புப் பற்றிப் பேச விழைகின்றது.

தமிழீழத் தாயகத்தில் ஆக்கிரமிப்புப் படைகள் நிகழ்த்திய படுகொலைகளைப் பட்டியலிட்டால் வருடத்தில் மிகமிகச் சொற்ப நாள்களே விடுபடக்கூடும். அண்மையில் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது அறிவித்தற் பலகையில் [Notice board] இடுவதற்காகத் ''தமிழீழத் தாயகம் தாங்கிய படு கொலைகள்'' என்ற தொகுப்பைத் தயாரித்து இருந்தது. தொகுப்புப் பார்வையைச் செலுத்துமிடத்து தார்மீக ரீதியான தமிழ்த் தேசியவிடுதலைப் போராட்டத்தை வேரறுக்க ஆக்கிரமிப்பாளர் ஆற்றிய மனிதம் வெட்கித் தலை குனியும் வெறியாட்டங்கள்தான் எத்தனை! தொகுத்தவை குறிப்பிடத்தக்க சிலதான் என்று தொகுப்பாளர்கள் சொல்வது குறிப்பிடப்பட வேண்டியதாகின்றது.

சமூகம் சொல்லிக் கொள்ளும் அறிவுஜீவிகள் ''உற்பத்தி'' செய்யப்படும் இடத்திலிருந்து வெளியாகியுள்ள பட்டியலைப் பார்த்து மா ''மனிதாபிமானம்''பற்றி பேசுவோரே/ அறிக்கையிடுவோரே அமைதி காக்கிறீர்கள்? ''ஆயுதப்போராட்டம்''[Arms struggle] நடக்கையில் இது ''சர்வசாதாரணம்'' என்று கைவிரிக்கிறீர்களா? ஐயா/அம்மனி தயவு செய்து ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். எங்களது வாழ்வுரிமைக்கான, வாழிடஉரிமைக் கான மண்மீட்புப் போராட்டமான தேச விடுதலைப் போராட்டத்திற்கான ''பால பாடம்'' இலகு தமிழில் பின்வருமாறும் அமைவதைப் படித்தறியுங்கள். எங்கள் அன்பு உறவுகளே உண்மையை உரத்து எடுத்துக் கூறுங்கள். நாம் முன்னம் சில கட்டுரைகளில் முன்வைத்ததையே மீளவும் கூறுகின்றோம்.

நாங்கள் ஆயுதப்போராட்டத்தை அவாக் கொண்டு ஆரம்பிக்கவில்லை. அமைதி வழியில் அடிப்படை உரிமைகளை வேண்டிய எம் மீது ஆயுத ஒடுக்குமுறை அடாத்தாக ஏவப்பட்ட போதே ஆயுதப்போராட்டத்தை முன்னெடுக்கத் தள்ளப்பட்டோம் அதுவும் உடனடியாகவே ஆரம்பிக்கவில்லை. அடிக்க அடிக்க அடியை வாங்கி அமைதி வழியில் முயன்று, மாற்று வழி ஏதுமின்றியே ''முள்ளை முள்ளால் எடுக்க'' முன்வர எமது ஆக்கிரமிப்பாளர்களாலும் அரசபயங்கர வாதத்தாலும் தள்ளப்பட்டோம். ஆதலால் எமது ஆயுத விடுதலைப்போராட்டம் ''தற்காப்புப் போராட்டம்'' என்பதைக் காலம் தாழ்த்தி இப்போதேனும் மனச்சாட்சிப்படி ஏற்றுக்கொள்ளுங்கள். ''தக்கனப் பிழைக்கும்'' என்ற தாற்பரியமே அறிவியல் ரீதியில் எமது தர்மப் போராட்டத்தை நியாயப்படுத்தும். ஈழத்தமிழர்களாகிய எங்களது''சமூக'' வாழ்வுக்கான நியாயமான நாட்டத்தையும், அமைதி வழி மீதான எங்களுக்கான பிடிப்பையும் வ.ஐ.ச. ஜெயபாலனின் ''உயிர்த்தெழுந்த நாட்கள்'' கவிதை பின்வருமாறு பேசுவதைப்பாருங்கள்/ கேளுங்கள்.

**''நாம் வாழவே எழுந்தோம்**
**சாவை உதைத்து,**
**மண்ணிலெம் காலை ஆழப்**
**பதிந்து**
**மரண தேவதை**
**இயற்கையாய் வந்து**
**வருக என்னும்**
**இறுதிக்கணம் வரை,**
**மூக்கும் முழியுமாய்**
**வாழவே எழுந்தோம்!''**



மானுட நீதியின் பாற்பட்ட எமது தாயக விடுதலைப் போராட்டத்தைப் ஒடுக்கவென ஆக்கிரமிப்பாளர்களும், அன்னிய ஏகாதிபத்திய சக்திகளும், ஒட்டுக்குழுக்களும், அடிவருடிகளும், ''முக்கி முனகிய'' வேலைத்திட்டங்கள் பற்பல. திட்டமிட்ட இனவழிப்பு நிகழ்ச்சி நிரலில் பெருமெடுப்பிலானதாக [Large scale] படுகொலைகள் [Massacres] கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன என்பது மூடி மறைக்கப் பட முடியாத உண்மை.

திட்டமிட்ட இம் மனிதப் படு கொலைகள் மூலம் விடுதலைப் போராட்டத்தை வலுவிழக்கச் செய்யும் சுழ்ச்சிகள் நிரம்பவே பொதிந்து புதைந்து கிடந்தன.

(1)இன விகிதாசாரத்தை திட்டமிட்டுக் குறைப்பது.
(2)விடுதலை வேண்டும் மக்களிடையே ஒரு விதத் தொடர் அச்ச நிலையை/ உறை நிலையை [Frozenstage] ஏற்படுத்தல்.
(3)விடுதலை ஓர்மத்தைச் சிதறடித்து மக்களைப் போராட்டத்திலிருந்து ஒதுங்கச் செய்தல்.
(4)போராட்டச் சக்திக்கு எதிராகப் பொதுமக்களைத் திருப்பும் வகையில் வெறுப்பை உண்டாக்கல்.
(5)மக்களுக்காகப் போரிடுவோரிடையே சோர்வை/ தளர்வை உண்டு பண்ணல்.
(6) போராட்டம் தொடர்பான மக்கள்

**துரை மேகநாதன்**

உளவலுவை [Mental power] உருக்குலைத்தல் என்பன அத்தகைய சூழ்ச்சித் திட்டங்களே.

இத்தகைய தந்திரங்கள் சில ஏகாதிபத்திய வல்லரசுகளாலும் அதன் அடிவருடி ஆட்சிகளாலும் இலத்தீன்அமெரிக்கா, மத்திய ஆசியா, முதலான பிராந்தியங்களிலே பின்பற்றப் பட்டிருந்தன. இவை ஓரளவு என்ன, குறிப்பிடத்தக்க எதிர்பார்த்த விளைவு களை அவ்வப்பிராந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அடிவருடிகளுக்கும் தந்துதவின எனலாம்.

மேற்குலகிலிருந்து பெரும் உதவிகளைப் பெற்ற எமது ஆக்கிரமிப்பாளரும் தக்க சூழல் பகுப்பாய்வு (situational Analysis) இன்றி மேற்குலகச் சித்தாந்தம் கொண்டு எம்மை எமது வளங்களை மேயப் பார்த்தனர். சாத்திய ஆய்வு (feasibility study) செய்யப்படாத சதிகாரர்களின் அட்டூழிய இலக்குகள் அம்பலம் ஏறவில்லை என்பது வரலாறு. ''மரணத்துள் வாழ்வோம் '' என்பதாக எமது வாழ்வு அமைந்து வந்திருப்பினும் ''மீண்டும் தொடங்கும் மிடுக்கு'' ஆக புத்தூக்கம் படைத்தது விடுதலை வேள்வி வாழ்வு. ''யாரோடு நோவோம் யார்க்கு எடுத்துரைப்போம்'' என்று நாம் போர்த்துக் கிடக்கவில்லை அல்லவே!

தமிழீழத் தாயகத்தில் பகைவர் மேற்கொண்ட படுகொலைகள் நேர் மாறான விளைவுகளையே உண்டு பண்ணின என்பது சொல்லித்தெரிய வேண்டியது. படுகொலைகள் பெருகப் பெருக விடுதலை வேள்வியும் ''தேச விடுதலை'' எனும் இலக்கு நோக்கி நகரலாயிற்று.

**''கடலில் மிதந்தவை**
**களத்தில் வீழுந்தவை**
**கண்டகண்ட இடமெல்லாம்**
**வெந்தவை, கிடந்தவை, அழுகிச்**
**சிதைந்தவை......**
**இன்னும் இன்னும் உயிர்கள் மலிய**
**எங்கும் அழிவு சில்லறையாக**
**எங்கள் எழுச்சி**
**தேரென எழுமே!**
**எங்கள் வீடுதலை'**
**இலக்கினை அடையுமே!**
**அதனால்,**
**காலன் கடைவிரிக்கட்டும்**
**அது வீடுதலை விழாவின்**
**அர்ச்சனைக் கடை''.** எனும் மு. பொவின் கவிதை (நன்றி. அலை-26, 1985,மு. பொன்னம்பலம் ) இதனையே அப்போது கட்டியம் கூறியதை மீட்டுப் பாருங்கள்.

தமிழீழத் தாயகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட படுகொலைகளுள் வட தமிழீழத்தில் மேற்கொள்ளப்பட்டவை பெரும்பாலும் விமானத்தாக்குதல்கள். எறிகணை வீச்சுக்கள், கடற்படை பீரங்கித்தாக்குதல்கள் காரணமாகக் கண்மூடித்தனமாக , இலக்கற்று இடம் பெற்றன. ஆனால் தென் தமிழீழத்திலோ ஆக்கிரமிப்புப் படைகள் நேரடியாகக் ''கையாண்டவையாகவே'' தெரிகின்றன. மேலும் இவ் இனப்படுகொலைகளின் பின்னணியில் சிறப்புக் காரணிகளாகச் சிங்களக் குடியேற்றம், பல்வேறு வளங்களைக் கொண்ட பொருண்மியத்தைப் புதைப்பது, இனச்சுத்திகரிப்பை ''நாசூக்காக'' நடத்துதல் முதலான இன்னும் பலவற்றைக் குறிப்பிடலாம்.

சர்வதேசம் சந்தித்த சில பல விடுதலைப் போராட்டங்களிலும் பல படுகொலைகளை வரலாறு காட்டுகின்றது. வியட்நாம் விடுதலைப் போரிலே அமெரிக்க ஆக்கிரமிப்பு நடத்திய ''மைலாய்''படுகொலை, இந்திய சுதந்திரப் போரிலே பஞ்சாப்பிலே ''ஜாலியன் வாலாபக்'' படுகொலை, தென்னமெரிக்காவிலே (குறிப்பாகப் பெரு (peru) விலே 1986இலே நிகழ்ந்த சிறைப் படுகொலை) பாலஸ்தீனத்திலே இன்று வரை தொடரும் பல்வேறு அகதி முகாம் படுகொலைகள் மிகச் சில குறுகிய உதாரணங்களாகும். இப் படுகொலைகளுக்காகப் போராடும் தேசத்தவர்களாகிய நாம் கண்டிருக்கிறோம். படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காக ஏங்குபவர்களின் துயரத்தில் பங்கெடுக்கிறோம். இப் படுகொலைகள் உலக வரலாற்றில் இடம் பிடித்து விட்டன. இன்று ''உலக புகழ் பெற்ற ....'' (wold famous)என்ற தொடர்களில் படுகொலைகளும் (massacres) நூலாக வருவதைக் காண முடிகின்றது.

இவ்விடத்தில் இழந்து போன தாயகத்தை மீட்கப் போராடும் எங்களுக்குப் பாரிய வரலாற்றுப் பொறுப்பு இருக்கிறது. எமது நேற்றைய, இன்றைய வரலாறுகள் இன்றைய, நாளைய தமிழீழச் சந்ததிகளுக்கு முதலில் எடுத்துச் செல்லப்பட வேண்டும். இதை ''அறிவு ஜீவிகள் '' செய்வார்கள் என்று விட்டு விட முடியாது. (அவர்களுக்கு யார் சொல்வது. என்று கேள்வி' எழக்கூடும்) வரலாறு குறிப்பாகத் தமிழீழப் போராட்ட வரலாற்றின் பல்வேறு கட்டங்களையும், செய்திகளையும் எவ்வித வேறுபாடுமின்றி அனைவரும் பகிர்ந்து கொள்வது தேவையாகின்றது. வரலாற்று ஆவணக் காப்பகத் தொழிற்பாடு அவசர அவசியத் தேவை. சர்வதேசச் சமூகத்திற்குக் கொண்டு செல்ல காத்திரமான தொகுப்பாக்கம் அவசியப்படக் கூடும். கிடைத்துள்ள சமாதானப் பேச்சுக்கான காலத்தை இவ் விடயங்களில் செலுத்த தமிழீழக் கல்விக்கழகம் கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கலாம். படுகொலைகளுக்கு அதிகம் உள்ளான மட்டு_அம்பாறை மாவட்டங்களின் மாணவர்களுக்கு இச் செய்திகள் உரிய வாறு கொண்டு செல்லப்படுவது அவசியமாவதை உரிய தரப்பினர் உணர்வார்கள் என நம்புவோம்.

ராம் பிரசாத் பிஸ்மில் என்ற இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்

**''இளைஞர்களே!**
**எங்கள் தியாகம் உங்கள் உள்ளத்தில்**
**தைத்தால்**
**எப்பொழுதாவது**
**எங்களை எண்ணிப்பாருங்கள்!**
**வீர சுதந்திரம் வேண்டி ஏகிய**
**எங்களை எண்ணிப்பாருங்கள்!''** என்று எழுதிய வரிகளை எமது மாணவர்களும் அவர்தம் ஆசிரியப் பெருமக்களும் உணர்ந்து கொள்ளட்டும்.

செப்டெப்பர் 05 கிழக்கு பல்கலைக்கழக படுகொலை நினைவை முன்னிட்டு நினைவுத்தூபி திறக்கப்படுவதாக அறிகின்றோம். வரவேற்கப்பட வேண்டிய வரலாற்று முயற்சி. இதை உரிய வகையில் பேணிப் பாதுகாக்க கிழக்குப் பல்கலைக்கழகச் சமுகம் முன்வரட்டும்.

பகையேவிய படுகொலைகளுக்கு பணியாது புத்துயிர்ப்புக் கொள்கின்ற எமக்கு வரலாறு தருகின்ற செய்திதான் என்ன? வரலாற்றைப் படைத்தளிக்கும் தேசியத்தலைவரின் வரிகளே அவை.

''நீண்ட விடுதலைப் பயணத்தில் சோர்வுகள் எம்மை ஆட் கொள்ளலாம் , போராட்டவாழ்வின் பெரும் சுமைகள் எம்மை அழுத்திப் பிடிக்கலாம், மேலும் பளுக்கள் எம்மீது சுமத்தப்படலாம். ஆனால், நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக் கொண்டு உறுதி கொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால் எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ, அழிக்கவோ முடியாது. வீர சுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு .உறுதிதான் வலுமிக்க ஆயுதம்''.

## இந்தியாவும் ஈழத்தமிழரும்



# புலிகளுக்கு எதிரான முதலாவது ஆயுதக்களைவு



விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைவதென்பது எப்பொழுதுமே சிக்கலான ஒரு விடயம்தான்.



தற்பொழுது இந்தச் சமாதான முன்னெடுப்புக் காலத்தில் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களையவேண்டும் என்ற கோரிக்கைகளை ஜே.வி.பி.முதல், இந்தியாவின் முன்னாள் இராணுவ உயரதிகாரி சதீஷ் நம்பியார் வரை முன்வைத்து வரும் இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில், புலிகளுக்கு எதிராக இந்திய அமைதிகாக்கும் படையினர் மேற்கொண்ட ஆயுதக் களைவு நடவடிக்கைகள் பற்றிப் பார்ப்பது பொருத்தமாகவே இருக்கின்றது.

அத்தோடு, புலிகள் மீது இந்திய அமைதிகாக்கும் படை மேற்கொண்ட ஆயுதக் களைவு நிர்ப்பந்தம் பற்றியும், அதனைப் புலிகள் எதிர்கொண்ட விதம் பற்றியும் சற்று விரிவாக ஆராய்வது இன்றைய அவசியமும் கூட.

**- நிராஜ் டேவிட் -**

புலிகளுக்கு எதிரான இந்தியாவின் முதலாவது ஆயுதக் களைவு 1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 8ம் திகதி சென்னையில் இடம் பெற்றது. தமிழ் நாட்டுப் பொலிஸார் புலிகளின் அலுவலகங்களைச் சுற்றிவளைத்து, புலிகள் வசமிருந்த ஆயுதங்களையும், தொலைத் தொடர்புக் கருவிகளையும் கைப்பற்றி யிருந்தார்கள். புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் மேற்கொண்ட சாகும் வரையிலான உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து பொலிசாரினால் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மீண்டும் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்தச் சம்பவம் புலிகளுக்கு ஒரு பெரிய பாடத்தைக் கற்றுக்கொடுத்திருந்தது.

புலிகளிடம் ஆயுதங்கள் இருப்பதை இந்தியா தொடர்ந்து அனுமதிக்காது என்பதுடன், அந்த ஆயுதங்களைக் களையும் நடவடிக்கையை இந்தியா எந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டுமானாலும் மீண்டும் மேற்கொள்ளலாம் என்பதையும் புலிகளுக்கு அந்தச் சம்பவம் நன்றாக உணர்த்தியிருந்தது.

அதனால், தமது ஆயுதங்கள் விடயத்தில் புலிகள் மிகுந்த எச்சரிக்கையாகவே நடந்துகொள்ளத் தலைப்பட்டார்கள்.

அத்தோடு, இந்தியா என்றாவது ஒரு நாள் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைவதற்கு முயற்சி செய்யும் என்பதைப் புலிகளின் தலைவர் தெளிவாகவே உணர்ந்திருந்தார். அதனால், இந்தியா புலிகளுக்கு ஆயுதங்களை வினியோகித்து வந்த காலத்திலேயே வேறு நாடுகளிடம் இருந்து புலிகள் இரகசியமாகப் பெருமளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வந்ததுடன், தம்மிடமுள்ள ஆயுதக் கையிருப்பு விடயத்தில் இந்தியாவைப் 'பலவழிகளிலும் ஏமாற்றியும் வந்திருந்தார்கள்.

### 'றோ'வை ஏமாற்றிய புலிகள்.

80களின் ஆரம்பத்தில், புலிகள் உட்பட தமிழ் அமைப்புகளுக்குப் பயிற்சி மற்றும் ஆயுதங்களை வழங்கும் பொறுப்பு 'றோ'அமைப்பினரிடமே ஒப்படைக்கப் பட்டிருந்தது.

'றோ'வும் தம்மால் பயிற்றப்பட்ட போராளிகளின் விபரங்கள், போராட்ட அமைப்புக்களுக்குத் தம்மால் வழங்கப்பட்ட ஆயுத தளபாடங்களின் பட்டியல்கள் என்பனவற்றை மிகவும் கவனமாகவே பேணி வந்தது.

ஒவ்வொரு போராட்ட அமைப்பிடமும் எப்படியான் ஆயுதங்கள் இருக்கின்றன, எத்தனை ஆயுதங்கள் இருக்கின்றன போன்ற விபரங்களை மாதாமாதம் கணக்கிட்டுக் கண்காணித்து வந்தது. இயக்கங்களும், தாம் பாவித்த மற்றும் தம்மிடம் வைத்துள்ள ஆயுதங்களின் விபரங்களை 'றோ' அதிகாரிகளிடம் மாதாமாதம் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டிருந்தார்கள். சரியான சந்தர்ப்பத்தில் தமிழ் அமைப்புக்களிடம் இருந்து ஆயுதங்களை மீளப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடனே 'றோ' இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தது.

விடுதலைப் புலிகளிடம் இருந்த ஆயுதங்களின் விபரங்களும், 'றோ' அதிகாரிகளால் மிகவும் கவனமாகத் திரட்டப்பட்டன. புலிகளும் தம்மிடமுள்ள ஆயுதங்கள் பற்றிய விபரங்களை அவ்வப்போது 'றோ' அதிகாரிகளிடம் வெளியிட்டே வந்தார்கள்.

இருந்த போதிலும், புலிகள் தம்மிடமுள்ள ஆயுதங்களின் கணக்குகளை வெளியிடும் விடயத்தில் 'றோ'அதிகாரிகளை எவ்வாறு ஏமாற்றியிருந்தார்கள் என்ற விபரத்தை, 'India's Sri Lankan Fiasco' என்ற ஆய்வு நூல் விபரித்திருக்கின்றது.

'புலிகளிடம் உள்ள ஆயுதக் கையிருப்பு பற்றிய விபரங்கள் 'றோ'விடம் இருந்தன. ஆனால் சண்டைக்குச் சென்று திரும்பும்

## துரோகங்களின் அத்தியாயங்கள் - 23

புலிகள், சண்டைகளின்போது பாவித்த ரவைகள் மற்றும் இழந்த ஆயுதங்கள் போன்றனவற்றின் கணக்குகளை அதிகமாகவே 'றோ'விடம் வெளியிட்டுவந்தார்கள். அதேவேளை, சண்டைகளின் போது எதிரியிடம் இருந்து கைப்பற்றிய ஆயுதங்களின் உண்மையான விபரங்களை அவர்கள் வெளியிடுவதில்லை. இதனால், புலிகளிடம் உள்ள ஆயுதங்கள் தொடர்பான கணிப்பீடுகளில் 'றோ' அதிகாரிகளுக்குப் பலத்த தடுமாற்றம் இருந்துவந்தது.

'டெலோ' அமைப்பின் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களின் போதும், பெருமளவு ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றி இருந்தார்கள். இவ்வாறு 'டெலோ' அமைப்பிடம் இருந்து புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் தொகையையும் 'றோ' அதிகாரிகளினால் சரியாகக் கணக்கிட முடியவில்லை.

இதனால்தான் இந்திய இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்த போதிலும், புலிகளிடம் எஞ்சியுள்ள ஆயுதங்களின் விபரத்தை இந்தியப்படை அதிகாரிகளால் சரியாகக் கணிப்பிட முடியாமல் போயிருந்தது. 'றோ' அதிகாரிகள் புலிகளிடம் இருப்பதாக வெளியிட்ட ஆயுதங்களின் தொகையுடன் ஒப்பிடும்போது, புலிகள் ஒப்படைத்த ஆயுதங்களின் தொகை ஓரளவிற்குப் பொருந்தவே செய்தன. புலிகள் கட்டம்கட்டமாக மேற்கொண்ட ஆயுத ஒப்படைப்புக்களின் பின்னர், புலிகளிடம் ஒரு சிறிய தொகை ஆயுதங்கள் மட்டுமே எஞ்சியிருப்பதாக இந்தியப்படை அதிகாரிகள் கணித்திருந்தார்கள்.



### பதுக்கப்பட்ட ஆயுதங்கள்.

1987ம் ஆண்டு செப்டெம்பர் மாத ஆரம்பத்தில் இந்தியப்படைகளின் தென் பிராந்தியத் தளபதி லெப்டினட் ஜெனரல் திபீந்தர் சிங்கிற்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் இரகசிய அறிக்கை ஒன்று கிடைத்தது. அந்த அறிக்கையில், யாழ் குடாவில் திடீரென்று பெரும் எண்ணிக்கையிலான 'பொலித்தீன்' பைகளும், பெருமளவிலான 'கிறீஸ்' உம் விற்பனையாகி வருவதாகத் தெரிவிக்கப் பட்டிருந்தது. விடுதலைப் புலிகள் தங்களிடம் உள்ள பெருமளவிலான ஆயுதங்களை நிலத்தின் அடியில் புதைத்து வைப்பதற்காகவே, 'கிறீஸ்' மற்றும் 'பொலித்தீன்களைப்' பெருமளவு கொள்வனவு செய்து வருவதாகப் புலனாய்வுப் பிரிவினர் வெளியிட்ட அந்த அறிக்கையில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் பற்றி, புலிகளின் தலைவர் பிரபாகரனுடனான அடுத்த சந்திப்பின்போது திபீந்தர் சிங் தமது சந்தேகத்தைத் தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலளித்த பிரபாகரன், ''புலிகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கத்தில் தமிழ் ஈழத்தில் இயங்கிவரும் மாற்றுக் குழுக்களின் கைங்கரியம்" என்று அதனைக் குறிப்பிட்டார்.

### ஆயுத இறக்குமதி:

அடுத்த வாரமும் அந்த இந்தியப்படை உயரதிகாரிக்கு மற்றொரு புலனாய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றது.

புலிகள் சிங்கப்பூரில் இருந்து பெருமளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்திருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. 700 துப்பாக்கிகளும், பெருமளவு வெடிப் பொருட்களும் புலிகளால் கொள்வனவு செய்யப்பட்டு, 'இல்லனா' என்ற கப்பல் மூலம் இந்து சமுத்திரத்திற்குக் கொண்டுவரப்பட்டு, சிறிய சிறிய படகுகள் மூலம் தரையிறக்கப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தியக் கடற்படை அந்தக் கப்பலை கண்டதாகவும், சர்வதேசக் கடற்பரப்பில் தரித்து நின்ற அந்தக் கப்பலை எதுவும் செய்யமுடியாது போய்விட்டதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் பற்றி புலிகள் தரப்பினரிடம் இந்தியப்படை அதிகாரிகள் விசாரித்த போதும், அந்தக் குற்றச்சாட்டைப் புலிகள் மறுத்துவிட்டார்கள். ஆயினும், புலிகளின் ஆயுதக் கொள்வனவு பற்றிய தகவல்களுடன், 'பொலித்தின்' மற்றும் 'கிறீஸ்' விற்பனை பற்றிக் கசிந்திருந்த தகவல்களையும் முடிச்சுப்போட்ட இந்தியப்படை அதிகாரிகள் ஒரு முடிவிற்கு வந்திருந்தார்கள். அத்தோடு இந்தியப்படை அதிகாரிகளுக்கு ஒரு விடயம் நன்றாகவே புரிந்தது.

புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைவதென்பது தாம் நினைத்தது போன்று, அவ்வளவு இலேசான காரியமாக இருக்காது என்பதை இந்தியப்படை உயரதிகாரிகள் முதன்முதலாக உணர ஆரம்பித்தார்கள்.



*துரோகம் தொடரும்....*

# மட்டுநகர் பொதுச்சந்தையில் மாற்றான் படைகள் நடத்திய தமிழ் இன உயிர்க் கொலைகள்

## மக்கள் மனதில் மாறாதவடு

தமிழின உயிர்க் கொலைகள் தமிழன் என்ற ஒரே காரணத்தால் எமது தாயக மண்ணில் பரவலாக எல்லா இடங்களிலும் இடம்பெற்ற போதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில்தான் அதிக எண்ணிக்கையிலான அப்பாவித் தமிழ் மக்கள் கடந்த இரு த்சாப்தங்களாக இடம்பெற்ற இனப்போரின் மூலம் சிங்களத் தேசத்தின் படைகளாலும், முஸ்லிம் கும்பல்களாலும், தமிழ் விரோதிகளாலும் போதாக்குறைக்கு இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயரில் காந்தி பிறந்த மண்ணில் இருந்து வந்த ஆக்கிரமிப்பு அசுரர்களாலும் கொல்லப்பட்டனர்.

கடந்த 1983ம் ஆண்டிற்குப் பின்பு மட்டுநகர் பகுதியில் ஏதாவது ஒரு அசம்பாவிதம் ஏற்பட்டால் தமிழர்களைப் பதம் பார்க்கும் ஓரிடமாக விளங்குவது மட்டக்களப்பு பொதுச் சந்தையாகும். இந்தக்காலப்பகுதியில் சிறிலங்காப் படைகளின் துப்பாக்கி வேட்டுக்கள் சீறிப்பாயும் ஓரிடமாகவே மட்டக்களப்பு பொதுச் சந்தை விளங்கியது.

ஆனாலும் 27.12.1987ம் திகதி மட்டுநகர் சந்தையில் மிகப்பெரிய கொடூரம் நடந்தது. ஆட்டு இரத்தமும், மாட்டு இரத்தமும்,கோழி இரத்தமும், மீன் இரத்தமும் ஓடிய அந்தப் பொதுச் சந்தையில் மனித இரத்தம் ஆறாய் ஓடியது.

மகாத்மா காந்தியும், கௌதமபுத் தரும் பிறந்த அந்தப் பாரத தேசத்தில் இருந்து வந்த இராணுவத்தினரின் வெறியாட்டத்தால் மட்டுநகர் பொதுச்சந்தை சுடுகாடாக மாறியது.

மார்கழி மாதம் 27ம் திக்தி 1987ம் ஆண்டு காலை 7 மணியளவில் பொதுச் சந்தையில் பச்சை மிளகாய் கடித்துக் கொண்டு நின்ற ஒரு இந்திய இராணுவத்தினரை யாரோ ஒருவர் கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டு ஓடினார். இவ்வளவுதான் அந்தச் சம்பவம்.

இதற்குப் பழிவாங்கும் நோக்கில் சிறிலங்கா இராணுவமும், இந்திய இராணுவமும் கூட்டாக இணைந்து பொதுச் சந்தையில் சாமான்வாங்கிக் கொண்டு நின்ற அப்பாவிப் பொதுமக்கள் மீது சரமாரியாக வேட் டுக்களைத் தீர்த்தனர். கையை உயர்த்தி பொதுமகன் என சைகை காட்டிக் கத்திய போதும் கண்டபடி சுட்டனர்.

அமைதி காக்க வந்த இந்தி யப்படையிடம் கையெடுத்துக் கும்பிட்டு எங்களைக் காப்பாற்றுங்க ஐயா என ஓலமிட்ட போதும் "அச்சா"... "அச்சா" என்று ஹிந்தி மொழியால் கூறி சிரித்தபடி அந்த அமைதிப் படையினர் சுட்டுத்தள்ளினர்.

இவ்வாறு இந்தியப்படையினர் ஒரு சாரார் பொது மக்கள் மீது காட்டு மிராண்டித்தனமான முறையில் வேட்டை ஆடிக்கொண்டிருக்கும் வேளையில் சிங்களப் படையினர் பொதுச்சந்தையில் உள்ள கடைகளைக் கொள்ளை அடித்துச் சென்றனர்.

அதன்பின் இந்தியப்படையும், சிங்களப் படையும் பெற்றோல் நிரம்பிய கொள்கலன்களுடன் ஓடி ஓடி கடைகளுக்கு பெற்றோல் ஊற்றித் தீயிட்டுக் கொழுத்தினர்.

இதே நேரம் இன்னுமொரு கொடூரம் அரங்கேறியது. ஆம் காயமடைந்து குற்றுயிராகக் கிடந்த பொது மக்களைத் துடிக்கத் துடிக்க எரியும் நெருப்பில் அந்தப் பாதகர்கள் வீசினர்.



இதிலே மிகவும் பரிதாபமான ஒரு செயல் மூன்று வயதுக்குழந்தை ஒன்றையும் காலில் பிடித்து இந்தியன் ஒருவன் தூக்கி எரியும் நெருப்பில் வீசிய செயலானது பாரத நாட்டின் பாதகத்தை கோடிட்டுக் காட்டியது.

இந்தக் கொடூர நிகழ்வில் மட்டுநகர் பொதுச்சந்தையில் இருந்த 83 கடைகள் எரிந்து நாசமாகின. 157பொதுமக்கள் கொல்லப்பட்ட போதும் 29 சடலங்கள் மட்டுமே மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டன. ஏனைய 128 சடலங்களும் எரிந்து கடைகளுக்குள் சாம்பலாக சங்கமித்தது, இது 1987 டிசம்பர் 27ம் திகதி மட்டுநகர் பொதுச்சந்தையில் இடம் பெற்ற மிகப் பெரிய கொலையாகும். இது மட்டுமா?

1995ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 திகதி மாட்டிறைச்சிக் கடைத் தொகுதிக்கு சமீபமாக ஒரு குண்டு வெடித்தது அதில் 7 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 35 பேர் காயமடைந்தனர். இறைச்சிக்கடைத் தொகுதி மட்டுநகர் பொலிஸ் நிலையத்தின் பொது வேலிக்குப் பக்கத்தில் அப்போது அமைந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மிகவும் பாதுகாப்பான அந்தப் பொதுச் சந்தையில் மீண்டும் 1997ம் ஆண்டு டிசம்பர் 9ம் திகதி மரக்கறிக்கடைத் தொகுதியில் குண்டு ஒன்று வெடித்தமையினால் 01 பெண் உட்பட 5 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 57பேர் காயமடைந்தனர்.

மட்டுநகர் பொதுச்சந்தைவளாக அமைப்பானது மேற்கே பொலிஸ் நிலையம். சுற்றிவரச் சோதனைச் சாவடிகள். இவ்வாறான பாதுகாப்பு அரண்களுடன் இருந்த இந்தப் பொதுச்சந்தையில் எவ்வாறு குண்டு வெடித்தது என்ற கேள்வி எழுகின்றது. மக்கள் பலரும் சிறிலங்காப்

**பாத்திரன்**

படைகளையே சந்தேகித்தனர்.

இவ்வாறு பொதுமக்கள் நினைப் பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. பொதுச்சந்தையானது பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ளது பொலிஸாருக்கு அச்சுறுத்தலாக இருந்தமையினால் இச்சந்தையை வேறு இடத்திற்கு மாற்றும் ஒரு யுக்தியாக பொலிஸாரே இவ்வாறு குண்டுகளை வைத்திருக்க வேண்டும் என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியில் காட்டுத்தீ போன்று பரவியது. இதன் காரணமாக மட்டுநகர் பொதுச்சந்தைக்குப் பொது மக்கள் செல்வது மிகவும் குறைவாகவே இக்காலப்பகுதியில் காணப்பட்டது.

இவ்வாறு குண்டுகள் மட்டுநகர் பொதுச் சந்தையில் அடிக்கடி வெடிப்பதையிட்டு மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் ஜனாதிபதிக்கு ஒரு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தார். அக்கடிதத்தில்.

மட்டுநகர் பொதுச்சந்தை உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்திருக் கின்றது. நான்கு புறமும் சோதனைச் சாவடிகள் உள்ளன. பிரதான பொலிஸ் நிலையமும் பின்புறமுள்ளது இவ்வாறான பாதுகாப்பு அரண்களைத் தாண்டி குண்டு கொர்ண் டுவருவதாயின் பாதுகாப்புத் தரப்பில் தளர்வு நிலை உள்ளதா?அவ்வாறாயின் சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரியின் மீது நடவடி க்கை எடுக்க வேண்டும். பாதுகாப்பு தரப்பினருக்குத் தெரியாமல் இச்சம்பவங்கள் நடக்காது. இவ்வாறான சம்பவங்களின் பின்னணியில் ஆத்திரத்தோடு பழிவாங்கும் நோக்கம் இருப்பதாகப் பொதுமக்கள் சந்தேகப்படுகி றார்கள் என ஜோசப் பரராசசிங்கம் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு எழுதியிருந்தார்.

இக்காலப் பகுதியில் தான் வடத மிழீழத்தில் ஜெயசிக்குறூ இராணுவ நடவடிக்கை உட்பட பல சமர்களில் விடுதலைப்புலிகள் வெற்றியீட்டிக் கொண்டிருந்தார்கள்.

சிறிலங்காப் படைகள் படுதோல் விகளைச் சந்தித்த இக்கால கட்டத்தில் மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கும், சர்வதேச அரங்கில் விடுதலைப்புலிகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தவும் இவ்வாறான குண்டுகளை இராணுவத்தினரே மேற்கொண்டதாகப் பரவலாகப் பொதுமக்களால் பேசப் பட்டதை இங்கு ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

இவ்வாறான குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்ற சமயம் விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினால் குண்டு வெடிப்புக்களைக் கண்டித்து அறிக்கை வெளியிடப்பட்டிருந்தமையும் ஞாபகப்படுத்தியாக வேண்டும்.

மட்டுநகர் பொதுச் சந்தையில் அக்காலப் பகுதியில் நான்கு தடவை மர்மக் குண்டுகள் வெடித்துள்ளன. இதன் காரணமாகப் பொதுச்சந்தையில் மக்களின் வருகை கணிசமான அளவு குறைந்து காணப்பட்டதுடன் வியாபாரிகளுக்குப் பொருளாதார வீழ்ச்சியும் ஏற்பட்டது. நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்காகச் சம்பாதித்த வர்கள் நூற்றுக்கணக்காக மட்டும் உழைத் தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுகொலைகள் இடம்பெறாத இடமே இல்லை என்று தான் சொல்ல வேண்டும். அதிலும் அடிக்கடி தமிழ் மக்களை வேட்டையாடும் ஒரு இடமாக இருந்தது மட்டுநகர் பொதுச்சந்தையாகும். இச்சந்தையில் கடந்த இரு தசாப்தங்களாக இடம்பெற்ற போராட்டத்தினால் ஏறத்தாள 164 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் தமிழின உயிர்கொலை தினமான செப்டெம்பர் 05ம் திகதி நினைவு கூறுவது சாலவும் பொருத்தமாகும்.

தற்போது 18 மாதங்களாக யுத்தம் ஓய்ந்த நிலையில் வாழும் நாம் மீண்டும் ஒரு யுத்தம் வராவண்ணம் எமது முழுக் கவனத்தையும் செலுத்தும் அதேவேளை சிங்களத் தேசம் இதனை உணர்ந்து எமது சுயநிர்ணய உரிமையைத் தரவேண்டும். அவ்வாறு தராவிடின் விடிவை நோக்கிய பாதையில் உழைக்க எமது பலத்தைக் கூட்டி உரிமையைப் பெறுவோம் என்பதில் எந்த மாற்றமும் இருக்காது.

□□□□

---

**பகிரங்கமடல்**

## இப்போது உணர்வார்களா? இந்த அலிசாஹிரைப் பற்றி

**அலைமகன் எழுதும் பகிரங்கமடல்.**

**அன்புடன் அலிசாஹிர் மௌலானாவுக்கு!**



கடந்த வாரம் தமிழ்ப்பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி என்னை மகிழ்வித்தது. மௌலானா உண்மையில் ஒரு மனிதன் தான். நடு நிலையான மனிதர் தன் இனம் சார்ந்த பார்வையில் நில்லாது உண்மையாகவே பார்க்கிறார் இப்படி எல்லாம் நான் நினைத்துக் கொண்டேன்.

இந்த நினைப்பு எல்லாம் இரண்டு நாளில் எனது மனதில் இருந்து தவிடுபொடியாகிவிட்டது.

மறுநாள் பத்திரிகையில் வெளிவந்த செய்தி என்னை நான் நினைத்த நினைப்புக்களை அழித்து விட்டது.

''மௌலானா என்ன மயோன் முஸ்த்தபா என்ன எல்லோரும் ஒரே தராசில் நிறுக்கக் கூடியவர்கள் தான் என நான் மனதுக்குள் புழுங்கிக் கொண்டேன்.''

இப்படித்தான் தமிழ்மக்கள் பொதுவாக நினைத் திருப்பார்கள் என்று எனது ஊகம்.

சம்மாந்துறையில் இரு முஸ்லிம்கள் படுகொலை பின்னர் இரு முஸ்லிம்கள் பணத்துடன் காணாமல் போய் விட்டார்கள் என்ற பரபரப்பு. இவை அனைத்துக்கும் காரணம் விடுதலைப்புலிகள் தான் என முஸ்லிம் அரசியல் வாதிகளும், முஸ்லிம் தேச விரோத சக்திகளும் பிரசாரம் செய்த போது,

அலிசாஹிர் மௌலானா கரடியனாறு தேனகத் திற்கு வந்து விடுதலைப்புலிகளைச் சந்தித்தார். முஸ்லிம்கள் மீதான கொலை, கடத்தல்கள் இவ்வாறான சம்பவங்களுக்கும், புலிகளுக்கும் சம்பந்தமில்லை என நீங்கள் தெரிவித்திருந்தீர்கள். இதுதான் நான் மகிழ்வுற்ற செய்தி.

அடுத்த இருநாள் கழித்து பத்திரிகையில் ''நான் அவ்வாறு கூறவில்லை என்மீது அவதூறு சுமர்த்த ஒரு ஊடகவியலாளர் செய்த பொய்பிரசாரம்'' என மறுதலித் திருந்தீர்கள். இதுதான் நான் பார்த்து மன வேதனை யடைந்த செய்தி.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சி சார்பாக நீங்கள் தேர்தலில் குதித்தகாலகட்டத்தில் உங்கள் பக்கம் தமிழ் மக்கள் சார்ந்தி ருந்ததை நான் நன்கு அறிந்து வைத்துள்ளேன்.

''ஆருக்கு வோட்போடாட்டிலும், மௌலா னாவுக்கு ஒரு வோட் போடவேண்டும்'' இப்படி எல்லாம் எத்தனையோ தமிழர்கள் பேசியதை நான் கேட்டி ருக்கிறேன்.

ஏன் என்றால் தமிழ் மக்களுக்கும் இவர் நடு நிலையாக சேவை செய்வார் என்ற நோக்கில் தான் தமிழ் மக்கள் அவ்வாறு கூறியிருப்பார்கள்.

இப்போதுதான் அந்த வாக்களித்த தமிழர்கள் நினைப்பார்கள் இந்த அலிசாஹிரைப் பற்றி.

எனவே பிரதமரின் கொள்கைத்திட்டமிடல் அமைச்சு ஆலோசகரான நீங்கள் கிழக்கில் நடைபெற்ற முஸ்லிம் கடத்தல்கள், கொலைகள் என்பவற்றுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் சம்பந்தமில்லை என்பதை முஸ் லிம் மக்களிடம் எடுத்துக் கூறுவதற்கு துணிவற்றவராக இருக்கிறீகள் என்பது தான் எனது வேதனை.

தேர்தல் காலத்தில் மட்டும் தமிழ் மக்களின் வாக்குகளை வசீகரிப்பதற்காக தமிழ் மக்கள் சேவகனாக பற்றுணர்வாளனாக ஒரு இன ஐக்கிய வாதியாகக் காட்டிக் கொண்டு இன விரிசல்கள் ஏற்படும் சூழ்நி லைகளில் முஸ்லிம் சமூகம் சார்ந்த கருத்துக்களை நியாயப் படுத்தி அறிக்கை விடுவது அவ்வளவு நல்ல காரியமல்ல என எண்ணத்தோன்றுகிறது.

இன்னும் எழுதலாம் எத்தனையோ விடயம் இருக்கிறது. இடம் போதவில்லை எனவே இனிமேலாவது இவ்வாறான துரதிஸ்ரவசமான கருத்துக்க்ளைத் தெரிவித்து தமிழினத்தின் மனங்களில் கசப்புணர்வுகளை ஏற்படுத்தாது இரு சமூகங்களின் இன ஒற்றுமைக்கான செயற்பாடுகளில் தொடர்ந்து பாடுபடுவீர்கள் என நம்புகிறேன்.

*இங்ஙணம்*

*அலைமகன்*

# தமிழன் என்ற ஒரே காரணத்தினால் பெறுமதியற்றுப் போய்விட்ட மனித உயிர்கள்

மட்டக்களப்பின் சரித்திரத்தில் ஒரு 'இருண்ட யுகம்' என்று கூறப்படுகின்ற காலகட்டத்தின் 13வது வருட நினைவுகளை இப்பிரதேசத்து மக்கள் மீட்டு வருகின்றார்கள்.

1990ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5ம் திகதி முதல் 9ம் திகதி வரையான ஐந்து நாட்களில், ஸ்ரீலங்காப் படையினரும், முஸ்லிம் ஊர்காவல் படையினரும், இந்த மண்ணில் ஆடியிருந்த கோரதாண்டவத்தை இப்பிரதேச வாழ் மக்களால் என்றுமே மறந்துவிட முடியாது.

'கறுப்பு செப்டெம்பர்' என்று இப்பிரதேச வாழ் மக்களால் வேதனையுடனும், அச்சத்துடனும் நினைவுகூறப்படுகின்ற இந்த வாரத்தில் மட்டும் சுமார் 700இற்கும் அதிகமான அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

பெண்கள், சிறுவர்கள், குடும்பஸ்தர்கள் என்ற பேதம் எதுவும் இல்லாமல் ஸ்ரீலங்கா இராணுவத்தினராலும், முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் அழைத்துச்செல்லப்பட்டு, கொலை செய்யப்பட்ட இந்தத் தமிழ் உறவுகள் பற்றிய நினைவுகள், ஆண்டுகள் 13 கடந்துவிட்டுள்ள நிலையிலும், மட்டக்களப்பு மக்களின் மனங்களில் ஆறாத ரணங்களாகவே இருந்து வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வந்தாறுமூலை, சத்துருக்கொண்டான், பனிச்சையடி, பிள்ளையாரடி, கொக்குவில் போன்ற கிராமங்களில் அழித்தொழிப்பு யுத்தம் ஒன்றை ஸ்ரீலங்காப் படையினர் கட்டவிழ்த்து விட்டிருந்தார்கள்.

கொலை, பாலியல் வல்லுறவு, கைது என்று தொடர்ந்த அவர்களுடைய அடாவடித்தனங்களுக்குப் பயந்து பெரும் பான்மையான தமிழ் மக்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேறி காடுகளுக்குள்ளும், கோயில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்தார்கள். வந்தாறுமூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் சுமார் 50,000 தமிழ் மக்கள் தமது உயிரைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கத்துடன் தஞ்சமடைந்திருந்தார்கள்.

1990ம் ஆண்டு செப்டெம்பர் மாதம்

செல்லப்பட்டார்கள். அவர்கள் கதியும் என்னவென்று இன்றுவரை எவருக்கும் தெரியவில்லை.)

**சத்துருக்கொண்டான் படுகொலை:**

கிழக்குப் பல்கலைக்கழகச் சம்பவம் நடைபெற்று நான்கு நாட்கள் கடந்த நிலையில், மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள்

இந்தக் கொலைகள் பற்றி விசாரிக்கவென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு முன் அந்த நபர் சாட்சியம் அளிக்கையில், "முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்ட பொதுமக்களின் கண்கள் மூடிக் கட்டப்பட்டன. அனைவரினதும் கைகளும் பின்புறமாகக் கட்டப்பட்டன. என்னை முந்திரிகை மரமொன்றின் கீழே படுக்குமாறு கூறி, கூரிய ஆயுதம் ஒன்றினால் தாக்கினார்கள். நான் நினைவிழந்து விட்டேன்" என்று தெரிவித்திருந்தார்.

இந்த முகாமிற்கு அருகில் வசித்தவர்கள் தெரிவித்த தகவல்களின்படி பொதுமக்கள் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்ட சிறிது நேரத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. அழுகுரல்களும், கதறல்களும் கேட்டன. பின்னர் புகை மண்டலம் தெரிந்ததுடன், பிண வாடையும் வீசியது.

இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்படாத, தமது வீடுகளில் மறைந்திருந்து தப்பிய கிராமவாசிகள் தெரிவித்தார்கள்.

இந்தச் சம்பவத்திலும், முஸ்லிம்



**"முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்ட பொதுமக்களின் கண்கள் மூடிக் கட்டப்பட்டன. அனைவரினதும் கைகளும் பின்புறமாகக் கட்டப்பட்டன. என்னை முந்திரிகை மரமொன்றின் கீழே படுக்குமாறு கூறி, கூரிய ஆயுதம் ஒன்றினால் தாக்கினார்கள். நான் நினைவிழந்து விட்டேன"**

1990ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தின் முதல் பத்து நாட்களில்மட்டும் சுமார் 1000 இற்கும் அதிகமான தமிழ் பொதுமக்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினராலும், ஸ்ரீலங்காப் படையினராலும், முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டார்கள் என்று சுயாதீன அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

வடக்குகிழக்கு மாகாணத்தில் காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகள், பிரதிப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் மட்டக்களப்பு சமாதானக் குழுவினருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்கள், இது சம்பந்தமாக அமெரிக்க சட்டக் கல்லூரி மாணவி பற்றீசியா லோரன்ஸ் மேற்கொண்ட ஆராய்ச்சியின் முடிவுகள், மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் பாராளுமன்ற உரை, தேசிய பாதுகாப்பு அமைச்சர் பாராளுமன்றத்தில் வழங்கியிருந்த பதில் -போன்றன, மட்டக்களப்பில் குறிப்பிட்ட இந்தக் காலப்பகுதியில் மாபெரும் மனித அனர்த்தங்கள் நடைபெற்றிருந்ததை வெளி உலகிற்கு எடுத்தியம்பியிருந்தன.

எடுத்ததற்கெல்லாம் "மனித உரிமை மீறல்கள்" என்று கூச்சல்போடும் சர்வதேச சமூகம் கூட, மட்டக்களப்பில் இத்தனை அப்பாவித் தமிழ் மக்களுக்கு நேர்ந்த அநீதி பற்றி வாய்திறக்காமல் மௌனமாகவே இருந்தது.

ஸ்ரீலங்கா இராணுவமும், முஸ்லிம் ஊர்காவல் படையினரும் நினைத்தது போன்று, 'தமிழ் மக்களின் உயிர்கள் பெறுமதி அற்றவை' என்று சர்வதேச சமூகமும் நினைத்திருந்ததோ தெரியவில்லை.

**பல்கலைக்கழகப் படுகொலை:**

1990ம் ஆண்டு ஈழப்போர் உக்கிரம் அடைந்ததைத் தொடர்ந்து, மட்டக்களப்புத் தமிழ் மக்கள் மீது

5ம் திகதி அதிகாலை கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சுற்றிவழைத்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றை

**- சாத்வீகன் -**

மேற்கொண்டார்கள்.

பல்கலைக்கழக வளாகத்திற்குள் தஞ்சமடைந்திருந்த பொதுமக்கள் அனைவரையும் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்திற்கு வருமாறு ஒலிபெருக்கி மூலம் அழைப்பு விடுத்தார்கள்.

குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என்று பாராமல் அனைவரையும் பல மணி நேரம் மைதானத்தில் சுட்டெரிக்கும் வெயிலில் நிற்க வைத்தார்கள். அதன் பின்னர் அந்த மைதானத்தில் குழுமியிருந்தவர்கள் மத்தியில் இருந்து படித்த, வாட்டசாட்டமான தோற்றத்தைக் கொண்ட 158 தமிழ் இளைஞர்களும், குடும்பஸ்தர்களும் தெரிவு செய்யப்பட்டு, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இ.போ.ச. பேரூந்துகளில் ஏற்றப்பட்டார்கள். இராணுவத்தினருடன் அங்கு வந்திருந்த ஏழு முஸ்லிம் ஊர்காவல் படையினரும், கறுப்பு முகமூடி அணிந்து இராணுவச் சீருடையில் வந்திருந்த மற்றும் ஐந்து பேருமே கிழக்குப் பல்கலைக் கழகத்தில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தில் இருந்து தமிழ் இளைஞர்களைத் தெரிவு செய்தார்கள் என்று சம்பவத்தை நேரில் கண்ட ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சாட்சி பகர்கின்றார்கள்.

இவ்வாறு பகிரங்கமாக ஸ்ரீலங்காப் படையினராலும், முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் அழைத்துச் செல்லப்பட்ட 158 தமிழ் இளைஞர்களுக்கும் என்ன நடந்ததென்பது 13 ஆண்டுகள் கடந்துவிட்டுள்ள நிலையிலும் தெரியாமலுள்ளது.

(இதேபோன்று 23.09.1990 இல் கிழக்குப் பல்கலைக்கழகம் மறுபடியும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் சுற்றி வழைக்கப்பட்டு அங்கு தங்கியிருந்த 16 தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் அழைத்துச்

அமைந்துள்ள சத்துருக் கொண்டான் 'போயஸ் டவுன்' (Boy's Town) என்னும் இடத்திலும் இதேபோன்ற ஒரு சம்பவம் இடம்பெற்றது.

09.09.1990 அன்று மாலை சத்துருக்கொண்டான் Boy's Town படை முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர், சத்துருக்கொண்டான் கிராமத்தையும், அருகிலுள்ள பிள்ளையாரடி, பனிச்சையடி, கொக்குவில் போன்ற கிரமங்களையும், சுற்றிவழைத்து அங்கிருந்து 184 தமிழ் பொதுமக்களை விசாரணைக்கென்று அழைத்துச் சென்றனர்.(இதில் 84 பெண்கள், 50 குழந்தைகள், இரண்டு கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் நான்கு மாதக் குழந்தை ஒன்றும், சில முதியவர்களும் அடங்கியிருந்தனர்) இவர்கள் அனைவருமே Bou's Town இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு கொலை செய்யப் பட்டார்கள். அவர்களது உடல்கள் பின்னர் எரியூட்டப்பட்டன.

**இந்தப் படுகொலைகளில் சம்பந்தப் பட்டதாகப் பொதுமக்களால் அடையாளம் காண்பிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளும், நபர்களும் இன்னும் சுதந்திரமாக உலாவிக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.**

இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டவர்களில் ஒரே ஒரு நபர் மட்டுமே பலத்த காயங்களுடன் உயிர் தப்பியிருந்தார்.

ஊர்காவல் படையினர் சம்பந்தப் பட்டிருந்தனர் என்று அப்பிரதேச வாழ் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

இதுபோன்று பல சம்பவங்கள் மட்டக்களப்பில் ஸ்ரீலங்காப் படையினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்லதொரு நீதி கிடைக்கவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயமே. ஜனாதிபதி ஆணைக்குழு, அது, இது என்று சில கண்துடைப்புக்கள் இடம்பெற்றனவே தவிர, பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்களுக்குச் சரியான நியாயம் கிடைக்கவில்லை என்றே கூறவேண்டும்.

இந்தப் படுகொலைகளில் சம்பந்தப் பட்டதாகப் பொதுமக்களால் அடையாளம் காண்பிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளும், நபர்களும் இன்னும் சுதந்திரமாக உலாவிக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

இந்தப் படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஸ்ரீலங்கா இராணுவ உயரதிகாரிகள், மேலதிக பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொண்டு உயர் அந்தஸ்துடன் காலம் கழிப்பதையும் நடைமுறையில் காணக்கூடியதாக இருக்கின்றது.


இத்தனை படுகொலைகளுக்கும் மறைமுக அங்கீகாரம் வழங்கி, இதுபோன்ற படுகொலைகளை ஒரு போரியல் யுக்தியாகவே மேற்கொண்டிருந்த ஸ்ரீலங்கா அரசாங்கமோ- இன்று சர்வதேச அரங்கில் மனித உரிமைகள் பற்றிப் பாரிய சொற்பொழிவுகளை நடாத்திக் கொண்டிருக்கின்றது.

சாதாரண பதவி உயர்வு வழங்கப் படாத ஒரு சிறு விடயம் கூட இன்று ஒரு பாரிய மனித உரிமை மீறலாகச் சித்திரிக்கப்படும் இந்த உலகத்தில், நூற்றுக்கணக்கில் கொன்று புதைக்கப்பட்ட மனித உயிர்களின் பெறுமதி கணக்கில்கூட எடுக்கப் படாதது ஆச்சரியமான விடயம்தான். அவை தமிழ் மக்களது உயிர்கள் என்பதனால்தான் பெறுமதியற்றுப் போய்விட்டனவோ?


# வரலாற்று எச்சங்களாகிவிட்ட பெரியபோரதீவுப் படுகொலை!

மேலே தரப்பட்டுள்ள செய்தியும், படமும் 1990ம் ஆண்டு ஆடி மாதம் வெளிவந்த அமெரிக்கப் பத்திரிகையான "NEWS WEEK" க்கின் பிரதியாகும். இதை நினைத்தால் நெஞ்சு வெடிக்கும். சோகக் கதைகளை சொல்லாமல் சொல்லும் செய்திகள் நிறைந்துள்ளன. இற்றைக்கு 13 ஆண்டுகளுக்கு முதல் கிழக்கு மாகாணத்திலுள்ள பெரிய போரதீவுக் கிராமத்தில் இலங்கை இராணுவம் நடத்திய காட்டுத்தர்பாவை நினைத்தால் நெஞ்சு விம்முகிறது- கண்கள் குளமாகின்றன.

1990ம் ஆண்டு ஆனி 11ம் நாள் மட்டக்களப்பு பொலிசார் யுத்தத்தை மீறினார்கள். விடுதலைப்புலிகளும், போரைத் தொடுத்தார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பொலிஸ் நிலையங்கள் புலிகள் கைவசமாகின. அரசு நிருவாகம் ஆட்டம் கண்ட நிலையில் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையம் புலிகளால் முற்றுகையிடப்பட்டது. நேர் வழியால் வரமுடியாத அரசு படைகள் அம்பாறையில் இருந்து வக்கியெல ஊடாக களுவாஞ்சிகுடி வந்து பொலிசாருக்கு உதவ முன் வந்தார்கள். இதை அறிந்த விடுதலைப் புலிகள் வக்கியெலப் பாதையை மூடித் தங்கள் பாதுகாப்பு அரண்களைப் பலப்படுத்தினார்கள். நள்ளிரவு 12மணிவரை நடந்த கோர யுத்தத்தில் இராணுவம் முன்னேறியது. மடை திறந்த வெள்ளம்போல் புகுந்த இராணுவத்தோடு மோதுவது தவறென உணர்ந்து தந்திரோபாயமாகப் பின்வாங்கிய விடுதலைப்புலிகள் பொது மக்களைத் தங்கள் பாதுகாப்பு நிலைக்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார்கள். விடுதலைப் புலிகளின் அபாய அறிவிப்புக் கிடைத்த நேரம் பயங்கர நள்ளிரவாகும். இதனால் மக்கள் எதுவும் செய்யமுடியாத நிலையில் கட்டிய உடுப்போடு குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு உயிர் காக்க ஓடினார்கள். வக்கியெலயால் புகுந்த படையினர் பலத்த அட்டகாசத்தோடு கண்டவர்களைச் சுட்டும், பாதையோரமிருந்த வீடுகளை எரித்தழித்தும் பட்டிருப்புப் பாலத்தை நோக்கி முன்னேறினார்கள். பட்டிருப்புப் பாலம் உடைக்கப்பட்டிருந்ததால் பிரயாணத்தைத் தொடர முடியாத இராணுவம் பின் வாங்கிப் பெரியபோரதீவில் தங்கினார்கள். படுவான்கரைப் பிரதேசத்தில் முன்னேறிய கிராமங்களில் பெரியபோரதீவு முன்னணி வகுத்த கிராமமாகும். ஆடம்பர வீடுகள்- பஞ்சம் என்று சொல்ல முடியாதளவு பௌதீக வழங்களைக் கொண்ட வீடு வாசல்களைக் கண்டவர்கள் பொறாமைப் பட்டார்கள். பொச்செரிப்பால் புழுங்கி -தீயிட்டுக் கொழுத்தினார்கள். ஒவ்வொரு வீடும் எரித்தொழிக்கப்பட்டபோது- பத்துப் பதினைந்து இலட்சங்கள் -எரிக்கப்பட்டு சாம்பலாகி வரலாற்றின் எச்சங்களாகின. இந்த ஏழு நாள்களில் இலங்கை இராணுவம் செய்த அடாவடித்தனங்களையும் அழிவுகளையும் தான் அமெரிக்க "நியூஸ் வீக்" படம் பிடித்துக் காட்டுகிறது. ஏழாவது நாள் கிராமத்தை விட்டகலும் போது எரித்தழிக்கப்படாத வீடுகளில் இருந்த தளபாடங்கள் மக்களின் சேமிப்பு -ஏன் கூட்டும்



துடைப்பான்களைக் கூட விட்டு வையாது அள்ளிச் சென்றார்கள். திரிபுரம் எரிந்ததையும்- மதுரை கண்ணகியால் தீக்கிரையாக்கப்பட்டதையும் காண்டாவனம் எரித்தழிக்கப்பட்டதையும் ஏன் நம் நாடு அனுமானால் அழிக்கப்பட்ட வரலாறுகளைப் புத்தகத்தில் படித்த அனுபவமுண்டு. ஆனால் பெரியபோரதீவு -அதுவும் என் ஐம்பது வருட பொதுவாழ்வால் கட்டியெழுப்பப்பட்ட கிராமம் என் கண்முன் சுட்டெரிக்கப்பட்டு சாம்பலானதைக் கண்டு கண்கலங்கியவர்களில் நானுமொருவன். முதல் 7 நாளில் 150க்கு மேற்பட்ட வீடுகளையும் -மாதிரிச் சந்தை-



## The Return of the Tiger

Sri Lanka's vicious ethnic war heats up once again

Murgesu Pandit, 35, is among the latest victims of Sri Lanka's ethnic war. A Tamil, she sobs as she sits in her modest, tin-roof house in the village of Periyaportiva and sifts through the ashes of her belongings. A charred sewing machine is all that she can find. Her yard is strewn with empty shell casings and ammunition boxes left by Sri Lankan soldiers. Nearly every structure in the village—the post office, the school, shops and houses—has been gutted by fire. Tamil villagers fled before the troops arrived last week, so none of them actually saw what happened. But they are convinced that the Sri Lankan Army set the fires as a reprisal against Tamil villagers suspected of supporting Tamil separatist guerrillas—the so-called Liberation Tigers of Tamil Eelam (LTTE).

After a brief but hopeful three-month



NEWSWEEK/JULY 2, 19

அஞ்சல் நிலையம் கடைத் தொகுதிகளையும் எரித்த ழித்து- துறையாடிச் சென்ற இராணுவம் -ஒருவாரத்தின் பின் திரும்பி வந்தார்கள்.உள்ளது அனைத்தையும் இழந்து தப்பிய உயிரோடு பெரிய போரதீவு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த அகதிகளை -நோக்கிச் சுட்டதில் முத்துலிங்கம், வள்ளியம்மை, ராணி,

போன்றோர் அந்த இடத்திலே மரணமடைந்தார்கள். பலர் காயமடைந்தார்கள். முனைத்தீவு ஸ்ரீமாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்த மக்களில் இந்தியாவில் இருந்து ஆலயச்சிற்ப வேலைகளுக்காக வந்திருந்த பார்த்திபன்-பாரதி போன்றோரை தெரிந்து எடுத்துச் சுட்டழித்தார்கள். அங்கிருந்து 10 இளைஞர்களைக் கூட்டி வந்து பெரியபோரதீவில் படுகொலை செய்தார்கள்- பெரியபோரதீவு ஆலயத்தில் இருந்து இராணுவத்தால் கூட்டிச் சென்ற 9 இளைஞர்கள் இன்னும் உயிர் திரும்பவில்லை. உயிரோடு உள்ளார்களா அல்லது அவர்களும் படுகொலை செய்யப்பட்டு விட்டார்களா என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்.

இவ்வாறு சிங்கள இராணுவத்தால் எரித்தழிக்கப்பட்ட பெரியபோரதீவு- தமிழ் அதிகாரிகளால் இன்றுவரை புறக்கணிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அழிந்த கட்டிடங்கள்- நினைவுச் சின்னங்களாகி வரலாறு படைத்துள்ளன.- நிவாரணம் கிடைக்கவில்லை. புனர் நிவாரணம் இன்னும் செய்யப்படவில்லை.13 வருடங்களுக்கு முன்போடப்பட்ட கிராம வீதிகள்தூர்ந்து துருப்பிடித்து - தூள் பறக்கின்றன. இதனால் சுகம் கெடுகிறது. சுற்றாடல் மாசு படிகிறது. பாழாய்ப் போன பழைய வீதிகள் போடப்படவில்லையென்றால் புதிய வீதிகள் கூட இல்லையே. பற்றி எரிந்த பாடசாலை பௌதிக வளமற்று- பாழாகவே இருக்கிறது. பாலர் படிக்கும் பாடசாலையின் பரிதாப நிலை இது முந்நாள் மட்டக்க ளப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராசதுரையினால்

**பூ.மா.செல்லத்துரை**

கட்டப்பட்ட மாதிரிச்சந்தை - எரிக்கப்பட்டு ஒரு மாதிரிச் சந்தையாகவே காட்சி தருகிறது. காசு மட்டும் வேண்டும். போரதீவுப் பிரதேச சபை அழிந்த மாதிரிச் சந்தையை ஆக்க முன்வரவில்லை .

மட்டக்களப்பு வாவிக்கு மேற்குப் பிரதேசத்தில் முதற்தர அஞ்சல் அலுவலகமாக இருப்பது பெரியபோரதீவு அஞ்சல் அலுவலகமாகும். இதுவரை சொந்தக் கட்டடிடமில்லாத அஞ்சல் நிலையம் 1990ஆம் ஆண்டு எரித்தழிக்கப்பட்ட பின்பும் பொதுமக்கள் கட்டிடத்திற்கான காணியை அன்பளிப்புச் செய்த பிறகும். அலைக்கழிக்கிறது அஞ்சல் திணைக்களம் கேட்டால் அஞ்சேல் என்று கூறுகிறார்கள். இவைகள் அரசு தரப்பு அதிகாரிகள் மட்டப் புறக்கணிப்புக்கள்.

அழிந்த கிராமங்களை ஆக்கித்தர வந்த அரச சார்பு - நோராட் - டேபா - நியாப்புத் திட்டங்களில் இக்கிராமம் சேர்க்கப்படாதது யார்குற்றம்? அரச சார்பற்ற நிறுவனங்கள் இக்கிராமத்தைப் பொறுத்த வரையில் கழுவிய மீனில் நழுவிய மீனாக நடப்பதன் மூலம் உலக நாடுகள் கஷ்டப்படும் மக்களுக்கு உதவ - அள்ளிக் கொடுக்கும் பணங்கள் உதவாக் கரங்களில் மாட்டி விட்டனவோ? எனச் சிந்திக்க வைக்கிறது. இதுவரை இக்கிராமத்தைச் சந்தித்த அரச சார்பற்ற நிறுவனம் எதுவுமில்லை. ஏனிந்தப் புறக்கணிப்பு எதற்கிந்தப் பாகுபாடு.

இக்கிராமத்தைப் புனரமைப்புச் செய்யுமாறு வேள்விசனிடம் இருமுறை போரதீவுப் பகுதி பிரதேச செயலாளர்கள் இருவர் எழுத்துமூலம் வேண்டியும் வேள்விசன் மட்டக்களப்பு நிருவாகிகள்- கவனமெடுத்ததாகத் தெரியவில்லை.

இப்பகுதி விடுதலைப்புலிகளின் நிருவாகத்துக்கு உட்பட்டதால் புறக்கணிக்கப்படுகிறதா? என்ற ஐயம் மக்களிடையே வேரூன்றுவதால் புலிகளே இதை உங்கள் கவனத்திற்கு விட்டு விடுகிறோம்.

## இனிக்கொலை வருமெனில்...?

மட்டக்களப்பு மண்ணே-நீ
மாற்றான் படைகளால் பட்ட துன்பன்
மனதுக்குள் இன்னும் கொதிக்கிறது
சிங்களப்படை, இந்தியப்படை
காட்டிக் கொடுக்கும் ஒநாய்கள்
காவாலிக் கூட்டம், காடையன்
முஸ்லிம் கும்பல்கள் என்று
முடுமைகளால் வந்த துன்பம்
மூளையில் இன்றும் நிற்கிறது.
பிஞ்சுகள் அழிந்ததும்
கொஞ்சு விளையாடிய
குழந்தைகள் இறந்ததும்
வஞ்சகர் வலைகளால்
வதைபட்டு எம்மினம் குருதி சிந்தியதும்

கதையல்ல இது உண்மை
காலம் கடந்தாலும்
ஓலமிட்ட அந்த நாட்களை
இன்று நினைக்கையிலும்
என் நெஞ்சு வலிக்கிறது!
வயலில் சென்றவர்கள்
அயலில் நின்றவர்கள்
கடலில் மீன் பிடித்தவர்கள்
கஷ்ரப்பட்டு உழைத்தவர்கள்
மனைகளிலே தூங்கியவர்கள்
மாடிகளில் ஒளித்தவர்கள்
குடிசையில் படுத்தவர்கள்
கோயிலில் தஞ்சமடைந்தவர்கள்
அகதி முகாம்களில் அடிபட்டுச் சென்றவர்கள்
மாணவர்கள், பெண்கள், முதியவர்கள்
மகான்கள் மதப் பெரியார்கள்
மாணிக்கங்கள் எல்லாம்
மாற்றான் அழித்த வேளை
மட்டக்களப்பு மண்ணே
மாரடித்து நீ அழுதாயே!
உன்னை தேற்றவும் எவரும் இன்றி
ஒப்பாரி வைத்த காட்சி
உலகமே நன்கறியும்.
என்ன செய்வோம் எங்கள் படை
அப்போது பெருகவில்லை
அதனால் அன்னியர்கள்
ஆண்ட தமிழ் மண்ணை உதைத்தனர்
அடி உதை வெடிகுண்டால்
ஆக்கிரமிப்பு செய்தனர்
ஆனால் இன்று வேறு
இது வீரம் விளை நிலம்
வெற்றிப் பெரு நிலம்
வேங்கைகள் உறைவிடம்
விடிவு அதனிடம் அதனால்
சோதனைகள் வந்தாலும்
துன்பங்கள் நேர்ந்தாலும்
கொடுமைகளை எதிர்த்து
அடிமைகளை வாழவைக்கும்
கொள்கையுள்ள தமிழ்ப்படை எமக்குண்டு!
இனிக் கொலைகள் வருமெனில்
தலைகள் கொய்வது சத்தியம் என்று
தமிழ் இன உயிர்க் கொலை நாளில்
தமிழர் நாம் உறுதி கொள்வோம்!.

அம்பிளாந்துறை அரியம்

# சத்துருக்கொண்டான் கொடூரக்கொலையில் தப்பிவந்தவர் கூறும் அனுபவப் பகிர்வுகள்.

இரண்டாம் கட்ட ஈழப்போரின் ஆரம்ப காலத்தில் அதாவது 1990ம் ஆண்டு காலப்பகுதியில் சிங்களப்படைகளால் திட்டமிட்டுப் பல படுகொலைகள் தொடர்ந்தும் பல கிராமங்களில் இடம்பெற்றன. குறிப்பாகச் சிங்களப் படைகளால் வந்தாறுமூலை பல்கலைக்கழகம், உடும்பன்குளம், மகிழடித்தீவு, பெரியபுல்லுமலை, சத்துருக்கொண்டான் படுகொலை, மயிலந்தனைப் படுகொலை இப்படி ஒவ்வொரு தமிழ்க் கிராமங்களிலும் ஒன்றும் அறியாத அப்பாவித் தமிழ் மக்களைக் கண்ட இடமெல்லாம் வெட்டியும், சுட்டும் சித்திரவதை செய்தும் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டு அநாகரிகமான முறையில் கொல்லப்பட்டனர். கர்பிணித்தாய்மார்கள், சிறுவர்கள் குழந்தைகள் கொடுமைப்படுத்தப்பட்டு கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்பட்டும், கடத்திச் செல்லப்பட்டும் அடை யாளம் தெரியாத வகையில் சித்திர வதை செய்துகொல்லப்பட்டனர். தமிழ் மக்களின் உயிர்கள் வகைதொகையின்றி பறிக்கப்பட்டன. அவர்களின் உடமைகள் அழிக்கப்பட்டன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களிலிருந்தும் விரட்டப்பட்டு அகதிக ளாக்கப்பட்டனர்.

இந்த இன அழிப்புப் படுகொலையில் 9.9.90ல் நடாத்தப்பட்ட சத்துருக்கொண்டான் படுகொலையும் மிகக் கொடூரமானது. இப்படு கொலை சத்துருக்கொண்டான். கொக்குவில், பனிச்சையடி, பிள்ளையாரடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அப்பாவித் தமிழ் மக்கள் 186 பேரை ஒன்றாகக் குவித்து அடையாளம் தெரியாமல் கொடூரமாகக் கொன்றழித்த மிக மோசமான படுகொலையாகும்.

1990ம்ஆண்டு ஒவ்வொரு கிராமத்திலும் "வெட்டுப்பாட்டி " என்ற வெறியாட்டப் படையினர் நடத்திய கோரமான கொலைகளுக்குத் தமிழ் மக்கள் அஞ்சி தமது இருப்பிடங்களை விட்டுச் சிதறி ஓடிப் பாதுகாப்புத் தேடி, பாடசாலைகள், ஆலயங்கள், பொதுக்கட்டிடங்கள், என்பவற்றில் கூட்டம், கூட்டமாக இருந்தனர். இதுதான் அந்த வெறியாட்டக்காரர்களுக்கு வசதியாக இருந்தது. இப்படிக் கூட்டம் கூட்டமாக இருந்தவர்களைச் சேர்த்து ஒரே இடத்தில் கொன்ற படுகொலைதான் சத்துருக் கொண்டான் படுகொலையாகும்.

இப்படுகொலையின் போது கிராமத்தில் இராணுவச் சுற்றிவளைப்பில் அகப்படாமல் தப்பியவர்களும் பிடிபட்டு இப்படுகொலையை நேரில் கண்டு வெட்டுக்காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பிவந்த ஒருவரின் தகவல்களின் படி இப்படுகொலைச் சம்பவத்தைப் பார்ப்போம்.

17.08.1990 அன்று வெட்டுப்பாட்டி என்ற அரச படையினர் சத்துருக்கொண்டான் என்ற கிராமத்திலுள்ள "போய்ஸ்டவுன்" என்ற முகா மிற்கு கெப்டன் திஸ்ஸவர்ணகுலசூரிய என்ற அதிகாரியின் தலைமையில் வந்திருந்தனர். இவர் கள் வந்த அன்றே கொக்குவில் கிராமத்துக்குள் புகுந்து 24பேரைப் பிடித்து மாரியம்மன் கோவில் சந்திக்குக் கொண்டு வந்து அடித்துச் சித்திரவதை செய்தனர். இதில் மரியநேசம், சுப்பிரமணியம், தவராசா, குமாரசாமி ஆகிய நால்வரையும் அந்த இடத்திலேயே அடித்துக் கொன்றனர். பின் டயர் போட்டு எரித்தனர். இதனை அடுத்து 08.09.1990 அன்று சத்துருக்கொண்டான் கொளனிக்குள் சீருடையுடன் சென்ற படையினர் அங்கே தென் னந் தோட்டத்தில் ஓலைமட்டை எடுத்துக்கொண்டிருந்த த.கணபதிப்பிள்ளை, இளையான் ஆகிய இருவரையும் அவர்கள் கொண்டு வந்த மட்டையே போட்டு உயிருடன் எரித்துக் கொன்றனர்.

இதனால் அக்கிராமத்திலுள்ள மக்கள் சிதறி ஓடினர். அநேகமானவர்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றனர். எஞ்சியவர்கள் பெரியவீடுகளில் பயத்துடன் ஒன்றாகச் சேர்ந்து இருந்தனர். இதைப் பயன்படுத்திய அரச படையினர் ஒட்டு மொத்தமாக இக்கிராம மக்களையே கொன்றொழிக்கத் திட்டம் தீட்டினர்.


09.09.1990 அன்று பி.ப.5.00 மணியளவில் கெப்டன் திஸ்ஸவர்ணகுலசூரி யாவின் தலைமையில் சீருடையுடன் சத்துருக் கொண்டான், பனிச்சையடி, கொக்குவில், பிள்ளையாரடி ஆகிய கிராமங்களைச் சுற்றி வளைத்தனர். ஒரு பகுதியினர் மெயின் வீதி வழியாக பிள்ளையாரடிக் கிராமத்தைச் சுற்றிவளைத்தனர். மற்றையவர்கள் "போய்ஸ்டவுன்" முகாமிற்கு பின்புறமாக வந்து சத்துருக்கொண்டான் கொலனி ப்பக்கமாகச் சென்று அங்கு ஒரு வீட்டில் இருந்தராசா என்பவரையும், அவரின் மனைவி நேசம்மா, 4 பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வந்து பக்கத்து வீடுகளில் இருந்த கணபதிப்பிள்ளை குடும்பத்தினர், அழகையா குடும்பத்தினர், கதிர்காமத்தம்பி, கண்மணி குடும்பத்தினர்கள் நற்குணசிங்கம் மனைவி சித்தி இவர்களின் 3 மாதக்குழந்தை அனைவரையும் அழைத்து "நீங்கள் ஒன்றும் பயப்பட வேண்டாம் உங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கத்தான் வந்துள்ளோம், உங்களுக்கான எல்லா உதவிகளையும் செய்வோம். எங்களுடன் வாருங்கள்" எனக் கூட்டி வந்து பனிச்சையடிச் சந்தியில் இருக்கவைத்தனர். அதன் பின் பக்கத்து வீட்டிலிருந்த கிருபைரெட்ணம் குடும்பம், பேரின்பம் குடும்பம் இவர்களின் வீட்டிலிருந்த மற்றைய குடும்பங்கள் அனைவரையும் சந்திக்குக் கூட்டி வந்தனர். இதில் பேரின்பம் மனைவி பரஞ்சோதியுடன் நந்தினி என்ற பிள்ளையும் இவர்களுடன் நடக்கமுடியாத, முடமான பேசமுடியாத ஊமை பிள்ளைகள் 4வரும் இருந்தனர். இவர்களை தூக்கிவர முடியாது எனக்கூற. இவர்களை நாங்கள் முகாமிற்கு கொண்டுபோய் பாதுகாப்பு வழங்குவதுடன் சுகமாக்கியும் தருவோம்" என கூறி இவர்களை மற்றவர்களை துக்கிவரும்படி கூறினர். இவர்களின் நயவஞ்சகத் தன்மையை அறியாத அப்பாவி மக்கள் ஒன்றும் அறியாத அந்த வலது குறைந்த பிள்ளைகளையும் தூக்கிக் கொண்டு வந்து சந்தியிலே வைத்தனர். இதன் பின் பரமக்குட்டி என்பவரின் வீட்டில் ஒன்றாக இருந்த 20 குடும்பங்களைச் சேர்ந்த அத்தனை பேர்களையும் பனிச்சையடிச் சந்திக்கு கொண்டு வந்து அனைவரையும் ஒன்றாகச் சேர்த்தனர். இப்படிப் பனிச்சையடிச் சந்தியில் சேர்க்கப்பட்டவர்கள் கொக்குவில், பிள்ளையாரடியில் பிடிக்கப்பட்டவர்கள். எல்லோரையும் கொத்துக்குளத்து மாரியம்மன் கோவில் சந்திக்குக் கொண்டு வந்த பின் 7.00 மணியளவில் போய்டவுன் முகாமிலுள்ள ஒரு பெரிய கட்டிடத்தில் (முன்னர் அரிசி ஆலை இருந்த கட்டிடத்தில்) 63 குடும்பத்தைச் சேர்ந்த 177 பேரையும் ஒன்றாக அடைத்தனர்.

இப்படி ஒன்றாக இருட்டுக் கட்டிடத்

**அ.சத்தியன்**

துக்குள் அடைத்த பின்னர் அனைவருக்கும் பயமும், பீதியும், நடுக்கமும் ஏற்பட்டது. எல்லோரும் அழத்தொடங்கினர். ஒவ்வொரு குடும்பத்தினர்களும் அவர்களின் சொந்த உறவுகளைக் கட்டிப்பிடித்து முணுமுணுத்தவாறு அழுதனர். எல்லோரும் "கடவுளே எங்களைக் காப்பாத்து" எனக் கடவுளை வேண்டினர்.

இவர்களை அடைத்த பின்னர் தமது சீருடைகளைக் கழற்றி வைத்துவிட்டு சாரத்துடன் மது அருந்தத் தொடங்கினர். எல்லோரும் குடித் துவிட்டு வாள் கத்தி என்பவற்றை எடுத்துப் பூட்டிய கதவைத் திறந்தனர். இவர்களை இருட்டில் அரைகுறையாகக் கண்டமக்கள் அழத்தொடங்கினர். இவர்களில் மூவரை வெளியே எடுத்தனர். "இவர்களை நாங்கள் விசாரிக்க வேண்டும். இது மற்றவர்களுக்குத் தெரியக் கூடாது. இப்படி விசாரிக்கும் போது நாங்கள் அடித்தால் மற்றவர்கள் சத்தம் போடக் கூடாது" என அனைவரின் கண் களையும் கட்டினர். குமார் வயது 27 ஜீவானந்தம் வயது 33 கிருஸ்ணகுமார் வயது 22 ஆகிய மூவரையும் முகாமின் பின்பக்கமாக கொண்டு சென்று சித்திரவதை செய்தனர். கத்தி யால் குத்திக் கொன்றனர். இதில் காயங்களுடன் ஒருவரின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. அவரின் இரு கண்களுமே இந்த வெறியாட்ட



விழாவைப் பார்த்துக் கொண்டிருந்தன.

பின்னர் வயது முதிர்ந்த ஆண்களை எடுத்து ஒவ்வொருவராக இரும்புக் கம்பியால் அடித்துக்கொன்றனர். கால்களையும், தலைகளையும் வெட்டி அங்கே ஏற்கனவே தோண்டப்பட்டிருந்த பெரிய குழியில் போட்டனர். இதன் பின் வயதுபோன பெண்களைக் கொண்டு வந்து கம்பியாலும் பொல்லாலும் அடித்துக் கொன்று குழியிலே போட்டனர். அடுத்து திருமணம் முடித்த அனைத்து ஆண்களையும் கண்களை கட்டிக் கொண்டு வந்து கொன்றனர். பின் இளைஞர் களை கண்களைக் கட்டிக் கொண்டு வந்து கையையும் கால்களையும் வெட்டி குழியிலே போட்டனர். பின் சிறுவர்களையும், குழந்தைகளையும் கொண்டு வந்து சாய்ந்து கிடந்த முந்திரிகை மரத்தில் ஒவ்வொருவராகப் படுக்க வைத்து இரண்டு துண்டுகளாக வெட்டி குழியிலே போட்டனர்.

குழந்தைகளைக் கால்களால் மிதித்தும், கழுத்தைத் திருகியும் கொன்றனர். இந்த கொடு மைக்காரர்கள் பேசமுடியாத ஊமையாக இருந்த நடக்க முடியாது முடமாக இருந்த அந்த வலது குறைந்த 4 பிள்ளைகளையும் விட்டுவைக்க வில்லை. அவர்களை முந்திரிகை மரத்தில் போட்டு துண்டுதுண்டாக வெட்டிக் கொன்றனர். பின் சிறிது நேரம் ஓய்வு எடுத்த பின் எஞ்சி இருந்த இளம் யுவதிகளை வெளியே எடுத்து அவர்களை நிர்வாணமாக்கி காட்டு மிராண்டித்தனமாக அவர்களின் காமப் பசியைத் தீர்த்தனர். அவர்களை அலங்கோலப் படுத்தி மனித நேயமுள்ளவர்கள் எவர்களாலும் ஏற்றுக்கொள்ள முடியாத அநாகரீகமற்ற முறையில் அவர்களைச் சின்னா பின்னப்படுத்தி அவர்களின் வாய்களில் கறுப்புச் சேலையைத் திணித்தனர். இவர்களை அரைகுறை உயிருடன் குழியிலே கொண்டுபோய் போட்டனர். இப்படி அனைவரும் ஒரே குழியில் ஒன்றாக குவித்தனர். அந்த மடு நிறைந்தது.

இதன் பின் பெற்றோல், மண்ணெண்ணை என்பவற்றை இவர்கள் ஊற்றினர். எரிபொருள் போதாமையால் இன்னும் எடுப்பதற்காக வெளியில் சிலர் சென்றனர். மற்றவர்கள் களைப்பிலும் மதுபோதையிலும் மயக்கத்துடன் படுத்தனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்த இரு கண்களும் மெதுவாக அந்த இடத்தை விட்டு வெளியேறி பாதையில்பத்தையில் மறைந்தன். எரிபொருளுடன் வந்தவர்கள் இரத்தம் வடிய வெளியே வந்தவரின் இரத்த அடையாளத்தைக் கண்டு வந்த வழியே தேடினர். அவர்கள் மதுபோதையில் இருந்ததால் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை இவர் ஒளிந்திருந்து மேலும் நடக்கும் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். கொண்டுவந்த பெற்றோலையும் திரும்ப ஊற்றி, அனைவரையும் ஒன்றாகப் பற்றவைத்தார்கள். எங்கும் ஒரே புகை மண்ட லமாகக் காட்சியளித்தது. உடல்களும் மண்டை ஓடுகளும் வெடிக்கும் சத்தம் தான் கேட்டன. இதன்பின் 2.00 மணியளவில் தப்பியவர் தவண்டு வந்து ஒரு வீட்டிற்கு வந்து பின் வைத்தியசாலைக்குச் சேர்க்கப்பட்டார்.

இவர் தப்பி வந்து வைத்தியசாலையில் இருப்பதை அறிந்த இராணுவத்தினர் வைத்தியசாலையை முற்றுகையிட்டுத் தேடினர். அங்கே எம் இரத்த உறவுகள் மறைத்து வைத்துக் காப்பாற்றினர். முகாமில் எரிக்கப்பட்ட அப்பாவி மக்களின் உடல்கள் இரண்டு நாட்களாக எரிக்கப்பட்டு பின் அடையாளம் தெரியாமல் மறைக்கப்பட்டன.

| | |
|---|---|
| 50 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் | 23பேர் |
| 50 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் | 18பேர் |
| 50 வயதிற்கு கீழ்ப்பட்ட திருமணமான ஆண்கள் 13 | |
| 50 வயதிற்குக் கீழ்ப்பட்ட திருமணமான பெண்கள் 33 பேர் | |
| 25 வயதிற்குக் கீழ்ப்பட்ட திருமணமாகாதவர்கள் ஆண்கள் 16பேர் | |
| 25 வயதிற்குக் கீழ்ப்பட்ட திருமணமாகாதவர்கள் பெண்கள் 23 பேர் | |
| 10 வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்கள் 20 பேர் | |
| 10 வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுமிகள் | 21 பேர் |
| ஊமைகள், முடமான குழந்தைகள் | 04 பேர் |
| குழந்தைகள் | 04 பேர் |
| கர்பிணித்தாய்மார்கள் | 02 பேர் |
| 63 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மொத்தம் | 177பேர் |
| 17.08.1990 கொல்லப்பட்டவர்கள் | 04பேர் |
| 08.09.1990 கொல்லப்பட்டவர்கள் | 02பேர் |
| 02.04.1991 கொல்லப்பட்டவர்கள் | 03பேர் |
| **மொத்தமாக விபரம் கிடைத்தவர்கள்** | **186 பேர்** |

இப்படி அநியாயமாகக் கொல்லப்பட்ட அப்பாவிகள் கொடூரத்தை நேரில்கண்ட சாட்சியுடன் கிராமத்தவர்கள் பொது நிறுவனங்களின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரசுக்கும், சர்வதேச நாடுகளுக்கும் எடுத்துக் கூறியும் இதுவரை அதற்கான எந்த முடிவும் கிடைக்கவில்லை. இனவெறி அரசும் அதன் படைகளும் அனைத்தையும் மறுத்து மறைத்தனர்.

ஆனால் தமிழ் மக்கள்இந்தக் கொடூரத்தை என்றும் மறக்கமாட்டார்கள். இப்படி தம் இரத்த உறவுகளுக்கு ஏற்பட்ட அந்தக் கதியை என்றும் இதயத்தில் பதிய வைத்திருக்கிறார்கள். அவர்களின் நெஞ்சங்களில் அந்த வடுக்கள் பதிந்துதான் இருக்கின்றன. இந்த அழிக்க முடியாத தழும்புகள் என்றும் ஆறாது.

இன்று எங்களைவிட்டுப் பிரிந்த அந்த 186 ஜீவன்களின் நினைவாக பனிச்சையடி சந்தியிலே நினைவுத் தூபி எழுப்பி நினைவு கூறுகின்றனர். இந்தக் கொடூரத்தின் கோரவிதையை விதைத்தவர்கள் என்றோ அறுவடை செய்யத்தான் வேண்டும். ஆனால் குருதி தோய்ந்த இந்த இரத்த உறவுகளின் நினைவுகள் ஒவ் வொரு தமிழ் நெஞ்சத்திலும் என்றும் பசுமை யாகவே பதிந்திருக்கும்.

□□□

# இனவெறித் தாண்டவத்தால் புனாணை மண்ணில் பிணமாகிப்போன தமிழ் உறவுகள்

மட்டக்களப்பு கோரளைப்பற்று மேற்கில் அமைந்துள்ள வளமான கிராமம் மயிலந்தனைக் கிராமம். புனாணையில் இருந்து வாகரை வரை எந்தப் பக்கம் திரும்பினாலும் பசுமையான வயல்வெளிகள் காட்சிதரும். வடக்குப் பக்கம் வாகரை நோக்கி மட்டுமல்லாது தெற்குப் புறமாக குடுமிமலைவரையும் வயல்வெளிகள் பரந்து கிடக்கும். விளைச்சல் நிலங்கள் மட்டுமன்றி மேய்ச்சல் நிலங்களும் செறிந்து காணப்படுவதால் பசுமாடுகள் பல்லாயிரக் கணக்கில் இக்கிராமத்து மக்களால் வளர்க்கப்பட்டன. கால்நடை அபிவிருத்திப் பண்ணையொன்று இதற்கென அமைக்கப்பட்டுள்ளது. 1500 ஏக்கர் நிலப்பரப்பு இதற்கென ஒதுக்கப்பட்டிருந்தது. வாழைச்சேனைக் கடதாசி உற்பத்தி ஆலைக்குரிய உற்பத்திக்கென இதில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது.

மகாவலி கழிவுநீர் பாய்ந்து கலக்கும் மாந்தையாறு (மாதுறு ஓயா) பெருக்கெடுத்துப்பாய்ந்து இக்கிராமத்துக்கான வளத்தை அள்ளி ஒதுக்கியது. இதனால் மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கென கால்நடைப் பண்ணையில் இருந்த நிலத்திலிருந்துஒரு பகுதி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. வளமான தமிழ்க் கிராமத்தை கூறுபோட்டு தமிழர்களை இல்லாதொழிக்கும் திட்டம் மெது மெதுவாக நிறைவேறத் தொடங்கியது. மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமமாக மட்டுமல்லாமல் செல்வச் செழிப்புக் குன்றாத தமிழ்க் கிராமமாகவும் இது விளங்கியதால் சிங்களவர் ஒருபுறமாகவும் முஸ்லீம்கள் ஒருபுறமாகவும் இக்கிராமத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கினர். பொலனறுவை மாவட்டத்தோடு இக்கிராமத்தின் பெரும் பகுதியை இணைக்கும் முயற்சியில் சிங்களவர் முயற்சிக்க முஸ்லீம்கள் வகை தொகையின்றிக் குடியேறி முஸ்லீம் கிராமமாக்கும் முயற்சியில் இன்னுமொரு பக்கமாக நடந்தேறியது.

500 ஏக்கர் நிலத்தைச் சிங்களவர் அபகரிக்க 650 ஏக்கரை முஸ்லீம் குடும்பங்கள் இன்னுமொரு பக்கத்தால் குடியேறி



நிலத்தைப் பிடித்தனர். இன்று முஸ்லீம்களுக்கு அங்கு தனிமையான கிராம சேவகர் பிரிவு வேண்டுமென்று கேட்குமளவிற்கு இக்கிராமம் பறிபோய் விட்டது.

1990ம் ஆண்டு இங்கிருந்து கடைகளையும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தையும் கால்நடை அபிவிருத்திப் பண்ணையினையும் சுற்றிவளைத்துக் கொண்ட இராணுவத்தினர் அங்கிருந்த எல்லாப் பொருட்களையும் கொள்ளையிட்டுக் கட்டிடங்களையும் இடித்துத் தள்ளினர். இங்கிருந்த இருநூறிற்கு மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் உயிர்க் காப்புத் தேடி கல்லடி வெட்டைப் பக்கமாக ஓடினார்கள். வளமும் எழிலும் மிக்க தங்கள் கிராமத்தை எதிரியிடம் பறிகொடுக்கக் கூடாதெனக் கருதிய மக்களில் பலர் (36 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்) மீண்டும் தங்கள் கிராமத்துக்கு வந்து வீடுகளைத் திருத்தியமைத்து வாழத்தொடங்கினார்கள்.

ஓட்டமாவடியில் இருந்து புனாணை மயிலந்தனை வரை தனிமுஸ்லீம் பிரதேசமாக வேண்டுமென்று முஸ்லீம்கள் திட்டமிட்டனர். அதனால் சிங்கள இராணுவத்தினருடன் சேர்ந்து புனாணை மயிலந்தனைத் தமிழர்களைக் கொல்வதிலும், உடமைகளைக் கொள்ளையிடுவதிலும் ஈடுபட்டார்கள். காமினிதிசாநாயக்க மகாவலி அபிவிருத்தி என்ற பெயரால் இக்கிராமத்தில் சிங்களவர்களைக் குடியேற்றத் தொடங்கினார்.

பன்சல (பாஞ்சால) ஒன்றை இக்கிராமத்தில் கட்டி ‘சித்த புர’ என மயிலந்தனை என்ற கிராமத்தைச் சிங்களப் பெயராக மாற்றினார். முனியாண்டிக்கட்டை ஏத்தத்திற்கு ‘றிவிதன’ எனச் சிங்களப் பெயர்மாற்றம் செய்தனர். அன்றிருந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் இதில் பாராமுகமாகவேயிருந்தனர். இக்கிராமத்து மக்கள் இதனை எதிர்த்தெழுந்தனர்.

தமிழர்களின் எதிர்ப்பை அடக்கவும் அவர்களைக் கொன்று குவிக்கவும் கருதிய சிங்கள ஏகாதிபத்திய அரசு மிகப்பெரிய இராணுவமுகாம்களை இங்கு நிறுவியது. கரடிவச்சகுளத்தில் ஒரு பெரும் படைமுகாம் நிறுவப்பட்டது. வாகனேரி நாவலடிக்கிராமங்களிலும் இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டன. சிறப்பானதும் தரமானதுமான புகையிரத நிலையமொன்று புனாணையில் அமைந்துள்ளது. இரவு பகல் போக்குவரத்து வசதிகள் கொண்ட இக்கிராமத்தில் ஆடு மாடுகள் மாத்திரமன்றி மேட்டுநிலப் பயிர் செய்கையில் விளைவிக்கப்படும் மரக்கறி வகைகள் கொள்வனவு செய்யப்படக் கூடிய இடமாகவும் விளங்கியது. உடலுழைப்பால் உயர்ந்து விளங்கிய இக்கிராமத்தைச் சிங்கள இராணுவத்தினர் முற்றாக அழிக்க முடிவெடுத்தனர். முஸ்லீம்களும் இதற்குத் துணை நின்றனர். 1992ம் ஆண்டு ஆவணித் திங்கள் 9ம் நாள் அத்துயரம் நடந்தேறியது. 36(முப்பத்தாறு) பொதுமக்கள் வெட்டிக் கொல்லப்பட ஏனையோர் நாலாபுறமும் சிதறி ஓடித் தப்பிக் கொண்டனர். ஓடித் தப்பிய இக்கிராம மக்கள் இன்றுவரை தமது கிராமத்துக்குத் திரும்ப முடியவில்லை.

நியாயத்தைத் தேடித்தர யாருமின்றி நிர்க்கதியாய் நிற்கின்ற இக்கிராம மக்களில் பொன்னையா - யோகராசா, பொன்னையா-தெய்வநாயகம், காளிமுத்து -குணசீலன், ஆகிய மூவரையும் சந்தித்து இக்கிராமத்தில் நடந்து முடிந்த படுகொலையின் விபரங்களைக் கேட்டறிந்தேன். தங்கள் கிராமத்தைப் பறிகொடுக்காது மீண்டும் அங்கு செல்லத் துடிக்கும் இவர்கள் தங்கள் கண் முன்னே நடந்த படுகொலை பற்றிச் சொல்லிக் கண்கலங்கினார்.

**மணலாறு விஜயன் எழுதிய மௌனப் புதைகுழிகள் நூலிலிருந்து...**

கரடிவச்ச குளத்தில் ஆமி காம்ப் பண்ணின உடன கிராமத்துக்குள்ள ஒருநாள் வந்தாங்கள். நாங்கள் பயந்து ஓட வெளிக்கிட்டம். ஒருத்தரும் ஓட வேண்டாம். ஏன் பயப்படுறியள் பயப்படவேண்டாம். நாங்கள் ஒன்றும் செய்யமாட்டம் எண்டு சொல்லிட்டுப் போட்டாங்கள். நாமபயத்தில ஏற்கனவே மூண்டு இடத்தில கிட்டக்கிட்ட வாடியளப் போட்டிட்டு ஒண்டாயிருந்தம். ஏதும் பிரச்சினையெண்டால் ஒண்டாய்த் தப்பிப் போகலாம் என்று நினைச்சம்.

ஆமி வந்து ‘‘பயம் வேண்டாம் நாம் ஒண்டும் செய்கிறதில்லை” எனச் சொல்லிப் போட்டுப் போட்டான். மறுகா மூன்று நாள் கழிச்சுப் பார்த்தால் ரெண்டு லைனில வாறாங்கள். தலையை மூடி சறத்தால கட்டிக் கொண்டு வாறாங்கள். மதியம் ஒண்டரை மணியிருக்கும் சாப்பிடுற நேரம் வெயிலுக்காகத் தலையை மூடிட்டு வாறாங்கள் என நினைச்சம். எங்கட பொம்பிளையள் பலர் உரலும்,உலக்கையுமாய் அடுப்படியும் சமையலுமாய் இருந்தாங்கள். அவர்கள் சாப்பாட்டு ரைமைப் பாத்து வந்ததுக்கு காரணம் வயலுக்கு, தோட்டத்திற்கு போன ஆம்பிளையள் சாப்பிட வருவாங்கள் எண்டுதான்.

றோட்டால வாறாங்கள். எங்கையோ போகப்போறாங்கள் என நினைச்சம். மறுகாப்பாத்தால் நேரவாறாங்கள். வந்தவங்கள் எல்லா வீட்டிற்கும் போய் எல்லாரும் நடவுங்கோ. பெரியதுரை உங்கள வரட்டுமாம் விசாரிச்சுப் போட்டு விடுவார் எனச் சொல்லிச் சொல்லி கூட்டிட்டு வாறாங்கள். வாறப்போ வீடுகளில கிடந்த அலவாங்கு கோடாலிகளை கையில தூக்கிட்டு வாறாங்கள்.

எங்கட இடத்தில தானெண்டு நினைச்சம். ஒரே நேரத்தில மூண்டு இடத்தில் இருந்த மக்களையும் சுத்தி வளைச்சுப் பிடிச்சாங்கள். எல்லாரின்ர வீடும் எங்க இருக்குதெண்டு அறியத்தான் மூண்டு நாளைக்கு முதல் வந்தவனெண்டு அப்பதான் விளங்கிச்சுது. எல்லாரும்வந்து குந்தியிருந்த உடன் எங்க ஆம்பிளையள் எல்லாம் போட்டாங்களா? எனக் கேட்டான். எல்லாரும் வயலுக்க போட்டாங்கள் இன்னும் வரல்ல எனச் சொன்னம். சொல்லிக் கொண்டிருக்க ஒரு வெடிச்சத்தம் கேட்டது. கேட்டவுடன சடாரெண்டு எல்லாரையும் வெட்டத் துவங்கினாங்கள். வெட்டுவிளத் துவங்கின கையோட எல்லாரும் எழும்பின பக்கமாய்ச் சிதறி ஓடினாங்கள். ஓடத்துவங்கினதும் படபடெண்டு ஓடுறாக்களுக்குச் சுட்டாங்கள். நானும் பிள்ளையள் ரெண்டையும் இழுத்துக் கொண்டு பசுமாடுகள் நிற்கிற பக்கமாய் ஓடினன். ஓடிப்போகக்க பாத்தா ரெண்டு பேர் வயல் பக்கம் நிண்டாங்கள். ஓடிவாருங்கோ ஓடிவாருங்கோ அவங்களக் கூப்பிட, துரை வரட்டுமாம் வாறமெண்டு சொன்னாங்கள் அந்தப் பக்கம் பாத்தா அங்க நிண்ட ஆமி என்னையும் கையைக் காட்டி கூப்பி டுறான் மறுகாத்திரும்பி ஓட படபடெண்டு எனக்கு வச்சான் வெடி.

நம்மட மனிசிக்கும் வெடிவைச்சிருக்கிறான். ஒரு வெடி கன்னத்தையும் இன்னொரு வெடி தலைஓட்டையும் மெல்லிசாய் கிழிச்சுக் கொண்டுபோட்டுது. ஓடினால் போல மனிசியையும் பிள்ளையையும் கைபறிய விட்டுட்டன். காட்டால ஓடி கல்லடி வெட்டைக்குப் போய்ச் சேந்தம். போன கை யோட விதானையாரிட்ட நடந்ததைச் சொன்னம்.

அடுத்தநாள் செஞ்சிலுவைச் சங்க ஆட்கள் வந்தாங்கள். யாராவது ஒரு ஆள் வாருங்கோ கிராமத்துக்க போய்ப் பாத்திட்டு வரலாம் எனக் கேட்டார்கள். எல்லாரும் பயத்தில மாட்டனெண்டு சொல்லிட்டாங்கள். அப்புறம் நான்போக வெளிக்கிட்ட என்னையும் போகவிடாமல் கையில பிடிச்சு இழுத்தாங்கள். இனிநம்மட மனிசி பிள்ளைகளுக்கு என்ன நடந்ததெண்டு அறியோணும், மற்ற ஆக்களுக்கு என்ன நடந்ததெண்டு பாக்கோணும். எல்லாரும் பின்னடிச்சால் சரிவராதெண்டு நான் ஏறிட்டன்.

கிராமத்துக்குள்ள போய்ச் சேரக்க பாத்தா ரோட்டுல ஒரு லொறியும், ஜீப்பும் ரோட்டுக் கரையில நிற்குது. அதில பெரியவன் நிண்டு சொன்னான் இப்ப ஊருக்க போகேலாது அங்க பாதுகாப்பில்லையெண்டு செஞ்சிலுவைச் சங்க ஆள் சொன்னார். பாதுகாப்பில்லாட்டிப் பறவாயில்ல. நாங்கள் போய்ப் பாக்கத்தான் போறம். என வாக்குவாதப் பட்டு வாகனத்துக்க கிடந்த வயலஸ்சில ஏதோ கதைச்சார். கதைச்சிட்டு உடன வாகனத்தில ஏறி ஊருக்க போனம்.

ஊருக்க போய்ப் பாத்தா ஒருத்தரையும் காணல்ல எல்லாரையும் கூப்பிட்டு இருத்தின இடங்களில இரத்தம் வெள்ளமாய் உறைஞ்சுபோய்க் கிடக்குது. திரும்பி வந்தம். வரக்க றோட்டில நிண்ட ஆமிப் பெரியவன் சொன்னான் ஊருக்க ஒருத்தருமில்ல ஆரைப்பார்க்க வந்தனீங்கள் எண்டு கேட்டான். நான் சொன்னன் நம்மட மனிசி பிள்ளைகளைப் பார்க்க வந்ததாய். அவன் லொறியைக் காட்டி அதுக்குள்ள கிடக்குறதில உம்மட மனிசி பிள்ளையள் கிடந்தா தேடிப்பாரும் எனச் சொன்னான்.


லொறிக்குள்ள ஏறிப்பாத்தா கைகால்கள் வெட்டுப் பட்டபடி முப்பத்தியாறு சவம் கிடக்குது. எல்லாத்தையும் புரட்டிப்!!ரட்டிப் பாத்தன். அடையாளம் தெரியாமல் எல்லாம் ஊதி நீலம் பாஞ்சு போய்க் கிடக்குது. என்னையறியாமலே பெரிய சத்தமாய்க் கத்தினன். என்ர மனிசி பிள்ளையள்அதுக்க இல்லையெண்டது மட்டும் தெரிஞ்சுது. லொறியால இறங்கினன். றோட்டைப் பாத்தா கரடிவைச்ச குளத்தில இருந்து கவேட் வருது. அதில நீதவானும் வந்திறங்கினார். வந்து கேட்டாரு கிராமத்தாக்கள் யாராவது நிக்கிறியளாவெண்டு. நான் நிக்கிறதாய் சொன்னன். பயப்பிடாத மகன் என்னோட வா எனக் கூட்டிட்டுப் போய் உங்கட ஆரா ரில்ல, ஆரார் செத்துக் கிடக்கிறாங்க எண்டு பாத்துச் சொல் லுமகன் என நீதிபதி சொன்னார். என்ர அண்ணன்மார் ரெண்டுபேர், என்ர மனிசி ரெண்டு பிள்ளைகள் ஒருத்தருமில்ல எண்டு சொன்னன். செத்துக் கிடக்கிற எல்லாருமே நம்மட உறவுகள் தானெண்டு சொன்னன். லொறிக்குள்ள கிடந்த சவத்தையெல்லாம் கறடிவைச்சகுளம் காம்பில இறக்கினாங்கள். நம்மட சீனியப்பாட மகளொராள வெட்டிப் போட்டு கொழுத்தியிருக்கிறாங்கள். அது பாதியுடம்பு கருகி பாதியுடம்பு அப்படியே கிடக்குது. நீளக் கூந்தலும் வெள்ள வெளேரெண்ட வடிவான முகமும் பாதி அப்படியே கிடந்தது.

சின்னக் குழந்தைகள் கொஞ்சப் பேரை இன்னொரு பக்கமாய் எடுத்துப் போட்டாங்கள். அதுக்குள்ள நம்மட பிள்ளையளக் காணல்ல. சத்தியெடுத்தெடுத்து ஒருசாதியாய்க் கத்தினன். நீதவான் பெரியவனக் கூப்பிட்டு ஏதோ கதைச்சார். அவன் சொன்னான். பொலனறுவை ஆஸ்பத்திரியில கொஞ்சப் பேரைக் கொண்டு போய் போட்டிருக்குதெண்டு. காயப்பட்டாக்கள் ஒன்பது பேர் அங்க இருப்பதாகச் சொன்னான்.

வொடி எல்லாத்தையும் கொண்டு போகப் போறியளோ மகன் எண்டு நீதவான் கேட்டார். நான் சொன்னன். அங்க கொண்டு போய் ஒண்டும் செய்யேலாதய்யா. எல்லாம்

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

## தமிழ்அலையின் இரு சிறுகதைகள்



# கவரிமான்!

அன்று ராகுலன் மிகவும் கலகலப்பாகக் காணப்பட்டான். காரணம் தான் விரும்பிய அந்த புதியரக மோட்டார் சைக்கிளை அவனது தந்தை அன்று அவனுக்கு வாங்கிக் கொடுத்திருந்தார்.

ராகுலனுக்கு அன்று மகிழ்ச்சி பிடிபடவில்லை ''டேய் வசந், ஏறுடா பின்னால ஒரு றவுண்ட் பொயித்து வருவம். இஞ்ச பார் உனக்கும் சேத்துத்தான் இரண்டு ஹெல்மட் வாங்கியிருக்கன்!'' எனத் தனது நண்பனுடன் ''ரவுண்'' பக்கம் கிளம்பினான்.

ராகுலனின் தந்தை செல்வத்தார் அவ்வூரில் கொஞ்சம் பசைப் பிடிப்பானவர். ஆனால் சில பணமுதலைகளைப்போல் ஏழைகள் சொத்தினால் இவர் கொழுக்கவில்லை. தனது சொந்த முயற்சியினாலேயே முன்னுக்கு வந்தவர். தனது ஒரேயொரு மகனது நல்வாழ்விற்காக எதையும் செய்யச் சித்தமாயிருந்தார்.

அவர்களது வீடு நகரப் பகுதியில் அமைந்திருந்தாலும் தான் வாழ்ந்த கிராமத்தை மறக்காதவர் செல்வத்தார். பெரிய மானஸ்தரும் கூட. இதுவரையில் தனது மனச்சாட்சிக்கு விரோதமாக எதிலும் ஈடுபட்டதேயில்லை.

மகன் ராகுலன் தொழில்நுட்பக் கல்லூரியில் கற்கை நெறியொன்றினைப் பூர்த்தி செய்து நிறையச் செல்வம் இருந்தாலும் ஏதோ ஒரு கௌரவத்திற்காக தொழிலுக்கு முயற்சித்துக் கொண்டிருப்பவன். நிறையவே அவனுக்கு நண்பர்களும் இருந்தார்கள். எல்லோருடனும் சரளமாகப் பேசிப் பழகுவான்.

ராகுலனுக்கு ஏதாவது சிறு வருத்தம் வந்தால் கூட தந்தை செல்வத்தாரால் தாங்கிக் கொள்ளவே முடியாது. மனைவி தன்னை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்த பின்னால் முழுப்பாசத்தையும் இவன் மீது அவர் வைத்திருந்தார்.

ராகுலன் அன்றைய தினம் மிகவும் அவசரமாகக் காணப்பட்டான். ''டேய் ராகுலா என்ன தடதடப்பாத் தெரியுது. எத்தனை நாளாச் சொல்லுறன் இந்த அவசரம் கூடாதென்று. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம் இப்போ எங்கபோக இப்படி அவசரப்படுகிறாய்?''என்று கேட்டார் செல்வத்தார்.

தே.தர்மராஜ்

''இண்டைக்கு என்னோட பிரண்டோட பேர்த்டே அந்த நிமிஷத்தில் நான் அவண்ட வீட்டில நிக்கனும்''

''பேர்த்டேக்கு போறதெல்லாம் சரி. அங்க அது இதயெல்லாம் வாங்கிக் குடிச்சிடாத''. ''சரியப்பா!''

ராகுலன் தனது மோட்டார் சைக்கிளை எடுத்து சிட்டாய்ப் பறந்தான். அவன் சென்று சில மணித்தியாலங்களில் செல்வத்தார் வீட்டிற்கு ''போன், கோல்'' ஒன்று வந்தது.

''ஹலோ... நான் செல்வம் பேசுறன். நீங்க யார்தம்பி

''நாங்க பொலிஸ் ஸ்ரேசனில் இருந்து கதைக்கிறம். உங்க மகன் கூட்டாளிமாரோட சேந்து குடிச்சித்து தெருவில கும்மாளம் போட்டான். இப்போ ஸ்ரேசனில் வைச்சிருக்கம். மற்ற எல்லாப் பெற்றோரிடமும் அறிவித்தாயிற்று. நீங்க உடனே வந்தா நல்லது. உங்க மகன் நிதானத்தையே இழந்து விட்டான். நாங்கதான் அவன்ர மணிப் பேர்சைப் பிரித்து ரெலிபோன் நம்பர் கூட எடுக்க வேண்டியதாயிற்று''....

''என் மகனா?'' செல்வத்தார் அதிர்ச்சி தாங்கமுடியாமல் ஈசிச் செயாரில் உட்கார்ந்து சாய்ந்து கொண்டார். ஆனால் சாய்ந்தவர் எழும்பவேயில்லை. இனி ராகுலனே வந்து திருந்தி விட்டேன் என்றால் கூட அவர் எழும்பப் போவதில்லை. மயிர் நீப்பின் வாழாக் கவரிமானானார்.

---

# காலம் செய்த கோலம்!

''நான் காணும் உலகங்கள் யார்காணக் கூடும்....'' என்ற சினிமாப் பாடலை முணுமுணுத்தபடி படுக்கையில் இருந்த நிஷா தோளில் கைபட்டதும் திடுக்கிட்டு எழும்ப முயன்றாள்.

''வேண்டாம்.'' என்றாள் மஞ்சு. ''மஞ்சு எப்ப வந்தநீ?''

''நீ பாடலை ஆரம்பிக்கும் முன்னே நான் வந்து விட்டேன். ஏன் பயந்து விட்டாயா நிஷா.''

''சேச்சே! இஞ்சபாரு உன் கண்கள் ஊனமுற்று இருந்தாலும் உனக்கு எவ்வளவு மனசு தெரியுமா? உனக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலமிருக்கு. ஆ.... நான் வந்த விசயத்தை மறந்து போனன். நேற்று நான் டாக்டர் கணேஷ்சைபோய்ப் பார்த்தன். அவர் உனது நிலமை பற்றிச் சொன்னார். இந்தவாரம் உனக்கு கண் சத்திர சிகிச்சை செய்வதாகவும் அதில் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றிகிடைக்கும்'' என்றார். இதைக் கேட்டதும் நிஷாவுக்கு அளவில்லாத மகிழ்ச்சி.

அதைப்பார்த்ததும் மஞ்சு நிஷாவின் கைகளைப் பிடித்தபடியே ''இப்படியே உட்கார்ந்திருக்க அலுப்பாக இருக்கு. வா வெளியில் போயிருந்து பேசுவோம்.'' என்றாள். இருவரும் போய் முற்றத்தில் அமர்ந்து கொண்டார்கள். முதலில் மஞ்சுவே பேச்சைத் தொடங்கினாள் நான் உன்னிட்ட நீண்ட நாட்களாக கேட்க வேண்டும் என்று நினைத்தேன். சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. உனக்கு பிறவியிலிருந்தே கண்பார்வை இல்லையா அல்லது..'' என்று பேச்சை முடிக்கும் முன்னே.

''நோ... மஞ்சு எனக்கு கண் பார்வை இல்லாது போன கதையைக் கேட்டால் உனக்கே தாங்கமுடியாத வேதனையாக இருக்கும்''. என்றவள் தன் கடந்து போன வாழ்வின் புத்தகத்தைப் புரட்டினாள்.

* * *

மஞ்சு சிறுவயதிலிருந்தே விளையாட்டிலும் படிப்பிலும் நல்ல கெட்டிக்காரி. அதுமட்டுமல்ல மிகவும் குறும்புக்காரியும் கூட. பாடசாலை வாழ்க்கையில் அவள் செய்த குழப்படிகள் எண்ணிலடங்காது,

படிப்பை முடித்து வீட்டிலே இருந்த மஞ்சு வேலைக்காக பல விண்ணப்பங்களை அனுப்பினாள். எதிர்பாராத விதமாகத் தனியார் நிறுவனமொன்றில் அவளுக்கு வேலை கிடைத்தது. சில மாதங்களின் பின் அவளது திறமையின் அடிப்படையில் பதவி மாற்றம் கிடைத்தது. அங்கு வேலை செய்த சக ஊழியர்கள் அவளுடன் மிகவும் அன்பாகப் பழகினார்கள். ஆனால் அவர்களில் சில நயவஞ்சகர்களும் இருக்கத்தான் செய்தார்கள்.

அவளது திறமை கண்டு சிலருக்குப் பொறாமை. ஆனால் அதையாரும் காட்டிக் கொள்ளமாட்டார்கள் நல்லவர்கள்போல் அவளுடன் பழகினார்கள்.

நாளடைவில் அங்கு வேலை செய்த சில ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்தார்கள். இது பெரிய விபரீதமான விளைவைத் தோற்றுவிக்கும் என்று யாருமே நினைக்கவில்லை.

அன்று திங்கட்கிழமை

வடிவேல் சகாயநாயகி

அவள் வேலையில் ஈடுபட்டிருந்தாள். திடீரென ஏற்பட்ட வாய்ப் பேச்சு கைகலப்பில் வந்து முடியும் என்று அவள் நினைக்கவில்லை. இயந்திர மெசின்கள் தளபாடங்கள் போன்றவற்றை நாசப்படுத்தி இறுதியில் அசிட்டை எல்லா இடமும் வீசினார்கள். அவர்கள் வீசிய அசிட்டிற்கு அவளது கண்கள்தான் பலியானது. அதன் பின் அவளுக்கு என்ன நடந்தது? என்றே தெரியாது. அவள் யார்? அது தான் மஞ்சு.

* * *

இதைக் கேட்ட மஞ்சுளாவினால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. தன் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பெருமூச்செறிந்தபடி நிஷாவின் பக்கம் சென்று அவளின் தலையை வருடிய படியே ''இஞ்ச பாரு நிஷா இனி நீ எதைப் பற்றியும் கவலைப் படாதே! உனக்கு ஒளிமயமான எதிர்காலம் நிட்சயம் உண்டு. எத்தனையோ பேர் தங்கள் கண்களை இழந்து இருண்ட உலகில் பைத்தியக் காரத்தனமாக வாழ்ந்தவர்கள் கூட இன்று சத்திர சிகிச்சை மூலம் ஒளி பெறவில்லையா?

ஆறுதல் கூறி அவள் மனதை ஓரளவு திடப்படுத்தி சிகிச்சை பெறுவதற்குச் சம்மதிக்க வைத்தாள் மஞ்சு.

சில வாரங்கள் கழிந்தன. நிஷாவிற்கு சிகிச்சைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. அன்று காலை 10.00 மணிக்கு டாக்டர் கணேஸ் வெற்றிகரமாகச் சிகிச்சையை முடித்து வெளியேறினார்.

நிஷா கண்கள் கட்டப்பட்ட நிலையில் கட்டிலில் படுத்திருந்தாள். அவள் மனக்கண்ணில் ஆயிரமாயிரம் கனவுகள். பழையபடி நான் எல்லோரையும் பார்க்கலாம். என்ற சந்தோஷத்தில் இருந்தவளை அங்கே வந்த டாக்டர் ''என்னம்மா... நிஷா உமது கண்கட்டுகளைப் பிரிக்கவேணும். இனிமேல் எந்தக் கவலையும் இல்லை. பழையபடி நீங்கள் வெளி உலகத்தைப் பார்க்கப்போகிறீர்கள்.'' என்றதும்,

''என்கட்டுக்களைப் பிரித்ததும் முதலில் என் பெற்றோரை நான் பார்க்க வேணும்'' என்றாள் அவள்.

''சரிம்மா'' என்று கூறிக் கொண்டிருந்தபோது அங்கே வந்து சேர்ந்தாள் நிஷாவின் தோழி மஞ்சு.

கட்டிலருகில் வந்தவள் நிஷாவின் தலையைத் தடவியபடியே பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டு பேச்சை ஆரம்பித்தாள்.

''இன்றைக்கு உனது வீட்டார் அனைவரும் உன்னைப் பார்க்க வருவார்கள்.'' என்றாள்.

''ஆமா மஞ்சு. அதைத்தான் நானும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். ''என் கண் கட்டுகளைப் பிரித்ததும் முதலில் பார்க்க நினைப்பது அவர்களைத்தான். என்றாள் நிஷா.

இருவரும் பேசிக் கொண்டிருக்கையில் உள்ளே வந்த டாக்டர் வாடிய முகத்துடன் காணப்பட்டார்.

''ஐயம் வெரி சொறி.... அவர்கள் இனி வரமாட்டார்கள். வந்து கொண்டிருக்கும்போது எதிரில் வந்த லொறியுடன் மோட்டார் சைக்கிள் எதிர்பாராத விதமாக மோதி அவ்விடத்தில் அவர்களின் உயிர்பிரிந்து விட்டது''. என்று கவலையுடன் தெரிவித்தார் டாக்டர். இதைக்கேட்டதும் நிஷாவால் எதுவும் பேசமுடியவில்லை. எவ்வளவோ முயற்சியின் பின் தனக்குக் கண்பார்வை கிடைத்தும்கூட நான் என் பெற்றோரைப் பார்க்க முடியாதவளாகி விட்டேனே! ஏன் நான் இன்னும் உயிருடன் வாழ வேனும் என்று தேம்பித் தேம்பி அழுதாள்.

''நிஷா என்ன் செய்வது வாழ்க்கையில் இன்பமும், துன்பமும் மாறி மாறித்தான் வரும். அதற்காக எம்மை நாமே அழித்துக் கொள்வது முட்டாள் தனம். நீ கவலைப்படாதே! முதலில் கட்டுகளைப் பிரித்துவிட்டுப் பேசுவோம். என்று சொன்னவளின் விழிகளிலிருந்து அவளையுமறியாமல் கண்ணீர் வடிந்தது.

நான் யாரையும் பார்க்க விரும்பல்ல. மஞ்சு, எனது கண்கள் இருந்ததுபோல் இருந்திருந்தால் நான் வேதனைப்படமாட்டேன். நான் யா ரைப் பார்க்கவேண்டும் என்று ஆதங் கப்பட்டு கண் சிகிச்சை மேற்கொண் டேனோ அவர்களே இவ்வுலகை விட் டுப் போய்விட்ட பின் நான் மட்டும் யாருக்காக வாழ வேண்டும்? என்று துடியாய்த் துடித்தாள் நிஷா.




காலம் செய்த கோல்த்தை எண்ணியபடி தன் உயிர்த் தோழிக்கு எந்தவித ஆறுதலும் சொல்ல இயலாத வளாக நிஷாவை அணைத்தபடி நின்றாள் மஞ்சு.

விறுவிறுப்பான தொடர் நாவல்

# என் கணவன் எனக்கு மட்டும் தான்

12



இருந்தாற்போல வானம் திடீரெனக் கறுத்துக் கொண்டது. கச்சான் காற்று மாறி கொண்டல் காற்று வீசியது. இன்னும் சில நேரத்தில் மழை பெய்யும் அறிகுறிகள் தெரிந்தன.

முற்றத்தில் காயப்போட்ட விறகுகளை அவசரஅவசரமாக அள்ளி எடுத்துக் குசினிக்குள் கொண்டுபோய் வைத்துவிட்டு இந்திரா வெளியே வந்தபோது சுகுமார் சைக்கிளில் வந்திறங்கினான்.

அம்மா வந்து போனதையும் பரிமளத்தின் மகளின் பூப்பூநீராட்டு விழா அழைப்பிதழ் வந்திருப்பதையும் அப்பாவிடம் சொல்லுவோமா? அல்லது,,,,,விட்டு விடுவோமா? என்று தனக்குள்ளேயே எண்ணியபடி அப்பாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இந்திரா இங்கவா"

சைக்கிள் கேன்ரிலில் சொப்பிங் பேக் நிறையச் சாமான்கள் இருப்பது தெரிந்தது.

"என்னப்பா?" என்றபடி எழுந்து போனாள்.

"இதற்குள்ள காஞ்ச மரயிறச்சி இருக்கு, அதோட சுதனுக்கும், உனக்கும் சுவீற்சுமிருக்கு" என்றபடி சொப்பிங் பேக்கை அவளிடம் கொடுத்தான்.

"உண்மையான மரயிறச்சிதானோ இல்லாட்டி மாட்டிறச்சியோதெரியா?" என்று சொல்லிக் கொண்டெ இந்திரா பேக்கை வாங்கிக் கொண்டாள்.

"என்ன இழவோ. தெரியா மரஇறச்செண்டுதான் வித்தவன் சொன்னான். இந்த நாளையில எதிலதான் கலப்படமில்ல கொண்டு போய்வை. அவசரத்துக்கு எதெண்டாலும் செய்யலாம். எங்க சுதனைக் காணல்ல?"

"அவன் நாளையிலயிருந்து வேலைக்குப் போப்புறானாம்மெண்டு சொன்னான். உங்கட்டையும் வந்து சொன்னவனாமே."

"ஓ! என்னதான் புன்ன செய்யிற" வேலவெட்டி யொண்டுமில்லாமச் சும்மா கிடந்தாக் கூடாத கூட்டங்களோட சேந்து கெட்டுப் போவான். ஓ-எல் சோதனையில் மட்டுக்கு மட்டாகப் பாஸ்பண்ணியிருக்கிறான். மேற்கொண்டு படிக்கச் சொன்னாலும் தன்னால ஏலாண்டு சொல்லுறான். அவர்ர படிப்புக்கு இதவிட்டா வேறென்ன தொழில் செய்யேலும்.?"

என்று சொல்லியபடியே சைக்கிளை உருட்டிக் கொண்டு வீட்டின் ஓரமாகச் சாத்தும் போது மழை பொடு பொடுக்கத் தொடங்கியது.

"புதினமான மழ! இப்ப மனிசரப் போல காலமும் மாறிப் பொயித்து! கச்சான் அடிக்கிற காலத்திலயும் மழபெய்யிறதா?" தனக்குத் தானே சொல்லிக் கொண்டு வீட்டுக்குள் சென்று உடுப்பை மாற்றிக் கொண்டான் சுகுமார்.

அப்போது வெளியே ஏதோ பணி விடையாகப் போயிருந்த சுதன் ஓட்டத்தில் வந்தான்.

"இந்திரா அப்பா வந்தித்தாராடி?" குசினிக்குள் தேநீர் வைத்துக் கொண்டிருந்த இந்திராவிடம் கேட்டான்.

"அவர் வந்து மூன்று மணித்தியாலமாய்ப் பொயித்து. வந்த உடனே உன்னத்தான் கேட்டவர். இண்டைக்கு நல்ல அடியிருக்குத் தம்பியருக்கு.!" என்று பொய்யைச் சொன்னாள் இந்திரா!

"போடி ஏன் பொய் சொல்லுறா? அப்பா இப்பதான் வந்தவர். அவர் வரக்குள்ள நான் கண்டனான்தான்."

இப்படி சுதனும், இந்திராவும் பேசுவதை மண்டபத்திற்குள் நின்றபடி கேட்ட சுகுமாருக்குச் சிரிப்பு வந்தது. அதன் பின்னால் இரக்கமும் மேலிட்டது.

"என்னோட இறுக்கமாகப் பாசம் வைத்திருக்கிற இந்த இரு உயிர்களும் இல்லாமலிருந்தால் இந்நேரம் என்னுடைய எலும்பு கூட இத்துப் போயிருக்கும்! இவள் பூங்கோதைக்கு பிள்ளைகள் மேல் பாசம் இல்லையா?! என்னோடு தானே அவளுக்கு கோபமும், ஆத்திரமும். என்னோடு பேசாமல் பிள்ளைகளோட பேசிக் கதைச்சி வெளிய போகாமல் இங்கேயே இருந்திருக்கலாமே! இவளெல்லாம் ஒரு பொம்பிள!" என்றபடி வெளியே வந்தான்.

"அப்பா இண்டைக்கு காலையில அம்மா வந்து போனதாமெண்டு இந்திரா சொன்னவள்."

"என்ன" என்று ஆச்சரியத்தோடு பார்த்தான் சுகுமார்.

இதையெல்லாம் அப்பாவிடம் சொல்வதா சொல்லாமல் விடுவதா என்றிருந்த இந்திராவுக்கு சுதன் அம்மா வந்து போனதைச் சொன்னதும் நெஞ்சுக்குள் திக்கென்றது.

சுதனிடம் அதைச் சொல்லாமலே விட்டிருக்கலாம். சொன்னது தப்பாகப் போய் விட்டது. என்று நினைத்தாள். இனியென்ன சொய்வது? அப்பாவுக்கு விசயம் தெரிந்து விட்டது. நான் உடனே சொல்லவில்லையே என்று அப்பா கோவிப்பாரோ..! என்று அஞ்சினாள்.

"இந்திரா சுதன் சொல்றது உண்மதானா" என்று கேட்டான் சுகுமார்.

"ஓமப்பா நீங்க வேலைக்கு போன பின்னால வந்தவ"

"கச்சான் காத்தில அடிபட்டு வந்திருக்கிறாள் போல"

என்று சொன்னதுதான் தாமதம் "சளார்" என்று மழை கொட்டியது.

சுதனும் சுகுமாரும் மண்டபத்திற்குள் போய்விட்டார்கள்.

இந்திரா சுடச்சுட தேநீரைப் போட்டுக் கொண்டு வந்தாள்.

மூவரும் தேநீரைச் சுவைத்துக் கொண்டிருக்கும்போது சுகுமார் கேட்டான்.

"கொம்மா வந்து என்ன சொன்னாள்?"

"உங்களோட சேந்து வாழேலாதாம். உங்களக் கெதிபண்ணி ஊட்டவிட்டு வெளிக்கிளம்பட்டாம். நீங்க சாராயம் விக்கிற பரிமளத்தூட்ட ராப்பலாக்கிடந்து விடியிறயளாம். எல்லாத்துக்கும் மருந்து கட்ட நான் கெதியில வாறன்" என்று பெரிய சத்தம் போட்டுக் கொம்பிட்டுப் பேறாவு!" இந்திரா மிகச் சுருக்கமாக தாய் சொன்னவற்றைச் சொன்னாள்.

"ம்... இவள்ற திமிர் இன்னும் போகல்ல! இத மனிசரால போக்காட்டேலா! கடவுள்தான் போக்காட்டவேணும்! அது சரி பரிமளத்திட்ட போய்ச் சாராயம் குடிக்கிறத இவள் வித்தியாசமாக நினைக்கிறாள் தானே இதையெல்லாம் இவளுக்கு ஆர் சொன்னதாம்."

"எல்லாம் நான் கேள்விப்பட்டன்" எண்டாவு. ஆரோ சொல்லியிருக்க வேணும். அவ நினச்சிருந்ததுக்குச் சாதகமாக அவங்க உங்களுக்கு அனுப்பிய சாமத்தியக் கலியாணக் காட்டும் மேசையில கிடந்தது. அத எடுத்துப் பாத்து இவளுக்கும், நமக்கும் என்ன உறவு வேண்டியிருக்கு என்றெல்லாம் திட்டிப் போட்டுப் போறா."


"எங்க அந்தக் காட்?"

அதைக் கொண்டு வந்து தந்தையிடம் கெடுத்தாள். சுகுமார் வாங்கிப் பார்த்தான்.

பாவம் அதுகள் ஆண் துணை இல்லாததுகள். சாராயத்த வித்துத்தான் சீவியம் போகுது. இந்தச் சாமத்தியக் கலியாணத்தையும் வரும்படிக்காகத்தான் செய்யுதுகள் போல கிடக்கு. இந்தச் சாமத்தியக் கலியாணத்துக்குப் பொயித்து வந்ததும் நான் அங்க போறத்த நித்தாட்டப் போறன்" என்றான் சுகுமார்.

"ஓமப்பா நீங்க குடிக்கிறத விட்டுப் போடுங்க. குடிச்சிக் குடிச்சி நாளைக்கு உங்களுக்கு என்னவும் வருத்தம் வாத வந்தித் தெண்டா நாங்க எங்கபோற......." என்று சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்திரா தகப்பனுக்குச் சொன்னதைக் கேட்டதும் சுகுமார் இந்திராவைப் பாசத்தோடு பார்த்தான். ஆனாலும் எதுவும் பேசவில்லை. அப்போது சுதன் கேட்டான்.

"அப்பா நான் சொன்ன பாபா படக் கொப்பிய நீங்க வாங்கித்து வரல்லையே !



நாளைக்கு வேலைக்குப் போனீங்கெண்டா பிறகு படம் பாக்கவும் நேரமிருக்காது. என்னப்பா நீங்க மறந்துபோய் வந்தித்தீங்களே"

"டே மடையா! நான் மறக்கல்ல! ரெண்டு மூணு வீடியோக் கடைகளுக்கு போய்க் கேட்டன். எல்லாக் கொப்பியும் வெளியில பொயித்தாம்! வந்த உடனே தாறமெண்டானுகள்.! புக் பண்ணிப்போட்டு வந்திருக்கிறன். நாளைக்கு நாளையண்ணைக்கு நீயே போய் எடுத்துக் கொண்டு வா?" என்றபடி எழுந்தான்.

"அப்பா எனக்கு நான் கேட்ட காசி? என்றாள் இந்திரா.

"எவ்வளவு வேணும்"?

"ஐந்நூறு ரூபா வேணும்? காணுமா?" அது சரி நான் காலையில தாறன்" அந்தளவில் சுகுமார் பலத்த யோசனையோடு போய் வீட்டுக்குள் கட்டிலில் படுத்துக் கொண்டான்.

*(தொடரும்)*

## வாசகர்களின் கவனத்திற்கு!

*"என் கணவன் எனக்கு மட்டும்தான்" தொடர்நாவலை எழுதும் ஈழத்தின் பிரபல நாவல் ஆசிரியர் யார்?*

*அவர் பெயரை தமிழ்அலையில் வெளியாகும் கூப்பனில் எழுதி அஞ்சலட்டையில் ஒட்டி அதை எமக்கு அனுப்பிவைக்கவும்.*

*நாவல் முடிவில் மூன்று வாசகர்களுக்கு அந்நாவலாசிரியரின் புதிய மூன்று நாவல்கள் பரிசாக அனுப்பிவைக்கப்படும்.*

**கூப்பன்**

நாவலாசிரியர்

பெயர்...............................................................

அனுப்புவரின் பெயர்..............................................

விலாசம்............................................................

கையொப்பம்.....................................

# நகைச்சுவை முற்றம்

## ஆட்டமும், சாட்டை அடியும்!

கண்ணடித்துக் கண்ணாடித்துக் கண்ணம்மாவைக் கைபிடித்த நடனதாசருக்கு கண்ணம்மாவின் ஊர் மாரியம்மன் கோயில் சடங்கு நிகழ்வில் குறிப்பாக "தெய்வமாடல்" நிகழ்வு நன்றாக பிடித்துப் போனது.

"சா... எவ்வளவு சுப்பரா ஒவ்வொருத்தரும் ஆடுறாங்க... "பாலாவதனன்" எண்டா பாலாவதனன்தான்... காத்தாண்ட ஆட்டம்...! காளிக்கு ஆடுற ஆட்டம்...! நாககன்னிக்கு ஆடுவோரிண்ட ஆட்டம்... எல்லாத்தையும் விட மாரியம்மாளுக்கு ஆடுற ஆட்டம்... சொல்லி வேலல்ல... இப்படி நாமளும் ஏன் ஆடப் போடாது?" என்ற ஆட்டப் பைத்தியம் பிடிச்சி நடனதாசரை ஆட்டிப் படைத்துக் கொண்டே இருந்தது.

அடுத்தநாள் விடிந்ததும் விடியாததுமாக எழும்பிக் குந்திக் கொண்டிருந்த நடனதாசர் நித்திரைக் கண்ணோடு படுக்கையில் புரண்டு கொண்டிருந்த கண்ணம்மாவைக் கத்தி எழுப்பி...

"'கண்ணம்மோவ்... இண்டைக்கு நானும் கோயில்ல ஆடப்போறன்" என்றார்.

"என்ன...? ஆடப் போறியளோ? உங்களுக்கென்ன பயித்தியமோ புடிச்சிருக்கு அதுவும் போயும் போயும் எங்க ஆடப் போறாரு எண்டு...!" கண்ணம்மா அலுத்துக் கொண்டாள்.

"கண்ணம்மா உண்ட கத என்னம்மா, நம்ம ரெண்டு பேரும் நேற்று கோயிலுக்குப் போய் வரேக்க...றோட்டால போன வந்த சனங்களின்ட கதையெல்லாம் தெய்வமாடுறவங்கட கதையப் பற்றித்தானில்லவா? தெய்வமாடுறவங்களின்ட புகழ் இதால தேசமெல்லாம் பரவுதெல்லவா...? அதேபோல நானும் ஆடினன் எண்டா நமக்கும் அந்தப் புகழ் சேருமல்லவா? பாராட்டுக்கள் வந்து நிறைவு மல்லவா?

"நான் தெய்வம் ஆடுறத்தால... உனக்குத் தான் முக்காவாசிப் புகழ் வரப் போகுது. கண்ணம்மாவின்ட புருஷனாரும் இந்த முறை தெய்வம் ஆடுறாரு...! எல்லாரையும் விட என்ன திறமையாக ஆடுறாரு" என்று ஊர்ச் சனங்கள் கதைக்கும் போது எவ்வளவு பெருமை. நம்மட அந்தஸ்த்து கௌரவம் எல்லாம் உயரும் இல்லயா..." நடனதாசர் நியாயங்களை உரைத்துக் கொண்டே போனார்.

கண்ணம்மாவுக்கோ கணவனாரின் கதையைக் கேட்க சினம் ஒரு பக்கம். சிரிப்பு மறுபக்கம்.

"விடிஞ்செழும்பினா மீன் மீனெண்டு கரப்பும் கையுமாகக் குளத்துக்க கிடந்து விடியுறியள்...! தவறணை தவறணை எண்டு போய் ஒவ்வொரு நாளும் நல்லா முழுகித்து வாறியள்...! போன மாசம் நட்ட நடுச் சாமத்தில பூரணியிண்ட வளவுக்க பூந்துகோழிகளவெடுத்து வந்தியள் இப்பிடிப்பட்ட நீங்களா கோயில்ல தெய்வம் ஆடப் போறியள்...? அப்பெண்டா கோயிலும், ஊரும் உருப்பட்ட மாதிரித்தான்.

மூச்சு விடாமல் கூறி முடித்தாள் கண்ணம்மா.

நடனதாசரோ இதில் ஒன்றை யேனும் மூளைக்குள் உள்வாங்கவில்லை. "என்ர பேரப் பாத்தியா.. நடனதாசர்... அட இதக் கூட நீ அறியாம இரிக்கிறியே" அவரது சிணுங்கல் இது.

கோவிலில் பூசைக்கு ஆரம்பம்... தெய்வம் ஆடுவோரெல்லாம் அம்பாளிடமிருந்து பத்திரம் பெற்று ஆடுவதற்காக றெடியாக நிற்கிறார்கள். அதற்கடுத்தாக இருமருங்கும் பக்த கோடிப் பெருமக்கள் அவர்களுக்குள்ளே நடனதாசரும் மனைவியும் நிற்கிறார்கள் அம்பாள் தெய்வம் ஆடுவோர்க்கு.. பத்திரம் கொடுத்து வர... அவர்களெல்லாம் உருக் கொண்டு ஆட... நடனதாசரும் எவருமே எதிர்பாராத நிலையில் "காய் கூய்..." என்று கத்தியபடி கிளம்பி விழுந்து ஆடத் தொடங்கினார்.

"என்ன தெய்வம்" எனச்சோதிப்பதற்காக வீரபத்திரர் பந்தலடிக்கு முன்னால் நிறுத்தி "உன்னில் நிற்பது என்ன தெய்வம் என்று சொல் சொல்" என்று கேட்கக்கு நடனதாசரோ எதுவுமே சொல்லாமல் "காய்கூய்" என்னு மட்டும் கத்தியாட, அவரது கால்களில் சாட்டையடிக்கு மேல் சாட்டையாக விழுகிறது.

அடிதாங்க முடியாத நடனதாசரோ "கண்ணம்மோவ்... கண்ணம்மா... என்ன அடிச்சிக்கொல்லப் போறாங்க ஓடிவாவன் என்னில ஒரு தெய்வமுமே இல்லப்பா.. என்ன உட்டாப் போதுமப்பா..." என்று சொல்லிக் கத்தியபடியே இருட்டோடு இருட்டாக ஓடி மறைகிறார். கண்ணம்மாவோ "காணுமா சாட்டையடி இதுக்குத் தானே துடிச்ச" என்றபடி பின்னாலே ஓடுகிறாள்.

~வெல்லபதியான்~

# தேடலும் பகிர்வும் 05

''தமிழின உயிர்க் கொலை நாள்'' ஆக செப்டெம்பர் 05அந் திகதி மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெரு மன்றத்தால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழீழத் தாயக விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கவென எதிரிகளும் அடிவருடிகளும் மேற்கொண்ட படுகொலைகளால் ''தமிழீழ நாட்காட்டியில் நினைவு கூரல்கள்'' நிறைந்தே கிடக்கின்றன. படுகொலைகள் பல கண்ட தென்தமிழீழத்தின் உயர் கல்வி நிறுவனத்தில் தஞ்சம் அடைந்திருந்த அப்பாவித் தமிழ் மக்கள் பெருமெடுப்பில் படுகொலை செய்யப்பட்ட நாளை இவ்வாறு பிரகடனப்படுத்தியிருப்பது வரலாற்றை வழிநெடுகிலும் மறவாதிருக்க வழிசமைக்கும் வரலாற்றுணர்வோடு செய்யப்பட்ட பணி போற்றுதற்குரியது.

இது தொடர்பாக எழுதிய/ பேசிய சிலர் ஆவணப்படுத்தலின் தேவை பற்றிச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. அவர்களின் ஆதங்கம் அவசியமானதுதான். படுகொலைகள் மட்டுமன்றித் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு தொடர்பான ''ஆவணப்படுத்தல் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆவணக்காப்பகம்'' மூலம் ஆரவாரமின்றிச் செய்யப்பட்டே வந்துள்ளது , வருகின்றது, வரும். வடதமிழீழத்திலே ''சூரியக்கதிர்'' காரணமான ''யாழ்ப்பாண இடம் பெயர்வுக்கு'' முன்னர் ஆனைக்கோட்டை /நவாலி பிரதேசத்தில் இதன் பணியகமொன்று இருந்ததாகப் பள்ளிநாள்களில் அறிந்திருந்ததாக மனப்பதிவு கூறுகின்றது. பொது மக்களுக்கும் மற்றும் வரலாற்றுத் தேடல் மிக்கவர்களுக்கும். ''மாவீரர் படிப்பகம்'' என்ற பெயரிலான நூலகங்கள் பெரும் பணியாற்றியிருந்தன. பொருண்மியத்தடைகளுக்கு மத்திலும் அதிகூடிய காட்சிப் புலமாகப் புகைப்படங்கள் அங்கு நுழைவாயிலுக்கு அண்மையில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்பாக மட்டு மாநகரிலும் போராட்ட வரலாற்றை விளக்கும் தேர்ந்தெடுத்த புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தமையும் , சிங்களப் படைக் கட்டுப்பாட்டுக்குள் ''வசதியாக'' வாழ்ந்த பலரும் நீண்டவரிசைகளில் நின்று பார்த்துக் கண்கள் பனித் ததையும் மறந்துவிட முடியாதுதான். பொது மக்களும் , இலக்கிய முயற்சிகளை முன்னெடுப்போரும் அறிவுஜீவிகள் என்று அழைக்கப்படுவோரும் போராட்டத்தை ஆவணப்படுத்தக் காலம் கைலாகு கொடுக்கட்டும். வெறும் பெயருக் காகவோ , புகழுக்காகவோ அல்லது , புத்தகங்கள் பல போட்டு கலாநிதிகள் ஆகவோ அன்றி தமிழீழ நாட்டுப்பற்றுடனும் உளத்தூய்மையுடனும் இவர்களது பணி அமைதலே வரலாற்றை அலங்கரிக்கும். வல்வைப் படுகொலை, வில்லுக்குளத்துப் பறவைகள், மௌனப் புதைகுழிகள் என்பன தமிழீழம் சுமந்த படுகொலைகளை ஆவணப்படுத்திய சில நூல்கள் ஆகும்.

''வலிதான் வெற்றியின் இரகசியம்'' என்பதே படுகொலைகள் வரலாறு நெடுகிலும் சொல்கின்ற செய்தி. தரணியிலே புதிதாகத் தலையெடுத்த தேசங்களின் பலவும் படுகொலைகளைப் பார்த்தவைதான். பார்த்துப் பயந்து அடங்கி ஆறுகள் பின்னோக்கிப் பாயவில்லை. ஆதலால்தான், சுதந்திரக் காற்றைச் சுகமாகச் சுவாசிக்க அத்தேசத்தவர்களால் முடிந்தது. அப்படுகொலைகளுக்குள் உலகப் புகழ் பெற்ற ''ஜாலியான் வாலாபாக்'' படுகொலை பற்றி சிறிது பேசுவோம். இதில் சொல்லப்படுகின்ற விடயங்கள் முழுமையாக ''நேருபாலர் புத்தகாலயம்'' / நேஷனல் புக்டிரஸ்ட் இந்தியாவல் வெளியிடப்பட்ட ''ஜாலியான்வாலா பாக்'' என்ற நூலில் இடம்பெற்றவை. 1994ல் வெளியான இதனை எழுதிய ''பீஸ்ம ஸாஹ்னீ'' அவர்கள் ''ராஜாராம்'' எழுதிய *“ The Jallianwala Bagh Massacre”*என்ற நூலிலிருந்து பல தகவல்களையும் பெற்றுள்ளதைத் தொடக்கத்திலே குறிப்பிடுகிறார்.

பஞ்சாப் லெப்டினெனட் கவர்னராயிருந்த மைக்கேல் ஒட்வையரின் அநீதியான இராணுவ அடக்குமுறைச் சட்டத்தைக் அமைதியாக ''ஹர்த்தால்'' போன்றன மூலம் எதிர்த்த நிராயுத பாணியான மக்கள் 1919 ஏப்ரல் 13ம் தகதி (வைசாகிப் பண்டிகைநாள் - சீக்கியர்களின் புனித நாள். மாலை அமிருத்ஸர் நகரில் ஜாலியான்வாலா பாக் மைதானத் தில் ஒன்று திரண்டபோது வெள்ளையின பிரிட்டிஸ் அரசின் ஜெனரல் டையர் தலைமையிலான படையினரால் கண் மூடித்தனமாகச் சுட்டுக் குவிக்கப்பட்டதில் 400 பேருக்கு மேல் மரணம். 1500 பேருக்கு மேல் படுகாயம் உற்ற நெஞ்சை உலுக்கும் சம்பவமே ''ஜாலியன் வாலா பாக் படுகொலை'' என்று அறியப்படுகிறது.

1919 ஆகஸ்ட் 25 அன்று படுகொலைச் சூத்திரதாரிகளுள் ஒருவனான ஜெனரல் டையர், ஜெனரல் ஸ்டாப் டிவிசன் எனும் இராணுவ மேலதிகார நிலையினர்க்குச் சமர்பித்த வாக்கு மூலத்தில் ''நான் சுட்டேன் . கூட்டம் சிதறிப் போகும் வரைச் சுட்டுக் கொண்டேயிருந்தேன். மக்களின் நெஞ்சிலே எவ்வளவு பெருந் தாக்கம் ஏற்படுத்த வேண்டுமென்று எண்ணங்கொண்டேனோ அதன் படிக்கு அத்தனை அதிகம் சுடவில்லை என்றுதான் நினைக்கிறேன். .நான் அங்கு போனது வெறுமே கூட்டத்தைக் கலைக்க மாத்திரமல்ல. மக்களின் நெஞ்சிலே ஒரு குலைநடுக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றுதான் போனேன். அங்கு கூடினவர்கள் நெஞ்சில் மட்டுமல்ல, பஞ்சாப் முழுதும் ஆன எல்லோருக் குமே குலைநடுக்கம் தோன்ற வேண்டும் என்றுதான் சுட்டுக் கொண்டே இருந்தேன். அவசியத்துக்கு மேல் கடுமை காட்டி விட்டேனோ என்ற கேள்விக்கே இடமில்லை.''

டையரின் வரிகளைப் படிக்குமிடத்தில் சிங்களத்தின் நவீன சப்புமல் குமாரையாக்கள் அவனிடந்தான் சிறப்புப் பயிற்சி பெற்றனரோ என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா?

இப்படுகொலையில் உயிர் தப்பிய பஞ்சாப் சிறுவனொருவன் ,வளர்ந்து எதிரியின் தேசம் சென்று படித்துப் பழிதீர்த்தத்தை மறந்து விடமுடியாது. படுகொலையின் போது ஆளுனராயிருந்த மைக்கேல் ஒட்வையர் 1940 மார்ச் 13 இல் லண்டனில் ''காக்ஸ்டன் ஹால் எனும்'' கூட்டத்தில் ''உதம் சிங்'' எனும் நாட்டுப்பற்று மிக்க மாணவனால் சுட்டுக் கொல்லப்பட்டான். அவலத்தைத் தந்தவனுக்கே அதைத் திருப்பிக் கொடுக்க வரலாறு வழிமேல் விழிவைத்திருந்ததன் கடந்து போன வரலாறு அது. 1940 யூன் 12 அன்று மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட உதம் சிங்கின் வாக்குமூலம் எமக்குப் புது வேதமாகிறது.

''அவனுக்கு அது தகும், அவன்தான் உண்மையில் குற்றவாளி. என் நாட்டாரின் தீர உணர்ச்சியை நசுக்கப் பார்த்தான் அவன். என்தாய் நாட்டுக்காக உயிரைக் கொடுப்பது என்பதை விட உயர்வான பெருமை வேறேது?

அன்னிய தேசத்து ஆக்கிரமிப்பாளனுக்கு எங்கள் தேசத்து விதி இதுதான் என்று இடித்துரைத்த உதம் சிங்கைப் படிக்கையிலே, முகம் தெரியாது எங்கெங்கோ மேனி பிச்செறிந்த சந்தனப் பேழைகளான உத்தமர்கள் எம் கண்முன் நிழலாடுகின்றனர்.

படுகொலைகளை நினைவு கூறும் எமக்கு ''தாய் மண்ணைக் காக்கும் தளிர் இருக்குமட்டும். பாய்விரித்தெம் தேசம் படுக்காது போர் தொடுக்கும்''. என்ற புதுவை இரத்தினதுரை வரிகளே தெம்பூட்டுகின்றன. ''அதிகாரம் புரியாத சமன்பாடு'' எனும் தலைப்பில் விடுதலைப் போராட்ட ஆரம்பக் காலத்தில் மு. பொன்னம்பலம் எழுதிய கவிதையின் சில அடிகளை இங்கு மீட்டுப்பார்ப்போம் ''மரணத்துள் வாழ்வோம் , ஈழத்துக் கவிதைகள்'' தொகுப்பிலிருந்து நன்றியுடன் இது பெறப்படுகின்றது.

---

**''அவர்களின் காக்கி முகாம்கள் கூடக் கூட**
**இவர்களின் விடுதலைக் குகைகள் பெருகிக்கொண்டே இருக்கின்றன.**
**அவர்களின் ஆயுதம் கக்கிய சன்னங்களில் இருவர் கொலையுண்ண,**
**நால்வர் புதிதாக ஜனித்தெழும் இவர்களின் விடுதலை**
**இனவிருத்தி பற்றி அறியாத அதிகாரம்.**
**சர்வாதிகாரம் என்பது விடுதலையை ஒடுக்குவதாகக்**
**கூறிக்கொண்டு, தன்னை அறியாமலே அதைப் பிறப்பிக்க**
**யோனிவாயிலில் காத்திருக்கும் மருந்து வச்சி**
**சர்வாதிகாரம் சமன் விடுதலை.**
**எத்தனைதரம் சரித்திரம் இதைக் கற்பித்துக் கொடுத்தாலும்**
**அதிகார அமர்வுகளுக்குப் புரிய முடியாது போய்விட்ட,**
**மர்மச் சமன்பாடு!''**

* * * *

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களது உள்ளத்துச் சிந்தனையிலிருந்து ''கல்லும், முள்ளும் ஏற்றமும், இறக்கமும் நிறைந்த, மிகவும் கடினமான பாதையூடாக எமது விடுதலைப் பயணம் தொடர்கிறது. எதிரியானவன் இந்தப் பாதை வழியே மேலும் முட்டுக்கட்டைகளைப் போடலாம்'' எமது பயணத்தில் சோர்வையும், களைப்பையும் ஏற்படுத்த இடையூறுகளை விளைவிக்கலாம். எத்தனை தடைகள் ஏற்பட்டபோதும், எத்தனை துன்பங்கள் ஏற்பட்ட போதும், கொண்ட கொள்கையில் நம்பிக்கையும் அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடம் உள்ளவரை எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியும் என்பது நிச்சயம்''.

01.05.1992 அன்று அனைத்துலகத் தொழிலாளர் எழுச்சி நாளை (*MAY DAY*) முன்னிட்டுத் தேசியத் தலைவர் அவர்கள் விடுத்த அறிக்கையிலிருந்து நன்றியுடன் மேற்படி வைரவரிகள் பெறப்பட்டு இருந்தன..

* * * *

வசந்


---

**போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்ரசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 13-09-2003 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.**

*முகவரி*

**குறுக்கெழுத்துப்போட்டி**
**தமிழ்அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி 10




### இடமிருந்து வலம்

01. மாவீரரின் உடல் இச் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றது.
05. பெரும் குற்றம். (குழம்பியுள்ளது)
07. துணிச்சல்.
09. இறுதி எழுத்து இல்லை.உறுதியின் வடிவம்.
10. உயரச் செல்ல உதவும்.
11. பசுவைக் குறிக்கும்.
12. பண்,உடம்பு எனப் பல பொருள் தரும் சொல் (குழம்பியுள்ளது)
13. வணக்கம் என்பதை இப்படியும் சொல்லலாம். (குழம்பியுள்ளது)
14. காரியம் கை கூடவும் இறைவனை நினைத்து இப்படியிருப்பர். (குழம்பியுள்ளது)
15. இதைக் கட்டுவது வாழ்வில் சிலருக்குச் சவாலாக இருக்கும்
16.இது துளைத்தால் இரத்தம்தான் வரும். ஆனால் இக்கால இளைஞர்களுக்கோ காதல் வருகின்றது.

### மேலிருந்து கீழ்

01. அதிசயம் எனவும் சொல்லலாம்.
02. நாம் ஒன்றுபட்டு பலப்படும் வரை தமிழர் நமக்கு இதுவே தொடர் கதையாகும் (குழம்பியுள்ளது)
03. சுவடு. (குழம்பியுள்ளது)
06. கடமை, கட்டுப்பாட்டுடன் இதுவும் இருப்பவர் சிறந்த அதிகாரியாவார்
08. எதிரி. (தலைகீழ்)
10. தனிமையான,அமைதியான சூழ்நிலை.
12. சப்தமாயும், சர்ப்பமாயும் வரும். (தலைகீழ்)
13. நெல் குற்றும்போது அரிசி,உமியுடன் சேர்ந்து வருவது.

### குறுக்கெழுத்துப் போட்டி 8ல் மேலும் பாராட்டுப் பெறும் அதிஸ்ட சாலிகள்

**01. நா.சிவலிங்கம்**
எம்.ஓ.எச். விடுதி ஒழுங்கை
கல்முனை.

**02. சி.யோகேஸ்வரன்**
சம்பந்தர் வீதி,
பெரியபோரதீவு

**03. செல்வன் உ.சுபேஸ்குமார்**
தேவபுரம்
முறக்கொட்டான்சேனை

**04. தாமோதரம் வடிவேல்**
ஏறாவூர் 5
செங்கலடி

**05. திருமதி சிவகௌரி ஜெயரெட்ணம்**
பிரிந்தி இல்லம்
மண்டூர்-01

**06. சீ. பாலச்சந்திரன்**
பிரதேச செயலகம்
ஆரையம்பதி

**07. செல்வி.கௌரிகலா**
218 பிள்ளையார் கோவில் வீதி
சின்ன ஊறணி
மட்டக்களப்பு

**08. திரு.க.குபேந்திரன்**
பழுகாமம் -11
திருப்பழுகாமம்

**09. இ.ஸாதனா**
5ம்ஆண்டு
மட்/களுதாவளை ம.வி.
களுதாவளை.

**10. ஜெ.வியாவிதரன் .**
8ம் வட்டாரம்
துறைநீலாவணை.

**11. சு.முல்லைக்குமரன்**
3ம் பிரிவு
மண்டூர்.

**12. செல்வி வ.இளநிதி**
19/26 மாரியம்மன் கோவில் வீதி
கல்லடி, மட்டக்களப்பு

**13. நேசநாயகம் பிரசாத்**
ஆரையம்பதி கிழக்கு
ஆரையம்பதி

**14. செல்வி. ஆ.விமலராஜினி**
குறுமண்வெளி -12
களுவாஞ்சிகுடி

**15. பி.பகலவன்**
இல.11/106
சென்றல்கேம்ப்

**16. கனகநாயகம் அஜந்தசிறி**
அன்பு ஸ்ரோஸ்
கிரான்குளம்.

**17. சி.தருமரெத்தினம்**
சேனைத்தெரு
தாளங்குடா 01
ஆரையம்பதி

**18. ந.சுவாஸ்கரன்**
முனைக்காடு - வடக்கு
கொக்கட்டிச்சோலை

**19. சூ.ஜனனி**
புதுநகர்
மட்டக்களப்பு

**20. சோ.தவராசா**
மண்முனை
ஆரையம்பதி

**21. ரி.குமுதினி**
2002ம்ஆண்டு பிரிவு
தாதியர் பாடசாலை
மட்டக்களப்பு

**22. சி.சித்திரா**
பிரதேச செயலகம்
மண்முனைப்பற்று

**23. ம.நிஷாந்தன்**
இல.02. திருமலை வீதி
மட்டக்களப்பு.

# தமிழினப் படுகொலைகளால் சோபையிழந்து காணப்படும் படுவான்கரை.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் எமது மக்கள் கொடுத்த விலை அதிகம். அதிலும் தென்தமிழீழ மக்களே பாரியளவு உயிர்களை இழந்துள்ளனர். இவ்உயிர் இழப்புகளுக்கு முக்கிய காரணம் திட்டமிட்ட படுகொலைகளே. மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் நூற்றுக்கு மேற்பட்ட படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் பல்லாயிரக் கணக்கான எமது தமிழ் உறவுகளை இழந்து நிற்கின்றோம். இவர்கள் தமிழர்கள் என்ற காரணத்தினாலேயே படுகொலை செய்யப்பட்டார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு படுகொலைகள் காலத்துக்குக் காலம் இடம்பெற்றுள்ளது. அதில் எமது படுவான்கரைப் பூமியில் கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவுப் படுகொலைகளை நினைவுபடுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.



28.01.1987 அன்று வழமைபோல் விடியற்காலையில் எழுந்து எமது மக்கள் தமது நாளாந்தத் தொழில்களை மேற்கொள்வதற்காக மண்முனைத்துறை ஊடாக அரிசிவிற்க, விறகுவிற்கச் சென்றனர். அத்துடன் முதலைக்குடா சேப்பத்துக்குள் அமைந்துள்ள இறால்திட்டத்துக்கும் வேலைக்குச் சென்றனர்.

மண்முனைத்துறைக்குச் சென்றவர்கள் பாதைச்சேவை நடைபெறாமையால் மறுகரைக்குச் செல்லவில்லை. காரணம் துறைக்கு அப்பால் விசேட அதிரடிப்படையினர் (S.T.F ) கவசவாகனத்துடன் காவல்கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது காலை 6மணியிருக்கும் விசேட அதிரடிப்படையினர் பட்டிருப்புப்பாலம் ஊடாக அம்பலத்தடி வழியாகவும், வவுணதீவுப்பாலம் ஊடாக தாண்டியடி வழியாகவும் கொக்கட்டிச்சோலையை நோக்கி நகர்வினை மேற்கொண்டிருந்தனர். அச்சந்தர்ப்பத்தில் உலங்குவானூர்தி மூலம் அம்பலத்தடி, மணற்பிட்டிச்சந்திகளில் (S.T.F ) தரையிறக்கப்பட்டனர்.

இதன்மூலம் முற்றுமுழுதாக கொக்கட்டிச்சோலையில் உள்ள அனைத்துக் கிராமங்களும் சுற்றிவளைப்புக்கு உள்ளாக்கப்பட்டது. நாலாபக்கமும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்ந்தவண்ணம் இருந்தன. வானத்தில் உலங்கு வானூர்தி வட்டமிட்டுத் துப்பாக்கி ரவைகளைப் பொழிந்தவண்ணம் இருந்தது.

ஆபத்து என்றுணர்ந்த இப்பிரதேசமக்கள் அண்மையில் உள்ள கண்ணாக்காடுகளிலும், மேற்குப்பகுதியான படுவான்கரைக்காடுகளிலும் தஞ்சம் புகுந்ததுடன் உலகத்தின் பொலிஸ் எனக் கூறப்படும் அமெரிக்க நிறுவனமான 'செரண்டிப்பின்' இறால் பண்ணைக்கும் சென்றனர்.

எமது நாட்டுப் படைகள்தானே எங்களை ஒன்றும் செய்யமாட்டார்கள். மக்களை பாதுகாப்பதுதானே இவர்களின் நோக்கம் என மக்கள் தமது வீடுகளிலும் தங்கி இருந்தனர். சிங்களவர்கள் படுகொலைகள் செய்வதற்கு அஞ்சமாட்டார்கள் என அடிக்கடி மஞ்சள் துண்டை ஞாபகப்படுத்தி எமது மக்கள் அடிக்கடி பேசிக்கொள்வார்கள். ஆனால் அன்றுதான் எமது ஸ்ரீலங்காப்படையினரின் வெறித்தாண்டவத்தை நேரில் கண்டனர்.

135அப்பாவித் தமிழர்கள் வயது வித்தியாசமின்றி கைதுசெய்யப்பட்டு நிரையாக வைத்துத் துப்பாக்கியால் சுடப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். தாய்க்கு முன்பும், சகோதரர்கள், மனைவி, உறவினர்களுக்கு முன்பும் எதுவித ஈவிரக்கமுமின்றி M 16 ரகத்துப்பாக்கியால் சுடப்பட்டு வேலிக்கட்டைகள் போன்று உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டார்கள்.

ஆனால் இற்றைவரை எங்கு இவர்களின் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன என்பது யாருக்கும் புரியவில்லை. இவர்களின் உடலின் சில பாகங்கள் விலைக்கு விற்கப்பட்டதாகவும் மக்கள் இப்போது பேசுகின்றனர்.

அதன்பிறகும் அங்கு முகாம் அமைத்திருந்த விசேட அதிரடிப்படையினர் மக்களுக்கு கொடுத்த அட்டூழியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இதன் காரணமாக விடுதலைப்போரில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தங்களை இணைத்துக்கொண்டனர்.

இப்படுகொலைக்குப் பின் படுவான்கரைப்பிரதேசம் தனது சோபை இழந்து இன்றும் எமது பகுதி செஞ்சழிப்பு இன்றிக் காணப்படுவதைக்காணலாம். இக்கொலைகள் நடந்த இடம்

*தா.வேதநாயகம்*

மகிழடித்தீவு சந்தி இதனை தர்மத்தான் கிணற்றுச் சந்தி என்பார்கள். தர்மம் வழங்கப்பட்ட சந்தியில் அதர்மத்தின் மூலம் படுகொலைகள் இடம் பெற்றதை இன்றும் மக்கள் பேசிக்கொண்டே உள்ளனர்.

135 உயிர்களை இழந்து சோகத்தில் ஆழ்ந்திருந்த படுவான்கரைக்கு மீண்டும் ஒரு அதிர்ச்சி காத்து இருந்தது. இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறிய பின் 1990.06.11 இல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட ஈழயுத்தத்தின் பின் படுவான்கரைப் பிரதேசத்தைக் கைப்பற்றிய இலங்கை இராணுவத்தினர் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

பட்டிப்பளை, மணல்பிட்டி, மகிழடித்தீவு, அம்பிளாந்துறை எனப் பல்வேறு இடங்களில் தங்கள் முகாம்களை அமைத்து இருந்தனர். படையினர் ஆங்காங்கே தமது ரோந்து நடவடிக்கைகளைக் கால் நடையாகவும், துவிச்சக்கர வண்டிமூலமும் மேற்கொள்வர்.

இவர்கள் ஒவ்வொருநாளும் கொக்கட்டிச்சோலையில் இருந்து மண்முனைத்துறைக்கு ரோந்து சென்று வழமைபோல் உணவுப் பொருட்களை எடுத்து வருவது வழக்கம். அன்றும் 1991 ஆனிமாதம் 12ம்திகதி வழமைபோல் கொக்கட்டிச்சோலையில் இருந்து மண்முனை நோக்கி வந்த இராணுவத்தினரின் வாகனம் கண்ணிவெடியில்அகப்பட்டது. பல இராணுவத்தினர் உயிர் இழநதனர் அதனால் மகிழடித்தீவுக் கிராமமே அழிந்தது. 400வீடுகள் எரிந்து நாசமாக்கப்பட்டன. பொருட்கள் கொள்ளையிடப்பட்டன. 132பேர் ஈவிரக்கமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டனர். சடலங்களைக் கொண்டு குழிமூடப்பட்டது. பலஇளம்பெண்கள் தமது பெண்மையை இழந்தனர். சிலர் வீடுகளுக்குள் உயிருடன் எரிக்கப்பட்டனர்.

இதனால் இலங்கை அரசு எதனைச் சாதித்தது விடுதலைப்புலிகளை அழித்தனரா இல்லை. பல விதவைகளை உருவாக்கியுள்ளது. அத்துடன் பலரின் வாழ்வை அழித்துள்ளது. எமது மக்களின் பொருளாதாரத்தை அழித்தது. ஆனால் எமது விடுதலைப் போராட்டத்தை அழிக்கவில்லை.

இப்படுகொலைகள் ஒவ்வொருதமிழனையும் போராட்டத்தின் பால் ஈர்த்தது.

இப்படுகொலைகளைச் செய்துவிட்டு இலங்கை அரசு மௌனம் சாதித்தது. ஆனால் விடயங்கள் உலக அரங்கிற்குப் பரந்தது. கண்துடைப்புக்கு விசாரணைக் கமிசனை நியமித்தது இதன்மூலம் ஒரு அதிகாரி மாத்திரமே பதவி இழந்தார். விசாரணைக் கமிசனுக்கு விசாரணை வைக்கவேண்டிய நிலையே ஏற்பட்டது.

விசாரணைக்கமிசன் மூலம் படுகொலைகள் நிறுத்தப்பட்டதா இல்லவே இல்லை.

படுகொலைகள் செய்யப்பட்டவர்களும் எமது விடுதலைக்காகவே தமது குருதிகளைச் சிந்தியுள்ளனர். இவர்களும் எமது போராட்ட வரலாற்றில் நினைவு கூரப்பட வேண்டியவர்களே.

□□□



# பிணம் தின்னும் பசாசுகள் இனித்தப்ப வழியில்லை!

*-கவிஞர் செ.குணரத்தினம்-*

வடுவாக்கள்! தமிழர்களைத் தின்னவந்த
வல்லரக்கக் கூட்டங்கள்! - அடே
கெடுவான்கள்! உங்கள் தாய், தங்கையரை
கிழித்தழித்துத் தின்றாலென்ன?

ஈவிரக்கம் இல்லாத ஈனச்சாதி!
ஏனுமக்குப் புத்தர்கோவில்? - அடே
காவியுடை தரித்த உங்கள் கள்ளச்சாமி
கண்ணெதிரே புணரும் பேய்கள்!

புத்ததர்மம், கச்சாமி என்னும்கெட்ட
பொய்வேட தாரிகளே! - அடே
நித்தமெங்கள் தமிழர் குடல் பிய்த்தெடுத்து
நீங்கள் பசி ஆறும் நாய்கள்!

தாய்முலையில் பால்குடித்த பாலகரை
தூக்கிவீசித் தாய் மடியை - அடே
தாவிப் பிடித்திழுத்துத் தத்தாரி வேலை செய்த
தறுதலைக் கூட்டம் நீங்கள்!

கணவர்களைக் கட்டிப்போட்டு அவர்கள் முன்னால்
கற்பரசி மாதர்களை - அடே
புணர்ந்தவெறி நாய்க்குலமே
புழுவாய்ப் போங்கள்!

மான்மரையைச் சுட்டதுபோல் தமிழ்க்குலத்தை
மறித்தடித்துச் சுட்டு - அடே
தேன் தமிழர் பரம்பரையைத் தின்றீர் உம்மை
தீயொருநாள் தின்னும்!

மஞ்சளுக்காய்த் தாய்கழுத்தை வெட்டிப்போட்ட
மரமண்டைப் பரம்பரையே! - அடே
பிஞ்சுகளைத் துடிதுடிக்கத் தீயில்போட்ட
பிணந்தின்னும் பசாசுகளே!

யானைபோக மதிலுடைத்த பேய் மடையன்
சாகவில்லை என்பதனை - அடே
பேயர் நீங்கள் நினைவூட்டி நிற்பவர்கள்
பெருத்தபேய்க் கூட்டங்களே!

தெம்பிலிகள் விற்றவனும், தெருத்தெருவாய்
சுவீப் ரிக்கட் விற்றவனும் - அடே
எங்கள் மண்ணில் ஆமிகளாய் வந்து நின்ற
எமதர்ம ராஜாக்களே!

மகிழையடித்தீவு, வந்தாறுமூலை
மயிலந்தனை எல்லாம் - அடே
வெறிகொண்டு தமிழர்களைக் கொன்று தின்ற
விஷர் பிடித்த வேடர்களே!

என்ன செய்ய அப்போது எங்கள் பக்கம்
இருக்கவில்லை நல்ல பலம் - அடே
இன்று வந்து பாருங்கடா உமதெலும்பை
எண்ணியுங்கள் கையில்வைப்போம்!

மீனகத்துக் களம் கண்டால் மீண்டும் நீங்கள்
மினக்கட்டு வரமாட்டீர்கள் - அடே
தானாகத் தேடினீர்கள் பெரும்பாவத்தை!
தப்ப நீங்கள் வழியே இல்லை!

# நாம் முஸ்லீம்களுக்கு உரிய உரிமைகளை கொடுக்க தயாராகவே உள்ளோம்

8ம் பக்கத் தொடர்...

பதில்: பொதுவாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்கள் எங்களைச்சந்திக்கும் போது ஒன்று கூறுவார். பின்னர் தலைநகர் கொழும்பில் வேறு ஒன்றைக் கூறுவார். முஸ்லீம் மக்கள் மத்தியில் இன்னொன்றைக்கூறுவார் ஆகவே இதில் ஒன்றை நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். சட்டம் அதிகாரங்களைப் பொறுத்தவரை எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நாங்களே கையாண்டு வருகிறோம். இலங்கையைப்பொறுத்தவரை இரண்டு அரசாங்கங்கள் இருக்கின்றன. அதாவது சமாந்தரமான இரு அரசுகள் இயங்குகின்றன. எமக்கு என்று ஒரு தலைவர் இருக்கிறார். நாடு இருக்கிறது. கட்டமைப்புக்கள் உள்ளன. சட்டம் உள்ளது. நீதிமன்றங்கள், காவல்துறை உள்ளடக்கிய கட்டமைப்பு எம்மிடம் உள்ளன. இது வெளிப்படையானது.

வடக்கு கிழக்கு இணைப்பு எப்போதோ தீர்மானிக்கப்பட்ட வியடம். எமது போராட்டத்தின் அடிப்படை இணைந்தமாகாணமே. பிரிக்கும் சதியில் ஈடுபட்டுள்ள சந்திரிக்கா, அமைச்சர் ஹக்கீமை பயன்படுத்தலாம். அம்பாறை மாவட்டத்தில் இரண்டு முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். கட்சிக்கிடையிலான பிரச்சினைக்கு பிரசாரத்தைத் தேட வேண்டும் என்பதற்காக இது முஸ்லீம் தலைவர்களால்திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். சில வேளைகளில் இதன் பின்னணியில் சிங்கள தலைவர்கள் கூட இருக்கலாம், இதனை புலிகள் செய்ததாக கூறுகிறார்கள். புலிகள் செய்வதற்கான நோக்கம் என்ன. இந்த கட்டத்தில் இரண்டு முஸ்லீம் அப்பாவிகளை ஏன் கொல்லவேண்டும் என்பதை சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது தங்கள் தலைமைத்துவத்தை வளர்ப்பதற்கான திட்டம் . அரசியல் பிச்சைக்காரத்தனமே இது. வடக்கு கிழக்கு முஸ்லீம்கள் வடக்கு கிழக்கை சேர்ந்த ஒருவரே தலைவராக வரவேண்டும் என விரும்புகிறார்கள். தற்போது தென்பகுதியைச சேர்ந்தவர்களே தலைமைப் பொறுப்பில் உள்ளனர். இதனை அவர்கள் விரும்பவில்லை. இந்த நிலையில் தங்களது தலைமைத்துவதற்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்பதால் ஏட்டிக்குப் போட்டியான நிலைமையிலேயே அம்பாறை பிரதேசத்தில் பதற்றம் தோற்றுவிக்கப்படுகிறது. வடக்கு கிழக்கு இணையக்கூடாது. முஸ்லீம் மக்களுக்கு பாதுகாப்புத் தேவை என்று கேட்பதெல்லாம், தலைமைத்துவத்தை தக்கவைக்கும் முயற்சிகளே. முஸ்லீம்களுக்கு பொலிஸ்படை என்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயம் இதனையே முன்பும் செய்தார்கள். சிங்களப் படைகளும் முஸ்லீம் ஊர்க்காவல் படைகளும் சேர்ந்து தமிழ்ப் பிரதேசங்களில் பல படுகொலைகளில் ஈடுபட்டார்கள். படைச்சேர்ப்பு மீண்டும் தமிழ் மக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியிருக்கிறது. மீண்டும் படுகொலைகளுக்கு வழி வகுத்து விடுமா என எண்ணுகிறார்கள். இதில் முஸ்லீம் மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். முஸ்லீம் மக்களின் உரிமைகளை வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். எமது தலைவருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அடுத்து கிழக்கு மாகாணத்தில் தமிழர்களிடமிருந்த காணிகள் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. முஸ்லீம் மக்கள் எங்கும் நடமாடி வருகிறார்கள். எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கூட வர்த்தகத்தைச் செய்கிறார்கள் அங்கு உயிர்க்கொலை நடக்கவில்லை. முஸ்லீம் பிரதேசமான சம்மாந்துறையிலேயே கொலைஇடம்பெற்றிருக்கிறது. வடக்கு கிழக்கு முஸ்லீம்கள் தென்பகுதியைச் சேர்ந்த தலைமைத்துவத்தை நிராகரித்து விடுவார்களோ என்ற அச்ச உணர்வின் வெளிப்பாடே இது. தமிழ் மக்கள் மிகவும் பொறுமையாக இருப்பதால் கலவரம் ஏற்படவில்லை. முஸ்லீம் மக்கள் காவல்படையில் இணைவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும். இது மீண்டும் யுத்தம், கலவரங்கள் வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும். இது பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும். காலம் காலமாக போர் அனுபவம் எங்களுக்கு உண்டு. போரால் வந்த வெற்றிகளும் நன்மைகளும் தெரியும். போரால் ஏற்பட்ட துன்பங்களும் தெரியும். துன்பங்களை நேரடியாக உணர்ந்தவர்கள் ஆகவே மீண்டும் ஒரு ஆயுதக்கலாசாரம் உருவாக்கப்பட்டால் அதனால் ஏற்படும் விளைவுகளும் துன்பங்களும் எக்கச்சக்கமாக இருக்கும் . இதனைத்தவிர்த்து சிங்கள அரசின் சதிவலைக்குள் சிக்காது முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களுடன் ஒற்றுமையாக வாழவேண்டும். முஸ்லீம் மக்களின் பாதுகாப்பை நாம் உறுதிப்படுத்துவோம். எம்மால் பாதுகாப்பை தரமுடியும். முஸ்லீம் தலைவர்களுக்குப் பின்னால் சில ஆயுதக்குழுக்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. அவர்களால் வரும் பாதிப்புக்களுக்கு, கொலைகளுக்கு நாம் பொறுப்பேற்க முடியாது. இதில் முஸ்லீம் மக்கள் தெளிவாக இருந்து நல்ல தலைவர்களைத் தெரிவு செய்து அதிகாரங்களைப்பெற்று வாழ வேண்டும் என்பதே எமது விரும்பம்.

**கேள்வி: கிழக்கில் ஆயுதக்கொள்வனவு ஆயுதப்பயிற்சி தொடர்பாக வெளிவரும் செய்திகள் பற்றியும் இது உண்மையானால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றியும் கூறுங்கள்.**

பதில்: இது முஸ்லீம் மக்களுக்கே பாதிப்பை ஏற்படுத்தும். கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுடன் இணைந்து வாழ வேண்டிய நிலையிலேயே முஸ்லீம் மக்கள் உள்ளனர். வர்த்தகம் போக்குவரத்து என்பதற்காக இணைந்தே வாழவேண்டும். இந்த நிலையில் முஸ்லீம் மக்கள் மத்தியில் ஆயுதக்கலாசாரம் உருவாக்குவது அவர்களுக்கு நேரடித்தாக்கத்தை ஏற்படுத்தும். இதில் முஸ்லீம் மக்கள் விழிப்பாக இருந்து தீயசக்திகள் வளராது பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்களது பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த வேண்டியது எமது பொறுப்பு. இதில் எமது கடமைகளை தெளிவாக செய்வதற்குரிய விடயங்களில் உறுதியாக உள்ளோம். யுத்தத்தை மீண்டும் தொடங்காத அளவிற்கு நாம் ஒற்றுமையாக இருந்து செயற்படவேண்டுமே ஒழிய யுத்தத்தை தூண்டுபவர்களா இருக்க கூடாது. ஹக்கீம் போன்ற தலைவர்களின் வெளிப் படையான நோக்கம் யுத்தத்தை உடனடியாகக் கொண்டுவரும் உள்நோக்கமாக இருக்கிறது. ஆயுதக் குழுக்களை நிராகரித்து ஆயுதக்கலாசாரம் உருவாகாது தடுக்கும் வகையில் முஸ்லீம் மக்கள் செயற்பட வேண்டும். இதற்காக எந்த முஸ்லீம் தலைவர்களுடனும் பேச தயாராக உள்ளோம்.

**கேள்வி: முஸ்லீம்களின் தனியான அலகு தனியான இடைக்கால நிர்வாக சபை கோரிக்கைகள் பற்றி தங்கள் கருத்து என்ன?**

பதில்: நாம் முஸ்லீம்களுக்கு உரிய உரிமைகளை கொடுக்க தயாராகவே உள்ளோம். இதில் முஸ்லீம்கள் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை .தனி அலகை முற்றுமுழுதாக நிராகரிக்கிறோம். ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் பாரம்பரியமாக அம்பாறை மாவட்டம் தமிழர்களின் தாயகமாகவும் உள்ளது. எனவே தனி அலகாக இம்மாவட்டம் பிரிவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். ஆகவே முன்பும் பல தடவைகள் வெளிப்படையாக கூறியுள்ளோம். வடக்கு கிழக்கு இணைந்ததாயகத்தில் முஸ்லீம் உரிமைகள் தொடர்பான விடயங்கள் வரும் போது முஸ்லீம் தலைவர்களை அழைத்து கதைக்கத் தயாராக உள்ளோம். பேச்சுவார்த்தையில் 3ம் தரப்பாக கலந்துகொள்வதற்கு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம். ஏனெனில் பேச்சுவார்த்தை என்பது ஸ்ரீலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் தாக்கத்தை ஸ்ரீலங்கா அரசு உணர்ந்ததாலேயே ஏற்பட்டது. மூன்று தரப்பு இணைந்து பேசுவதாக இருந்தால் அது பேச்சுவார்த்தையாக இருக்காது. முஸ்லீம்களின் பிரச்சினை எங்களைப்பொறுத்தது. முஸ்லீம் விவகாரம் அதிகாரப்பகிர்வு என்று வரும்போது நாங்களும் முஸ்லீம் தலைவர்களும் பேசலாம். இதனை முன்பும் வெளிப்படையாக கூறியுள்ளோம். தனி அலகு கோரிக்கை மீண்டும் வன்முறை கலவரங்களைத்தூண்டும் முயற்சியாகும்.

**கேள்வி: திருமலை எண்ணைக்குதத்தை புலிகள் தாக்க இருப்பதாக லக்ஸ்மன் கதிர்காமர் இந்தியாவில் கூறியது பற்றியும் இந்தியாவை தலையிடுமாறு கோரியது பற்றியும் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பதில்: இன்றைய சமாதான சூழலில் எந்த வித தாக்குதல் திட்டமோ நோக்கமோ எம்மிடம் இல்லை. இது தவறான கருத்து. இந்தியா பேச்சுவார்த்தையை வரவேற்றுள்ளது. ஆகவே பிரச்சினையைத் தீர்க்குமாறு அனைத்து நாடுகளையும் கேட்டுள்ளோம். கதிர்காமர் சிண்டுமுடியும் வகையில் கருத்து



தெரிவித்துள்ளார். இந்தியா இதில் தெளிவாக இருந்து எமது உரிமைப்போராட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவையும் இருக்கிறது.

**கேள்வி: சமாதான சூழலிலும் ஸ்ரீலங்கா அரசு ஆயுதக்கொள்வனவு படைதிரட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறதே. இது போருக்கான ஆயத்தமாக கருதலாமா? போர் ஏற்பட்டால் என்ன விளைவு ஏற்படும். ?**

பதில்: ஸ்ரீலங்கா அரசு ஆயுதக்கொள்வனவில் ஈடுபட்டு வருகிறது அது பற்றி நாம் அலட்டிக்கொள்ளவில்லை. வெறும் இரும்புகளால் மட்டும் போரை நடாத்த முடியாது. யுத்த நிறுத்த சூழலில் 7600 படையினர் தப்பி ஓடிவிட்டார்கள். படையினர் போரை விரும்பவில்லை. ஆக்கிரமிப்பு யுத்தமாக கருதுகிறார்கள்.

## நாங்கள் புற்களல்ல

உயிர் உறைந்த சுவர்களில்
ஓங்கியடித்த் காற்றுச் சொன்ன சேதியை
நான் மௌனமாய்க் கேட்கின்றேன்

காலங்களைக்கடந்து,
காரணமின்றிச்செத்துப் போனவர்களின்
கடைசிநேரப் பிலாக்கணங்கள்
இன்றும் எங்கள் தெருக்களில்
இரவில் கேட்கின்றன.

நாய்கள் ஊளையிட்ட
நடுஇரவொன்றில்
யட்சர்கள் மிதித்துச்சென்ற
புற்கள்கூட நிமிர்ந்து பார்த்து
சபித்துத் துப்பியது
''காலனே இங்கேன் வந்தாய்
எதற்கெம் மக்களைக்கொன்றாய்
என்றேனும் நீயும் இப்படியே சாவாய்''

புற்களை மிதித்த
''பூட்ஸ் கால்கள்
உயிரற்ற தாயின்
மார்பினைச் சப்பிய
சிசுவையும் மிதித்தன
புல்லைப்போல் சிசு சபிக்கவில்லை

உற்றுப் பார்த்தது!
பேய்முகம் அணிந்தவனே
பீதி கொண்டோட உற்றுப் பார்த்தது.
அறுந்து தொங்கிய மார்பினில்
பாலை விடுத்து வன்மம் குடித்தெழுந்தது

அகதியாய்
உயிர்உறைந்த சுவர்களில்
சிசுவின் பார்வை
எழுதிப்போன செய்தியை
ஓங்கியடிக்கும் காற்றுச் சொல்கையில்
நான் மௌனமாய்க் கேட்கின்றேன்

''என் தேசத்தின் மீது படர்ந்த
வெறிநாய்களே உங்கள்
வெறியாட்டம் முடிக்க
வேங்கையாட்டம்
என் அண்ணன் அல்லது அக்கா
இல்லையேல் மாமா
இன்றே எழுவர்!
இன்றே எழுவர்!
சபித்துக் கொண்டே சகித்து வாழ
நாங்கள் புற்களல்ல! புற்களல்ல!
மறத்தமிழர்.

- திருக்கோவில் கவியுவன் -

# வீரத் தமிழ் இனத்துக்காய் மண்ணில் விதையானவன் லெப்.தயாசீலன்

இயற்கை எழிலும் கலை வளமும் இயல்பாய் அமையப்பெற்ற நகரமாம் மட்டுமா நகரிலே நெல் வயல்களால் நிரம்பப் பெற்றிருக்கும் ஒரு சிறு கிராமம் தான் கற்சேனைக் கிராமமாகும். அக்கிராமத்திலே கதிராமப்போடி தம்பதிகளுக்கு ஓர் வீரப்புதல்வன் 77-05-13 அன்று தாயின் மடியில் தவழ்ந்தான். சிவகுமார் எனும் இளமைப் பெயரோடு அந்தச் செல்வம் செழிக்கும் சிற்றூரிலே பெற்றோரின் அரவணைப்பில் வளர்ந்து வந்தான். இவ்வாறாக இவன் பள்ளிசெல்லும் பருவத்தை அடைந்து தனது ஆரம்பக் கல்வியை மட் -கற்சேனை அ.த.க.பாடசாலையில் பயின்று பின்பு மேற்படிப்பிற்காக மட்- அம்பிளாந் துறை கலைமகள் வித்தியாலையத்தில் பயின்று கொண்டிருந்தான். அப்போது 1989ம் ஆண்டுப் பகுதியில் இந்தியப்படை






கற்சேனைக் கிராமத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த போதும் எதிரிகளும் இந்தியப் படையோடும்,இலங்கைப் படையோடும் சேர்ந்து தமிழ் மக்களை அட்டுழியப்படுத்திக் கொண்டிருந்தான். அந்த நேரங்களில் இவனது குடும்பம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கி வந்தது. இதை அறிந்த எதிரி இவனது அம்மாவைப் பிடித்துச் சித்திரவதைப் படுத்தினான். இதை எல்லாம் அவதானித்துக்

**மு. ப. இந்துஜன்.**

கொண்டிருந்தான் "சிவகுமார். சம்பளத்திற்காகவென்று ஆசை கொண்ட இனவெறியாட்களின் ஆக்கிரமிப்பு எங்கும் படிப்படியாக நடந்து வந்தது. அப்பாவித் தமிழ் மக்களைச் சந்திகளில்,கிராமங்களில் தனது வெறியாட்டத்தால் கொன்று குவித்தான். ஆக்கிரமிப்புச் சம்பவங்களில் இதுவும் ஒன்று. அம்பிளாந்துறை தாமரைப்பூச் சந்தியில் ஓடிச் சென்ற மக்களைச் சுட்டு ஒன்றன்மேல் ஒன்றாக அடிக்கி டயர் போட்டு எரித்தான். கிராமம் கலங்கியது. அது மட்டுமல்ல தமிழர்களின் வழிபாட்டுக் கடவுளான முருகன் ஆலயம் ஒன்றும் இனவெறியானது. கைகளால் பதம்பார்க்கப்பட்டது. இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த கிராம மக்களும் சிவகுமாரும் துடிதுடித்தனர்.

### உன் வார்த்தை கேட்டால்

தென்தமிழீழத்தில் பிறந்த சிற்பி
தமிழினத்தின் மானத்தை காக்கவென
தானைத் தலைவன் சேனை தனில்
இணைந்த செம்மல்

வானமே வழி விடு என அண்ணாவின்
வார்த்தைகளென் காதில் கேட்கட்டும்.
நட்சத்திரப் பூக்களே கொஞ்சம் விலகுங்கள்
என்னண்ணன் திருமுகத்தைப் பார்க்க வேண்டும்.

சுட்டெரிக்கும் சூரியனும் சுடுகலன் தூக்கும்
சுட்டு விரலும் துணையாய் பொறிவெடி காக்கும்
உன் வார்த்தை கேட்டால் உலகமே பணியும்.

கரிகாலன் படையில் வழிவந்தவன் அண்ணா
அயராது உழைத்து உயர் வீரம் படைத்தாய்!
விடிகின்ற ஈழம் உந்தன் வீரத்தைச் சொல்லும்.

*அசோகன்*
*விநாயகபுரம்*

இராணுவம் கிராமங்களைத் துன்புறுத்திய இன்னல்களின் மத்தியில் வாழ்ந்த மக்களின் துயரத்தைத் தீர்ப்பதற்காக 1995ம் ஆண்டு தை மாதம் தன்னைப் போராட்டப் பாதையிலே இணைத்தான்.

பள்ளிப்படிப்பதனைப் பாதியில் இடைநிறுத்தி வீரமுடன் அன்னியப்படைக்கு எதிராய்ச் சீறி எழுந்தான். தனது சுயநலங்களைப் பாராது வீட்டார்களின் துன்ப துயரங்களைப் பாராது தமது மக்களுக்காய் விடிவுகாண வேண்டி போர்க்களம் புறப்பட்டான். தமிழர்களின் தாய் நிலம் ஆக்கிரமிக்கப்படும் போது தலைவரின் வழிநின்று தோளோடு தோள் சேர்ந்து தமிழீழ வரலாற்றிலே தடம் பதித்து நின்றான். 1995ம் ஆண்டு 04ம் மாதம் தனது பயிற்சியை முடித்து தயாசீலன் எனும் புனைப்பெயருடன் வெளியேறி தனது பாசறைப் போராளிகளோடு அளவளவாகப் பழகி பம்பல்கதைத்து

## காலத்தால் அழியாத மாவீரர் வரலாறு

தனது பொறுப்பாளரின் சொல் கேட்டு பல இடங்களில் எதிரியை வீழ்த்தி பலபல சமர்களைச் செய்தான். அந்த வகையில் வன்னிப்பெருநிலம் காப்பதற்காகவென்று மூத்த தளபதி கேணல் கருணாஅம்மானினால் கட்டளை இடப்பட்டது. அம்மானின் கட்டளைக்கு அமைவாக 1998ம் ஆண்டு வன்னிக்களம் சென்றான். அங்கும் பல சண்டைக்களங்களில் வெற்றிகண்டு தனக்கு விழுப்புண் ஏற்பட்ட போதும் கடுமையான சண்டைசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதிலும் களையாது தன் மக்களுக்காகத் தனது உயிரையும் விடவேண்டும் என்று போராடினான். எங்கள் தாயக மீட்புப்போரிலே தாய்ச்சமராகவும் தமிழீழம் இந்த மண்ணில் உருப்பெறுவதை யாராலும் தடுத்து விட முடியாது. என்பதையும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு மட்டுமல்ல இந்த உலகிற்கே மீண்டும் ஒருமுறை எடுத்துரைத்த சமராகவும் விளங்கும் ''ஜயசிக்குறு''எதிர்ச்சமர்க் களத் திலே எங்கள் வீரர்கள் பெற்றுத்தந்த அளப்பெரிய வெற்றிகள்ஒவ்வொன்றின் பின்னாலும் இவனும் சென்று பல வெற்றிச் சமர்களைக் கண்டான். வீரத்தமிழர்களின் தாய் மண் மீட்கவென்று சென்றவன் 1999-05-17ம் திகதி அன்று லெப்டினன்:- தயாசீலன் தனது இறுதி மூச்சை முடித்தான். விடுதலைக்கு வித்திட்டுச் சென்று சுதந்திரப் பூமியை உருவாக்கு! எம் தேசம் வளரவைத்தவர்கள் இந்த மாவீரர்கள். அந்த வரிசையிலே இவனும் உறங்கிக் கொண்டான். வெறும் மலராய் சுகங்களை விட்டு சுமைதாங்கிய தோழமைகளின் இறுக்கமும் நெருக்கமும் எம் தேசத்தின் விடிவுக்கானது.

## சென்றவாரத் தொடர்ச்சி

158. ஏ.எம்.டபிள்யூ. சென்விரத்ன தலைமையிலான சிறீலங்கா விசேட அதிரடிப்படையினர் சத்துருக் கொண்டான் பகுதியைச் சுற்றி வளைத்து 180 அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழித்த ''சத்துருக் கொண்டான் படு கொலை'' எப்போது நடத்தப்பட்டது?

**09~09~1990இல்**

159. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதலாவது மரபுவழிப் படையணியானது 10-04-1991ல் உத்தியோக பூர்வமாகத் தோற்றம் பெற்றது. அப் படையணியின் பெயர் என்ன?

**சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி**

160. விடுதலைப் புலிகளின் முதலாவது தாக்குதலணித் தளபதியான சீலனைக் (சாள்ஸ் அன்ரனி) காட்டிக் கொடுத்த சிறீலங்காப் பொலீஸ் அதிகாரி 1984-05-04 இல் மீசாலையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டான். அவன் யார்?

**பொன்னையா சுப்பிரமணியம்**

161.''ஈழத்தின் முதல் தமிழ்ப் புலவர்'' என அறியப்படுபவர் யார்?

**ஈழத்துப் பூதன் தேவனார்**

162. ''சொற் பிறப்பு ஒப்பியல் அகராதி'' என்ற ஆய்வு நூலை எழுதி வரும், ஜெர்மெனிய அரசால் நினைவு முத்திரை வெளியிட்டுக் கௌரவிக்கப்பட்டவருமான ஈழத் தமிழறிஞர் யார்?

**ஞானப்பிரகாச சுவாமிகள் (சுவாமிநாதபிள்ளை~ வைத்திலிங்கம்)**



163. 1956இல் தமிழர் சிங்களக் காடையர்களால் படு கொலை செய்யப்பட்டாலும், இலங்கைத் தீவிற்குப் பிரித்தானியா சுதந்தி ரத்தை வழங்கிய பின் தமிழீழம் மீது சிங்கள தேசம் திட்டமிட்ட ரீதியில் முதன் முதல் எப்போது ''இன அழிப்பு ''நடவடிக் கையை மேற்கொண்டது என்று கூறப்படுகின்றது?

**22.05. 1958இல்**

164. தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளுக்குப் பெருமை சேர்த்த தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இடம் பெற்ற மிகப் பாரிய தரையிறக்கமான ''குடாரப்புத் தரையி றக்கம் '' எப்போது நடத்தப்பட்டது?

**26~03~2001இல்**

165. தமிழீழத் தாயகத்தை இரண்டாகப் பிரிக்கும் நோக்குடன் 28-08-1991 தொடக்கம் 26-09-1991 வரையான 28 நாட்கள்

### "தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்"

(✍ கோமளமைந்தன்)

மணலாறில் சிறிலங்காப் படையினரால் மேற்கொள்ளப்பட்டு புலிகளால் முறியடிக்கப்பட்ட படை நடவடிக்கையின் பெயர் என்ன?

**''மின்னல் நடவடிக்கை''**

*(தொடரும்)*

# தமிழ் இளைஞர்கள் சிறிலங்கா பொலிஸ் படையில் இணைவதை நிறுத்துமாறு புலிகள் அறிவிப்பு

(நமது நிருபர்)

தமிழ் இளைஞர்கள் சிறிலங்கா பொலிஸ்படையில் இணைந்து கொள்வதை உடன் நிறுத்திக் கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை அரசியல்துறை ''தமிழீழ இளைஞர்களே'' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

எமது இனத்தின் விடுதலைப் போராட்டம் பலம் அடைந்து உலகமே வியக்கும் இராணுவ சக்தியாக சர்வதேச அரங்கில் தமிழர் தம் உரிமைதன்னை தமிழீழ விடுதலைப்புலிகள் பிரதிநிதித்துவப்படுத்தும் இவ்வேளை தமிழ் இளைஞர்களில் ஒரு சிலர் சிங்களப் பொலிஸ் படையில் இணைவது வேதனைக்குரிய விடயமாகும்.

தமிழ் இளைஞர்கள் சிங்களப்படையில் இணைய வேண்டாம் என நாம் முன்னர் அறிவித்திருந்தோம். அதனையும் மீறி இணைவதென்பது எமது விடுதலைப் போராட்டத்தை புரிந்து கொள்ளாத் தன்மையைப் புலப்படுத்தும் என்பதால் சிங்களப் பொலிஸ் படையில் இணைவதை உடன் நிறுத்தி எம் தலைவரின் காலத்தில் ஓர் அணியாகத் திரள்வோம் சுதந்திரம் மீட்க இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முஸ்லிம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கென பொலிஸ் படையில் சேர்க்கப்படும் தமிழ் பேசும் இளைஞர்கள் தொடர்பாக முஸ்லிம் புத்திஜீவிகளும் கல்விமான்களும் முதலீட்டாளர்களும் தெளிவாகவும் தூர நோக்குடனும் சிந்திக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படும் துண்டுப் பிரசுரமொன்றையும் வெளியிட்டுள்ளனர்.

## தாந்தாமலையில் முத்தையா முனிவர் அருள் ஆசி!

(கே.எம்.வாசகர்)

கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயத்தில் அமைந்துள்ள குகையில் தாந்தாமலை தவமுனிவர் முத்தையா அவர்கள் தற்போது தங்கியிருந்து நாடிவரும் பக்தர்களுக்குத் தாந்தாமலை புண்ணியதீர்த்தம் வழங்கி ஆசீர்வதித்து வருகிறார். நாட்டில் நிரந்தரச் சமாதானம் ஏற்பட்டு தமிழ் இனம் சுதந்திரமாகத் தனக்கொரு அரசியல் அந்தஸ்துடன் கௌரவமாக வாழும் காலம் மிக விரைவில் வரவேண்டும் என முனிவர் அவர்கள் தினமும் தவம் செய்து வருகிறார். நாடிவரும் பக்தர்களுக்கு அறிவுரைகளைக் கூறி தினமும் முருகக் கடவுளை நினைத்து அதிகாலையில் 10நிமிட நேரம் தியானம் செய்யும் படியும் கூறுகிறார். முனிவரின் குகைக்கு முனிவர்கள், தேவர்கள், அரசர்கள் எல்லோரும் வருவார்கள் என்றும் தாந்தாமலை உலக பிரசித்தி பெற்ற எல்லா விதமான அபிவிருத்தியும் அடையப் போகிறது என்றும் உலக மக்கள் அனைவரும் தாந்தாமலைக்கு யாத்திரை வருவார்கள் என்றும் கூறுகிறார். குகையின் சுற்றாடலை துப்பரவு செய்து புனிதமாக்கும் பணிகளில் பக்தர்கள் பலர் ஈடுபட்டு வருகிறார்கள். பக்தர்கள் நூற்றுக் கணக்கில் தங்கியிருந்து தியானம் செய்யக் கூடியவகையில் குகையுடன் சேர்த்து மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. தினமும் அனேக பக்தர்கள் குகைக்குச் சென்று முனிவர் அவர்களைத் தரிசிப்பதுடன் தாந்தாமலைத் தீர்த்தம் பெற்று ஆசீர்வாதம் பெற்றுச் செல்கிறார்கள் கடந்த 28 வருடங்களாக தாந்தாமலையின் புனித தீர்த்தத்தின் மூலம் ஆயிரக்கணக்கான பக்தர்களின் மனக்குறைகள் நிவர்த்தி செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

### வருடாந்த உற்சவம்

அம்பிளாந்துறை ஞானசக்தி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்காரத்திருவிழா இன்று சனிக்கிழமை 6ம்திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 10ம் திகதி புதன்கிழமை காலை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுறும்.

## கஞ்சிகுடியாற்றில் நீர்ப்பாசனத்திட்டம்

(அரியம்)

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள கஞ்சிகுடிஆற்று நீர்ப்பாசனத்திட்ட புனரமைப்புப் பணிகளின் ஆரம்ப நிகழ்வு கடந்த செப்டெம்பர் 1ம் திக்தி நடைபெற்றது. மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி த. ரமேஸ் இதனை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் நிஷாம், அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் வாவா உட்பட திட்ட அதிகாரிகள், அரச அதிகாரிகள் பொதுமக்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

உலக வங்கியின் அனுசரனையுடன் வடக்கு கிழக்கு சமூக அபிவிருத்தித் திட்டத்தினால் இவை மேற்கொள்ளப்படுகின்றன.

## போடியார் பொறிவெடி

தமிழின உயிர்க் கொலை நாளாக செப்டெம்பர் 5 பிரகடனம்

-செய்தி-



பிரகடனப்படுத்துவதோட மட்டும் நிக்காம எங்கட சொந்த மண்ணில வந்தான் வரத்தானுகள் இனிக் கொலை செய்யாமல் இருக்க நம்மட பலத்த கூட்டவும் வேணும் மக்காள்..

## தமிழின உயிர்ப்படுகொலை நினைவாக கி. பல்கலைக்கழகத்தில் மாபெரும் கூட்டம்

(அரியம்)

தமிழின உயிர்ப்படுகொலை தினமான செம்டெம்பர் 05ம் திகதி வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் மாபெரும் நினைவுக் கூட்டத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தலைமையில் இடம்பெறும் நினைவுக் கூட்டத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் உரையாற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கந்தப்போடியும் கலந்தர்லெவ்வையும்

**கந்தர்:-** செப்டெம்பர் ஐஞ்சாம் திகதி தமிழின உயிர்க்கொலை நாள் கேள்விப்பட்டயா மச்சான்....

**கலந்தர்:~** ஓம் மச்சான்... மட்டக்களப்பு மாவட்டத்தில இதுவரை காலமும் ஒட்டுமொத்தமாக கொல்லப்பட்ட தமிழர்கள நினைக்கிற நாள்தானே.

**கந்தர்:-** சிங்களப்டை, இந்தியப்படை, நாய்ப்டை, உங்கட ஊர்காவல்ப்படை, பச்சோந்திப் படை எல்லாத்தாலையும் கொல்லப்பட்ட எங்கட ஆக்கள நினைக்கிற நாள்தான் அது...

**கலந்தர்:~** மட்டக்களப்பு மக்கள் பெருமன்றம் செய்த மகத்தான காரியத்த பாராட்டோனும்..

**கந்தர்:-** தமிழன் என்ற ஒரே காரணத்தாலதானே இந்த நாசமறுவானுக்ள் எல்லாம் எங்கட சனத்த அழிச்சவங்க...

**கலந்தர்:~** இனியெண்டான இப்படியான கொலைகள் வராம நாம் விழிப்பாக இருக்கோணும்...

**கந்தர்:-** எங்கட படையக் கூட்டச் சொல்லிற இப்படியான கொலைகள தடுக்கத்தானே...

## இனவெறித் தாண்டவத்தால்...

அங்கங்கு அகதியாய் ஓடிட்டாங்கள் நீங்களே ஏதாவது செய்யுங்கள் என்று. எல்லாரையும் மளமளவென்று லொறியில ஏத்திக் கொண்டுபோய் புல்டோசரால கிண்டிப் போட்டு எல்லாரையும் தூக்கிப் போட்டிட்டு புல்டோசரால மண்ணொதிக்கி மூடினாங்கள்.

நான் என்ர மனிசி பிள்ளையளத் தேடி பொலனறுவை ஆஸ்பத்திரிக்குப் போனன். போய் எல்லா வாட்டிலையும் தேடிப் பாத்தன். ஒரு இடத்திலையும் ஒருத்தரையும் காணல்ல. அங்க நிண்ட சிங்கள நேஸ் பேசினாள். ஒரு ஐம்பது ரூபாயைக் கையுக்க வைச்சன். யாரைப் பாக்க வந்ததெண்டு கேட்டாள். பிள்ளையளையும் மனிசியையும் எண்டு சொல்லி நடந்த சம்பவத்தையும் சொன்னன். மளமளவெண்டு குழந்தைப் பிள்ளை வாட்டுக்குள் கூட்டிக் கொண்டு போனாள்.அங்க போனால் கட்டில் ஒண்டில என்ர பிள்ளையள் ரெண்டும் இருந்து பிஸ்கேட் சாப்பிட்டுக் கொண்டிருக்குதுகள். பயந்து ஏம்பளிச்சுக் கதைக்க முடியாமல் என்னைக் கண்டதும் விம்மி விம்மி அழுதார்கள்.


பிள்ளையளத்தூக்கிட் டுத் தாயைத் தேடினன். கொஞ்சப் பேரைப் பேராதனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பியாச்சு எண்டு அந்த நேஸ் சொன்னார். பேராதனைக்குப் போய்த்தான் என்ர மனிசியைக் கண்டுபிடிச்சன். பதின்நாலுநாளாய் அலைஞ்சுதான் கண்டு பிடிக்க முடிஞ்சது. பேராதனை ஆஸ்பத்திரியிலேயும் வெட்டுக் காயத்தோட வந்த ரெண்டுபேர் செத்திட்டாங்கள் என பொன்னையா யோகராசா சொல்லிக் கொண்டிருந்தார்.

எங்களையெல்லாம் ஒருத்தரையும் மிஞ்சாமல் வெட்டுறதுதான் அவன்ரபிளான். வெட்டி முடிய தாங்கள் வெட்டிக் கொல்லல்ல எண்டு மறைக்க நல்ல பிளானாய் செய்தான். கரடிவைச்ச குளத்தில இருக்கிற பெரிய காம்காரண்தான் பிளான் குடுத்திருப்பான். புனாணை ரெயில்வே ஸ்ரேசன் காம்பில இருந்து வந்த ஆமி வெட்டிப் போட்டுப் போக, வெட்டவந்தவர்களை விரட்டியடிக்கிற மாதிரி இலுக்குப் பாம் காம்ப்பில இருந்து கவேட்வேக்கில் அடிச்சுக் கொண்டு வந்தது. பின்னால படபடெண்டு ஆமி யெல்லாம் சுட்டிட்டு வந்து கிராமத்துக்க புகுந்து மிச்சமாய்க் கிடந்த வீடெல்லாம் கொழுத்தினாங்கள். கொழுத்தி முடிய கரடிவைச்ச குளம் காம்ப்பில இருந்து வந்த லொறியில வெட்டினாக்களின்ர சவத்தை யெல்லாம் தூக்கி ஏத்திட்டுப் போனாங்கள். நாங்கள் தப்பியோடிப் போய் ஒளிச்சிருந்து எல்லாத்தையும் பாத்தம். என்ன மாதிரி பிளான் பண்ணி செய்தாங்கள் பாவிகள் என காளிமுத்து குணசீலன் என்பவர் கோபம் பொங்கக் கூறினார்.

ஒன்பது ஆண்டுகளாகியும் கொலை செய்யப்பட்ட இந்த மக்களுக்கும், இந்த மக்களது உறவுகளுக்கும் எந்த நீதியும் கிடைக்கவில்லை. நீதவானுடைய முயற்சியில் அடையாள அணிவகுப்பு கரடிவைச்ச குளம் காம்ப்பில நடந்தது. அந்த அணிவகுப்பில் 24 இராணுவத்தினர் கொலையில் சம்பந்தப்பட்டவர்களாக மக்களால் இனங்காணப்பட்டனர். இனங்காணப்பட்டும் எந்த நடவடிக்கையினையும் இந்த இராணுவத்தினர் மீது எடுக்கவில்லை. மின்னேரி, மட்டக்களப்பு என விசாரணைக்குரிய நீதி மன்றங்கள் மாற்றப்பட்டு இறுதியில் கொழும்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. வறுமைப் பட்டு நொந்து கெட்டு நிர்க்கதியாய் நிற்கும் மக்களால் கொழும்புக்குச் செல்ல முடியுமா? இராணுவத்தினரைத் தப்ப வைக்கும் முயற்சியில் சிங்கள அரசு வெற்றிகண்டுள்ளது. ஆனால் புனாணை மயிலந்தனையில் வெட்டிக் கொல்லப்பட்ட மக்களின் கதையும், காயங்களோடு தப்பியோடிய மக்களுக்கான நீதியும், குழி தோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டது. தங்கள் கிராமத்திற்கு மீண்டும் சென்று வாழ விரும்பும் மக்களுக்கு அதற்கான எந்த உதவிகளும் செய்யவில்லை.

கல்

## 31ம் நாள் நினைவஞ்சலி!




### அமரர் கிருஷ்ணபிள்ளை புஸ்பநாதன் (ராசா)

அன்பும், பண்பும், அறிவுமுள்ள அனைவரையும் நேசிக்கும் பண்புமிக்க அன்பன் புஸ்பநாதன் உலகைவிட்டு அகன்றாலும் அவன் நினைவு எங்களது நெஞ்சத்தை விட்டென்றும், நீங்கிவிடாது நித்தமும் எம்மோடு என்றும் வாழ்வான். துஞ்சி விட்டான் என்று நாங்கள் எண்ண்வில்லை தூங்குகிறான், அவனோரி நாள் விழித்தெழுவான்

*இங்ஙனம் -புஸ்பராணி (மனைவி)*

மக்கள்:- விஜிதா, நஜிதா, சுஜிதா
மற்றும் கும்பத்தினர்கள்.
எருவில்







**தென் தமிழீழத்தில் தமிழின உயிர்ப்படுகொலைகளின் உள்ளத்தை உருக்கும் காட்சிகள்**





# அலையின் பார்வையில்



மட்டக்களப்பிலிருந்து தரைவழியாக வாகனம் மூலம் வன்னிக்கு செல்லும் பெண் போராளிகளின் ஒரு பகுதியினர்.



அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடியாறு நீர்ப்பாசனத் திட்டத்திற்கான புனரமைப்புப் பணிகள் நெகோட் மூலம் செப்டெம்பர் 1ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போது.




அண்மையில் தமிழ்அலை, நித்திப்பதிப்பகத்தினை பார்வையிட வருகைதந்த பட்டிப்பளை அ.த.க. பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும்.

## கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் நடாத்தும்

தமிழ்அலை 25 ஆவது இதழ் விமர்சன ஆய்வுக் கருத்தரங்கு

(இதுவரை வெளியான 25 இதழ்களுக்கும்)

**இடம்:- மட்டக்களப்பு தேவநாயகம் கூட்டுறவுக் கலையரங்கு**

**காலம்:- 20.09.2003 சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு**

**தலைமை:- திரு.இரா. துரைரத்தினம்**

(கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத் தலைவர்)

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம்


# கிழக்கிலங்கையில் தேரோடும் ஒரே ஆலயம்.

தமிழ்அலை 24ஆவது இதழ் தேரோட்ட சிறப்பிதழாக வெளிவரும்

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம்

# தேரோட்டப் பெருவிழா

தேரோட்டம்/திருவேட்டை 14.09.2003

தீர்த்தோற்சவம் 15.09.2003

14.09.2003 ஞாயிறு மாலை 3மணி

அனைவரும் வருக! அருளினைப் பெறுக!



இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை நித்தி பதிப்பகத்தில் 06.09-2003 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

F:\computer\05.09.2003 Tamilalai.cdr